
Abrana Jewellers



நகைசேமிப்புத் திட்டத்தில் இணைந்து அதிஷ்டசாலிகள் ஆகுங்கள். அதிஷ்டசாலி தொடர்ந்து பணம் கட்டத் தேவையில்லை.

7, rue Cail 75010 Paris Tel: 01 42 05 18 05



ASI Boucherie



ஆடு முழுதாகவே அல்லது அரையாகவோ கிலோ 3,90€ சிறப்பு விலை

195 rue du fbg st-denis, 75010 Paris
Tel: 01 42 05 23 78
M°: La Chapele Gare du Nord



பிரான்ஸ் பதிப்பு

# ஈழமுரசு®

முரசு 01 | 15 - 31 மே 2015 | முழக்கம் 01



பிரான்ஸ் செய்திகள்
அரச நிர்வாக தகவல்கள் தமிழில்
www.ParisTamil.com
பரிஸ்தமிழ் ParisTamil.Com .கொம்



BHARATH
51,67 Rue Louis Blanc
75010 Paris - France
01 42 09 35 84
01 58 20 06 20

Spécialitées Indienne et Srilankaise

www.restaurantbharath.com

www.cafe-bharath.com


## மீண்டும் தொடங்கும் இலக்கு நோக்கிய பயணம்

யாருமற்ற ஓர் அனாதை உணர்வு
எல்லாம் இழந்துவிட்ட ஒரு வெறுமை..
இன்றுவரை தொடரும் இழிநிலை..
ஆயினும்
சும்மா போர்த்துத்
தூங்கிக் கிடந்தோமாகின்
எம்மை நாமே
ஒரு நாளில் தொலைத்து விடுவோம்.
எழுவோம்!!
இது மாற்றிட இன்றே
எழுவோம்!

## முள்ளிவாய்க்கால்: விடுதலைப்போரின் முடிவிடம் அல்ல இன அழிப்பின் உச்சம் நிகழ்ந்த மண்


V.T Cash & Carry
www.vtcashcarry.com
11 rue cail, 75010 Paris,
Tel: 01 40 05 07 18 , Fax: 01 40 05 06 92
E-mail: vtsuperstore@organge.fr

S.P TRADERS



உங்கள் மளிகைத்தேவைகள் அனைத்தும் ஒரே கூரையின் கீழ்!
197,Rue Faubourg Saint-Denis
Tél : 01 40 36 53 99 75010 PARIS
M° : Gare du Nord / La Chapelle

பரிஸ் லா சப்பலில்
Ambaal Store



பல் பொருள் அங்காடி
Tél: 01 42 05 41 85
192, rue du Fbg.st.Denis 75010 Paris

கோபாலன் & கோ.





72 rue Louis Blanc, 75010 Paris
M°: La chapelle ou Gare du Nord
Tél.: 01 46 07 11 10 | Fax: 01 46 07 13 03

VS CO Cash & Carry
www.vsco.com
197, rue du Fbg St.Denis - 75010 Paris
Tél.: 01 40 34 71 65
Fax: 01 53 26 72 04

-30%* Sur les Collections optiques et solaires

Offre spéciale
Valable jusqu 'au 15.06.2015

கண் பார்வைக்கான
கண்ணாடிகளிற்கும்
உங்கள் அழகை
மெருகூட்டும்
நவீன அழகியற்
கண்ணாடிகளிற்கும்




திங்கள் முதல் சனி வரை
10 மணி தொடக்கம் 19:30 மணிவரை
உங்களை அன்புடன்
வரவேற்கின்றோம்

NORD OPTICAL




*நிபந்தனைகளிற்குட்பட்டது
Voir condition en magasin

18, rue demarquay - 75010 Paris
(La Chapelle / Gare du Nord)

ஈழமுரசு®
mediacentre ஊடகமையம்
முரசு 01 | 15 – 31 மே 2015 | முழக்கம் 01



எமது போராளிகளின் தனிப்பட்ட நேர்மை ஒழுக்கம் - வழிகாட்டும் வகையில் வாழும் வாழ்க்கை - இவையே மக்கள் எம்மீது மரியாதை வைக்கக் காரணமாகும்.

– தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன்

# முள்ளிவாய்க்கால்: விடுதலைப்போரின் முடிவிடம் அல்ல இன அழிப்பின் உச்சம் நிகழ்ந்த மண்

தாயகத்தில் இருந்து **வீரமணி**



தமிழர் தாயகத்தில் சிங்கள தேசத்தின் கோரத் தாண்டவம் இடம்பெற்று ஆண்டுகள் ஆறு கடந்திருக்கின்றன. ஆனாலும் ஆறவில்லை எங்கள் வலிகள். ஆறுவதற்கானவையா அந்தத் துயரங்கள்? ஆற்றுவதற்கானவையா அந்த அந்தரிப்புக்கள்? இப்போது எல்லாமே நடந்து முடிந்துவிட்டதைப் போன்று ஏங்கிக்கொண்டிருக்கின்றது எங்கள் இனம். ஏற்க எவரும் இன்றி ஏதிலியாக இருக்கின்றது தமிழினம். மேய்ப்பார் இல்லாத மந்தைகள் போன்று உதிரிகளாக உடைக்கப்படுகின்றான் தமிழன். அழிவைத் தந்த சிங்களவன் இன்றும் எங்களை அழிக்க ஆர்ப்பரிக்கின்றான்.

ஆறு ஆண்டுகளின் பின்னர் முள்ளிவாய்க்கால் முற்றத்தை நாங்கள் எட்டிப் பார்க்கின்றோம். பார்க்கும் இடமெங்கும் சதைப்பிண்டங்கள், வரண்ட தேசத்தில் குருதி ஆறு. திரும்பும் திசையெங்கும் உயிரற்ற உடலங்கள். கால் வைத்த இடமெங்கும் காயத்துடன் தமிழர்கள். உணவின்றி, உடையின்றி தவித்தனர் தமிழர்கள். ஆனாலும் எங்கோ ஒரு மூலையில் புலிவீரர்களின் துப்பாக்கிகள் சுட்டுக் கொண்டிருந்தன. இறுதி மணித்துளிகளிலும் அவர்கள் நின்று தாய்நில மீட்பு யுத்தம் நடத்தினர். உயிரைக் கொடுத்தாயினும் எமது இனமானம் காப்போம் என்ற தீரத்துடன் நின்றனர் புலிகள். தமிழர் தாயகத்தின் கட்டமைக்கப்பட்ட இறுதி நிலப்பகுதி ஆறு ஆண்டுகளுக்கு முன்னர் இதே தினத்தில் இப்படித்தான் இருந்தது.

ஆறு ஆண்டுகளுக்கு முன்னர் நடந்த இந்த அராஜகத்தை நூறு ஆண்டுகள் சென்றாலும் தமிழினத்தால் மறக்க முடியாது. அதே ஆண்டில் தமிழரின் சோகமும் ஆறாது. சிங்களவன் ஏற்படுத்திய காயத்தை ஆற்றுவதற்கு எந்த தேசத்திலும் மருந்து இல்லை.

சொந்த நிலத்தில் குந்தியிருக்க இடம் கேட்டதற்காக தமிழர்கள் கொத்துக் கொத்தாக கொன்று குவிக்கப்பட்டனர். பாட்டன், முப்பாட்டன் காலத்தில் முடிக்குரிய நாடாகத் திகழ்ந்த தமிழீழத்தில் தலையீடற்ற தனியாட்சி கேட்டதற்காக தமிழர்கள் அடித்து விரட்டப்பட்டனர். எல்லாளன், சங்கிலியன், பண்டாரவன்னியன் ஆண்ட நிலத்தில் எமது ஆட்சியை உறுதிப்படுத்துவதற்காக நாங்கள் போராடியபோது சிங்களம் எங்களைக் கொன்றொழித்தது. முள்ளிவாய்க்கால் வரை எங்களைத் துரத்திச் சென்று எமது ஆயுதப் போராட்டத்தை மௌனிக்கச் செய்தது.

முள்ளிவாய்க்கால் என்பது தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் முடிவிடம் அல்ல. இந்த நிலம் எமது தாய்நிலம். முப்பது வருடப் போராட்டத்தின் அடையாளம். தமிழினத்

(04ம் பக்கம் பார்க்க)












ஈழமுரசு

“உண்மையின் முன்னால் நடுநிலைமை என்பது இல்லை”

“MEDIACENTRE”
JOURNAL TAMOUL
bimensuel **Gratuit**

93700 Drancy,
France
Tel: 00 33 970 464 464
Fax: 00 33 140 059 516

இணையத்தளம்
www.eelamurazu.com
ஆசிரியர்பீடத் தொடர்புகட்கு:
@: eelamurazu@gmail.com
விளம்பர விநியோகத் தொடர்புகட்கு:
@: eelamurazuadm@gmail.com

**Le Président:** P.Velupillai
**தலைவர்:** ப.வேலுப்பிள்ளை

**Redacteur:** K.Jeisanthar
**பொறுப்பாசிரியர்:** கி.ஜெய்சந்தர்

**ஆசிரியர் பீடம்**
எழுவான் (தென்தமிழீழம்)
வீரமணி (வடதமிழீழம்)
மதிமாறன் (தமிழகம்)
கந்தரதன் (பிரான்ஸ்)
சோழகரிகாலன் (பிரான்ஸ்)
விவேகன் (பிரான்ஸ்)
அசுரன் (பிரான்ஸ்)
சுமந்திரன் (பிரான்ஸ்)
அருணன் (பிரான்ஸ்)
ஆதவன் (பிரான்ஸ்)
ச.ச.முத்து (பிரித்தானியா)
சேயோன் (பிரித்தானியா)
சேரமான் (ஐரோப்பா)
ஈசன் (கனடா)

**விளம்பரம் / விநியோகம்**
சுஜி (பிரான்ஸ்)
அருளப்பு (பிரான்ஸ்)
வேந்தன் (பிரான்ஸ்)
கஜி (பிரான்ஸ்)
கஜன் (பிரான்ஸ்)
மோகன் (பிரித்தானியா)

Impression:
IPS,
ZI de Iscles, 30 av. des Alpines,
13160 Châteaurenard

பிரித்தானியா:
Mohan: 00 44 742 988 5742
@: eelamurazu.uk@gmail.com

**சந்தா விபரம்**
**(அஞ்சற் செலவு மட்டும்)**
**வருட சந்தா**
**பிரான்ஸ்** 49€
**ஐரோப்பா** 59€
**ஏனைய நாடுகள்** 69€

**குறிப்பு:**
இவ்விதழில் பிரசுரிக்கப்படும் விளம்பரங்களுக்கு அந்தந்த விளம்பரதாரர்களே பொறுப்பு.
ஈழமுரசில் வெளிவரும் ஆக்கங்களை மறுபதிப்புச் செய்பவர்கள் முன்னனுமதி பெறவேண்டும்.

சங்கதி24
www.sankathi24.com
● செய்திகள்
● ஆய்வுகள்
● பிரான்ஸ்
● தமிழகம் மற்றும் பன்னாட்டுச் செய்திகள்
தாயகச் செய்திகளின் தேசியத்தளம்

**முள்ளிவாய்க்கால்: விடுதலைப்போரின் முடிவிடம் அல்ல ...**

தின் மறுக்கப்பட்ட உரிமைக்கான விடியல் நோக்கிய அடுத்த கட்ட நகர்வுக்கான முகவுரை. ஆக்கிரமிப்பாளர்களின் அராஜகப் பிடியில் இருந்து தமிழினம் மீண்டு எழுவதற்கு முள்ளிவாய்க்கால் முகவுரை. ஒரு புலி வீரன் இருக்கும் வரை தமிழீழத்துக்கான போராட்டம் தொடரும் என்ற தமிழீழ தேசியத் தலைவரின் கருத்துக்கு முள்ளிவாய்க்கால் செயல் வடிவம் கொடுத்தது. மண்மீட்புக்கான இறுதி துப்பாக்கி வேட்டுக்கள் அங்கு தான் ஓலித்தன. ஆனால், அது முற்றுப்பெற்ற வேட்டு அல்ல. நாலாம் கட்ட ஈழப்போரின் இறுதி வேட்டு.

உலகின் பல நாடுகளில் உள்ள தேசிய இனங்கள் அந்தந்த நாடுகளுக்கு படையெடுத்த வந்தேறு குடிகளால் அடக்கியொடுக்கப்பட்டு இரண்டாந்தரப் பிரஜைகளாக்கப்பட்டிருக்கின்றனர். அந்த இனங்கள் கால மீட்சிக்கு ஏற்ப தங்களை நிலைநிறுத்துவதற்காக பல்வேறு போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றன. எமது தமிழீழ விடுதலைப் போராட்டமும் அவ்வாறானதே. சிங்கள தேசத்தால் நீண்ட காலம் அடக்கப்பட்ட தமிழினம் விடுதலை வேண்டிப் போராட்டம் நடத்தியது. முப்பது வருடங்களாக சிறுகச்சிறுகக் கட்டியெழுப்பிய எமது விடுதலை அமைப்பை சிறிலங்காவின் வந்தேறு குடிகளான சிங்களவர்கள் மௌனிக்கச் செய்தனர்.

தமிழர்கள் என்ன குற்றம் செய்தார்கள் என்று சிங்களம் அவர்களைக் கொன்றொழித்தது? இறுதிப் போரில் மட்டும் ஒரு இலட்சம் வரையான அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர். சொந்த நிலத்தில் சுதந்திரம் வேண்டிப் போராடிய தமிழினத்தை சர்வதேச நாடுகள் ஒன்றிணைந்து அழித்தன. அந்த அழிவின் துயரம் தோய்ந்த தினத்தையே நாம் இன்று நினைவுகூருகின்றோம் . முள்ளிவாய்க்கால் முற்றத்தில் நாங்கள் மூச்சுவிட முயல்கின்றோம்.

அண்மைக் காலத்தில் உலகில் எந்தவொரு நாட்டிலும் இடம்பெறாத கொடிய போர் சிறிலங்காவிலேயே நடத்தப்பட்டது. அதுவும் தமிழர் தாயகத்தில் நடத்தப்பட்டது. இரண்டாம் உலக மகா யுத்தத்திற்கு பின்னர் கொடிய அழிவு யுத்தம் சிறிலங்காவிலேயே நடத்தப்பட்டது என்பதற்கு மாற்றுக் கருத்து இருக்க முடியாது. பாவப்பட்ட இனமான தமிழ் இனத்தை சிறிலங்கா அரசுடன் இணைந்து சர்வதேச நாடுகள் அழித்திருக்கின்றன. எந்தவித ஈவிரக்கமும் இன்றி இறுதி யுத்தம் நடத்தப்பட்டது. இருப்பதற்கு, நிற்பதற்கு, துப்புவதற்கு, கழுவுவதற்கு என்று அனைத்துக்குமே தனியான விதிகளை வகுத்து வைத்திருக்கின்ற சர்வதேச நாடுகள் அவற்றைப் பேணுகின்ற நடைமுறைகளையும் பயிற்சிப் பட்டறைகளாக வெளியே சொல்லி வருகின்றன. யுத்தத்திற்கும் இதேபோன்று பொதுவிதிகள் வகுக்கப்பட்டிருக்கின்றன. இந்தப் பொதுவிதி மீறப்படாதிருப்பதைக் கண்காணிப்பதற்கென்றே ஐக்கிய நாடுகள் சபை தோற்றுவிக்கப்பட்டது. ஆனால், இந்தச் சபையும் சர்வதேச நாடுகளும் வன்னியில் சிறிலங்கா படைகள் மக்களைக் கொன்றொழித்தபோது வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தன.

வன்னியில் நடைபெற்றது நேர்மையான யுத்தம் அல்ல. கொத்துக் குண்டுகள், பொஸ்பரஸ் குண்டுகள் போன்றவை சர்வதேச ரீதியாக தடை செய்யப்பட்ட ஆயுதங்கள். ஆனால், இந்தக் குண்டுகளைப் பயன்படுத்தியே சிறிலங்கா படைகள் வன்னியில் இலட்சக்கணக்கான தமிழ் மக்களைக் கொன்றொழித்தது. பாதுகாப்பு வலயம் அமைக்கப்பட்டுள்ளது என்றும் அதற்குள் தாக்குதல் நடத்தப்படமாட்டாது என்றும் சூழ்ச்சித்தனமாக அறிவித்து மக்களை அந்த வலயத்தை நோக்கி இழுத்த சிறிலங்கா படை, அதற்குள் வைத்தே கொத்துக்குண்டுகளை வீசி மக்களைக் கொன்றொழித்தது. விடுதலைக்காக போராடிய அமைப்பையும் அந்த அமைப்புடன் ஒன்றித்து நின்ற மக்களையும் ஒழிப்பதற்கு இரசாயன ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டதை சர்வதேச நாடுகள் வேடிக்கை பார்த்தன. இந்தியா, சீனா, பாகிஸ்தான், இஸ்ரேல் உள்ளிட்ட நாடுகள் பணத்திற்கு அன்றி உதவி என்ற பெயரில் சிறிலங்காவுக்கு மேற்படி இரசாயன ஆயுதங்களை விநியோகித்தன. இதற்கு மேலாக மேற்படி நாடுகள் இந்த யுத்தத்திற்கான தொழில்நுட்ப உதவியையும் சிறிலங்காவுக்கு வழங்கின. இந்த நாடுகளின் போரியல் அனுபவம் மிக்க உயர் இராணுவ அதிகாரிகள் சிறிலங்காவுக்கு நேரடியாக வருகை தந்து களமுனைகளில் நின்று சிறிலங்கா படைகளுக்கு வழிகாட்டல்களை வழங்கிக்கொண்டிருந்தனர். சிறிலங்கா படைகள் தனியே யுத்தம் செய்திருந்தால் நூறு ஆண்டுகள் சென்றாலும் புலிகளின் ஆட்சியை வீழ்த்தியிருக்க முடியாது. பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தம் என்ற பெயரில் சர்வதேச நாடுகள் இணைந்து தமிழீழ விடுதலை நோக்கிய போராட்டத்தை துவம்சம் செய்திருக்கின்றன. மக்களைக் கொன்றொழித்திருக்கின்றன.

புலிகள் ஏன் போராடினார்கள்? தலைவர் பிரபாகரன் அவர்கள் தனது தனிப்பட்ட விருப்பத்திற்காக ஆயுதம் ஏந்தவில்லை. சிறிலங்கா பிரித்தானியாவிடம் இருந்து சுதந்திரம் பெற்ற காலத்தில் இருந்து தமிழ் மக்களை இரண்டாந்தரப் பிரஜைகளாக நடத்திவந்தனர். இதற்கு எதிராக 1948 ஆம் ஆண்டில் இருந்தே ஜனநாயக வழியிலான போராட்டங்கள் இடம்பெற்றன. தேசியத் தலைவர் இந்தப் போராட்டத்தின் வடிவத்தை மாற்றினார். அதற்காக அவருக்கும் அவர் தலைமையிலான புலிகளுக்கும் பயங்கரவாதிகள் பட்டம் சூட்டியது சிறிலங்கா அரசு.

புலிகளின் போராட்டம் தவறு என்று பிரச்சாரப்படுத்துகின்ற சிறிலங்கா அரசாங்கம் புலிகளின் கட்டமைப்புக்கள் அனைத்தையும் அழித்த பின்னர் தற்போதாவது தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வைக் கண்டிருக்க வேண்டும். ஆனால், யுத்தம் முடிவடைந்து ஆறு ஆண்டுகள் கடக்கின்ற நிலையிலும் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படவில்லை. மாறாக தமிழ் மக்களின் இருக்கின்ற நிலங்களும் ஆக்கிரமிக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன. புதிய இராணுவ முகாம்கள் அமைக்கப்படுகின்றன. கடத்தல்கள், கைதுகள், கொலைகள் தற்போதும் தொடர்ந்துகொண்டிருக்கின்றன.



புலிகள் பயங்கரவாதிகள் என்று வர்ணித்த சிறிலங்காவின் பிரச்சாரத்தை நம்பி புலிகளை அழிப்பதற்கு இரசாயன ஆயுதங்களை அள்ளிக்கொடுத்த நாடுகள் இன்றுவரை தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக எந்தவிதமான கரிசனையும் கொள்ளவில்லை.

மேலும், போரில் வென்ற எந்தப் படைகளும் தங்களுடன் சண்டையிட்டவர்களின் கல்லறைகளை அழித்ததாக வரலாறு இல்லை. எந்த எதிரியாக இருந்தாலும் அவன் யுத்த வீரனாக இருந்தால் அவனின் கல்லறையை பாதுகாக்கவேண்டும் என்பது யுத்த விதி. ஆனால், இங்கே தாயகத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் மாவீரர் துயிலும் இல்லங்கள் அனைத்தும் இருந்த இடம் தெரியாமல் அழிக்கப்பட்டுள்ளன.

நிற்க, சிறிலங்கா தொடர்பான விடயத்தில் இந்தியாவின் வகிபாகம் ஏனைய நாடுகளை விட முதன்மை பெறுகின்றது. தமிழ் மக்களை அழித்த மகிந்த அரசுக்கு இந்தியா அனைத்து உதவிகளையும் வழங்கிக் கொண்டிருந்தது. ஒட்டுமொத்தமாக கூறினால் தமிழ் மக்களின் அழிவுக்கும் விடுதலைப் போராட்டம் முடக்கப்பட்டதற்கும் இந்தியாவே முழுப் பொறுப்பையும் ஏற்கவேண்டும்.

பல்லாயிரக்கணக்கான போராளிகளும் இலட்சக்கணக்கான தமிழ் மக்களும் தங்கள் இன்னுயிர்களை இழந்து கட்டியெழுப்பிய எமது தமிழீழ தேசத்தின் கட்டமைப்புக்கள் இன்று சின்னாபின்னமாகியிருக்கின்றன. இந்த நிலையில் சிறிலங்கா அரசாங்கத்தினதும் சர்வதேச நாடுகளினதும் கூட்டுச் சதியால் இறுதி யுத்தத்தில் கொல்லப்பட்ட அத்தனை உறவுகளையும் நாம் இன்று நினைவுகூருகின்றோம். தாயகத்திலும் சர்வதேச நாடுகளிலும் இவர்களுக்கான நினைவு தினங்கள் ஏற்பாடு செய்யப்பட்டு நடத்தப்பட்டு வருகின்றன.

இந்த நினைவு தினங்கள் வெறுமனே நினைவு தினங்களாக மட்டும் இருக்கக்கூடாது. எமது இலட்சியத்தை நோக்கிய விடுதலைத் தீயை வளர்க்கின்ற தினங்களாக அமைய வேண்டும். யுத்தம் நடைபெற்ற காலத்தை விட தற்போது தமிழ் மக்கள் மேலும் அடிமைப்படுத்தப்பட்டுள்ளனர். இந்த அடிமைத் தளையில் இருந்து விடுதலை பெறுவதற்கான உறுதியெடுக்கின்ற தினங்களாக இவை அமைய வேண்டும்.

**முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்கள் தமிழன் கனவை நனவாக்கட்டும்...**

றையும் நினைவுபடுத்துவதே முள்ளிவாய்க்காலின் பேரவலத்தை நினைவு கூரும் மக்களுக்கு தரப்படும் ஆழ்ந்து உணரக் கூடிய தகவலாகும். ‘இந்தியாவுக்கு ஒரு மரணச் சான்றிதழ் தேவையாக இருந்தது. அதற்காக ஒரு இலட்சத்து 45 ஆயிரத்துக்கும் அதிகமான மரணச் சான்றிதழ்கள் எடுத்துக் கொண்டனர்.’ என்பது தான் ஆயரின் துயரம். ஆனால் இங்கு அரசியல் செய்வோர் ஏற்கப்போவதில்லை. ஏனெனில் இவர்கள் இந்திய அமெரிக்க அரசுகளின் சொற்படி அவர்களின் நலன்களுக்காகவே அரசியல் செய்கின்றனர்.

எனவே தமிழினம் உலகம் முழுவதும் பரவியிருக்கும் தமிழினம் முள்ளிவாய்க்கால் அவலங்களை நினைவு கூரும் தமிழ் மக்கள் அந்த உயிர்களும் தமிழ் மக்களின் விடுதலைக்கு வித்தாகிப் போனவர்களாகத் தான் கருத வேண்டும். விடுதலைப் புலிகள் மட்டும் வித்தாகவில்லை. முள்ளிவாய்க்காலில் ஈகம் செய்த அத்தனை உயிர்களும் தமிழினத்துக்காக வித்தாகிப் போனவர்கள் என்று எண்ணி நினைவேந்தல் நிகழ்வுகளில் பங்குபற்ற வேண்டும். முள்ளிவாய்க்கால் முடிவல்ல என்று தமிழ்க் கவிஞன் கூறினான். முள்ளிவாய்க்கால் ஒரு திருப்பம் என்று அவரது கணிப்பு. அந்தக் கவிஞன் கண்ட தமிழன் கனவில் எல்லாம் நடந்துவிட்டன. இன்னமும் சிறு பகுதியே எஞ்சியுள்ளது. அந்தக் கனவை நிறைவேற்ற முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்கள் பயன்பட வேண்டும்.

– தாயகத்திலிருந்த நப்பின்னை

ஈழமுரசு

# மீண்டும் தொடங்கும் இலக்கு நோக்கிய பயணம்

ஈழமுரசு இதழ் மீண்டும் உங்கள் கைகளை வந்தடைந்ததில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றோம். கடந்த செப்டெம்பர் மாதம் ஊடக இல்லத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் முயற்சியை அடுத்து அதனை இடை நிறுத்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டோம். சுமார் 20 ஆண்டுகள் தொடர்ச்சியாக வெளிவந்துகொண்டிருந்த ஈழமுரசு இதழை, 2009ம் ஆண்டு முள்ளிவாய்க்கால் பேரழிப்பின் பின்னர் தடுத்து நிறுத்துவதற்கு பல்வேறு வகையிலும் சிங்களப் பேரினவாத அரசின் எல்லை கடந்து நீளும் பயங்கரவாதக் கரங்களும், தமிழ்த் தேசியத்தை அழிக்க முனையும் சக்திகளும் கூட்டுச் சேர்ந்து முயற்சி எடுத்துவந்தன. ஆனால் அத்தனை எதிர்ப்புக்களையும் மீறி வெளிவந்துகொண்டிருந்த ஈழமுரசு இதழ் கடந்த செப்டெம்பர் மாதம் ஊடக இல்ல ஊடகவியலாளர் ஒருவர் மீது மேற்கொள்ளப்பட்ட படுகொலை முயற்சியையும் அதன் பின்னர் ஊடகஇல்லத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட தொடர் பயங்கரவாத அச்சுறுத்தல்களையும் அடுத்து இடை நிறுத்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டது.

இந்த அச்சுறுத்தலின் பின்னால் இருக்கும் சக்திகளைக் கண்டுபிடிக்க பிரெஞ்சுக் காவல்துறையின் உதவியை நாடியிருந்தோம். பிரெஞ்சுக் காவல்துறையினர் குற்றவாளியைக் கண்டுபிடித்து, நீதிமன்றில் நிறுத்தி தண்டனையை வாங்கிக் கொடுக்க ஆண்டுகள் பல ஆகும். இதனால் ஈழமுரசு மீண்டும் வெளிவருவது சாத்தியமற்றுப்போகும் என்று சிலர் சொல்லிக் கொண்டிருந்தனர். அத்துடன், பொருளாதார நெருக்கடியால் மூடப்பட்டுள்ளது என்றும், உள்வீட்டு முரண்பாடுகளால் மூடப்பட்டுள்ளது என்றும் பொய் வதந்திகளை சிலர் பரப்பிக்கொண்டிருந்தனர். இந்நிலையில், ஊடகஇல்ல நடவடிக்கையில் ஈடுபட்டவர்களைக் கண்டுபிடிப்பதற்கு பிரெஞ்சுக் காவல்துறையினர் காட்டிய வேகமும், குற்ற வாளியைச் சில நாட்களிலேயே கண்டுபிடித்து நீதியின் முன் நிறுத்தித் தண்டனை வாங்கிக்கொடுத்ததும் எமக்குப் பெரும் மகிழ்வையும் நம்பிக்கையையும் ஏற்படுத்தியது. இரவு பகல் பாராது இந்த நடவடிக்கையில் ஈடுபட்ட பிரெஞ்சுக் காவல்துறையினருக்கு எமது நன்றியையும், பாராட்டுதல்களையும் கூறக் கடமைப்பட்டுள்ளோம். அத்துடன், விசாரணைகளின் போது, ஈழமுரசு மீண்டும் வெளிவரவேண்டும் என்பதை வலியுறுத்திய காவல்துறையினர் அதற்கான பாதுகாப்பையும் ஒத்துழைப்பையும் வழங்குவதாகவும் கூறியிருந்தனர். அதற்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அதேவேளை, எத்தனையோ ஆயிரம் குற்றங்கள் இன்னமும் விசாரணைக்காக நிலுவையில் காத்திருக்கும் நிலையில், ஈழமுரசுக்கு எதிரான நடவடிக்கை விசாரணையை துரிதமாகக் கையிலெடுத்து விசாரணையை மேற்கொண்டு குற்றவாளிக்குத் தண்டனையையும் வழங்கிய பொபினி நீதிமன்ற நீதியாளர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓர் அச்சு ஊடகத்தை இடைநிறுத்திவிட்டு அதனை மீள ஆரம்பிப்பதென்பது இலத்திரனியல் ஊடக வளர்ச்சி உச்சத்தைத் தொட்டுவிட்ட இந்தக் காலத்தில் அத்தனை இலகுவானதல்ல. அதற்கான சட்ட அங்கீகாரத்தை, பொருளாதாரத்தை ஈடுகட் டும் பலத்தை மீண்டும் பெறவேண்டும். சட்ட ரீதியான அங்கீகாரத்தைப் பெற்றுவிட்ட நிலையில், ஈழமுரசுக்கு ஆதரவுதந்த வர்த்தகப் பெருந்தகைகள் மீண்டும் தங்கள் ஆதரவை வழங்குவார்கள் என்ற அசைக்கமுடியாத நம்பிக்கை எமக்கிருந்தது. இருந்த அலுவலகத்தையும் இழந்துவிட்டு வெற்று வெளியில் நின்றே இப்போது எமது பயணத்தைத் தொடங்குகின்றோம். இந்தப் பயணத்திற்கு ஒத்துழைப்பு வழங்க உடனடியாகவே முன்வந்த அனைத்து வர்த்தகர்களையும் ஆதரவாளர்களையும் நன்றியுடன் பற்றிக் கொள்கின்றோம். அதேவேளை, ஈழமுரசு இடைநிறுத்தப்பட்டதன் பின்னர் அதனை வெளிக்கொண்டுவரவேண்டும் என பல்வேறு வகையிலும் எம்மை வலியுறுத்திவந்த உள்ளங்களுக்கும் இந்த வேளையில் நாம் நன்றி கூறுகின்றோம்.

தியாகி லெப்.கேணல் திலீபனின் நினைவு நாட்களில் உங்களிடம் இருந்து இடைவிலகிய நாம், இன்று 21ம் நூற்றாண்டின் முதல் மிகப்பெரும் இனப்படுகொலையான முள்ளிவாய்க்கால் படுகொலையின் 6வது ஆண்டு நினைவு நாளில் மீண்டும் வெளிவருகின்றோம். அடக்குமுறைகள் தொடரும் வரைக்கும் விடுதலைக்கான போராட்டமும் தொடர்ந்துகொண்டே இருக்கும். அந்த விடுதலையைப் பெறும் வரைக்கும் இலக்குநோக்கிய பயணம் நிற்காது. எனவே, இது முடிவல்ல. தற்காலிக ஓர் இடைவிலகலே... என்று கூறியிருந்த நாம், மீண்டும் எமது பயணத்தைத் தொடங்கியிருக்கின்றோம்.

ஊடக இல்லம் மீதான தாக்குதல் நடவடிக்கையில் ஈடுபட்ட குற்றவாளி அனைத்துக் குற்றங்களையும் தன்மீது போட்டுக்கொண்டு மற்றையவர்களைத் தப்பிக்க வைக்க முனைந்தாலும், அது ஒரு வெறும் அம்புதான் என்பதை நாம் அறிவோம். எனவே, இந்தப் பயணமும் பெரும் தடைகளையும் அச்சுறுத்தல்களையும் எதிர்கொள்ளும் என்பது மறுப்பதற்கில்லை. ஆனாலும் மக்களுக்கு உண்மைகளைச் சொல்லிக் கொண்டிருப்பதில் இருந்து நாமும் ஓயப்போவதில்லை.

# ஈழமுரசு மீதான படுகொலை முயற்சியாளனுக்கு பிரெஞ்சு நீதிமன்றம் வழங்கிய தண்டனை!

பரிசில் உள்ள ஈழமுரசு பத்திரிகையின் செயலகத்தில் இருந்து கடந்த 18.09.2014 அன்று வீடு திரும்பிக் கொண்டிருந்த ஊடகஇல்லத்தின் மூத்த ஊடகவியலாளரைத் தொடருந்து நிலையத்திற்கு அருகில் வாகனமொன்றில் வழிமறித்த முகமூடியணிந்த ஆயுததாரி ஒருவர், அவரைப் படுகொலை செய்ய முற்பட்டார். எனினும் அவ்விடத்திலிருந்து சம்பந்தப்பட்ட மூத்த ஊடவியலாளரும், அவரது அயலில் வசிக்கும் அவரது நண்பரும் தப்பிச் சென்ற பொழுது, தொலைபேசி மூலம் அவர்களைத் தொடர்பு கொண்ட நபர் ஒருவர், ஈழமுரசு பத்திரிகையையும், ஊடகஇல்லத்தால் நடாத்தப்பட்டு வந்த அனைத்து இணைய ஊடகங்களையும் ஒப்படைத்து விட்டு அனைத்துச் செயற்பாடுகளில் இருந்து விலகிக் கொள்ளுமாறும், அல்லாது போனால் உயிரைத் துறப்பதற்குத் தயாராகுமாறும் சம்பந்தப்பட்ட ஊடகவியலாளரைக் கடும் தொனியில் மிரட்டியிருந்தார்.

இதனைத் தொடர்ந்து இப்படுகொலை முயற்சியை உறுதிப்படுத்தும் வகையில் மறுநாள் 'எல்லாளன் படை' என்ற பெயரில் ஊடகங்களுக்கு மின்னஞ்சல்களும் அனுப்பி வைக்கப்பட்டன. இதன் பின்னர் 'எல்லாளன் படை' என்ற பெயரில் இணையத்தளம் ஒன்று திறக்கப்பட்டு, தமிழ்த் தேசிய செயற்பாட்டாளர்கள் – ஊடகவியலாளர்களை சுட்டுப் படுகொலை செய்யப் போவதாக எச்சரிக்கை செய்யும் பாடல்களும், அறிவிப்புக்களும் அவ் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டன.

படுகொலை முயற்சித் தாக்குதல் குறித்து சர்வதேச பிரபல ஊடகமான BBC ஊடக இல்லத் தலைவரை தொடர்பு கொண்டு நடந்த சம்பவத்தைச் செவ்வி கண்டபோது 'சிறீலங்காவின் கைக்கூலிகளின் வேலை' எனத் தனது செவ்வியில் குறிப்பிட்டதைத் தொடர்ந்து அவருக்கும் சேர்த்து இரண்டாவது கொலை மிரட்டலும் மின்னஞ்சல் வழியாக வெளியிடப்பட்டது.

இதனால் ஈழமுரசு பத்திரிகையும், அதன் தாய் நிறுவனமான ஊடக இல்லமும் பணிகளை இடைநிறுத்திக் கொண்டதோடு, ஊடக இல்லத்தால் நடாத்தப்பட்டு வந்த சங்கதி–24, தமிழ்க்கதிர் ஆகிய இணையங்களும் தமது சேவைகளை இடைநிறுத்திக் கொள்வதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டன. இந்நிலையில் புலன் விசாரணைகளை முடுக்கிவிட்ட பிரெஞ்சுக் காவல்துறையினர், தமக்குக் கிடைக்கப்பெற்ற ஆதாரங்களின் அடிப்படையில் கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் 17ம் திகதி பாலமுரளி பாலசிங்கம் என்பவரை சந்தேகத்தின் பேரில் கைது செய்தனர்.

பிரெஞ்சுக் காவல்துறையினர் மேற்கொண்ட புலன் விசாரணைகளின்படி, தனது இரண்டாவது மனைவியின் கடன் அட்டையைப் பயன்படுத்தி இணையத்தளம் ஒன்றை வாங்கி அதனை 'எல்லாளன் படை' என்ற பெயரில் இயக்கி வந்ததோடு, தனது வீட்டிற்கு அருகில் உள்ள மக்டொனால்ட்ஸ் உணவகத்தின் இணைய சேவையைப் பயன்படுத்தித் தனது மடிக் கணினி ஊடாக ஈழமுரசு ஊடகவியலாளர் மீதான படுகொலை முயற்சிக்கு உரிமை கோரும் மின்னஞ்சல்களையும் 'எல்லாளன் படை'யின் பெயரில் அனுப்பி வந்துள்ளார். அத்தோடு ஈழமுரசு பத்திரிகையின் மூத்த ஊடகவியலாளர் மீதான படுகொலை முயற்சிக்கு தனது சகோதரரின் வாகனத்தைப் பயன்படுத்தினார் என்பதும் பிரெஞ்சுக் காவல்துறையினரின் புலன்விசாரணைகளில் அம்பலமாகியது.

இந்நிலையில் இது தொடர்பான வழக்கு கடந்த 16.02.2015 திங்கட்கிழமையன்று பிரான்ஸ் பொபினி நீதிமன்றத்தில் நடைபெற்ற பொழுது தான் செய்த குற்றங்களை பாலமுரளி பாலசிங்கம் ஒப்புக் கொண்டார்.

எனினும் இந்தியாவில் இருந்து வருகை தந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் உளவுப் பிரிவைச் சேர்ந்தவர் என்று அடையாளப்படுத்திக் கொண்ட செந்தில் ஆனந்தன் என்பவர் கேட்டுக்கொண்டதற்கு இணங்கவே இவ்வாறு தான் நடந்து கொண்டதாகவும் தனது செய்கைகளுக்கு இவர் நியாயம் கற்பித்ததோடு, தமிழீழ விடுதலைப் புலிகளுக்குக் களங்கம் விளைவிக்கும் வகையிலும் நீதிமன்றத்தில் இவர் வாதிட்டார். எனினும் இவரது வாதங்களை நிராகரித்த நீதிபதி, இவருக்கு ஓராண்டுகால சிறைத்தண்டனை விதித்தும், பாதிக்கப்பட்ட ஊடகஇல்லச் செயற்பாட்டாளருக்கு இழப்பீடு வழங்குவதற்கான உத்தரவும் பிறப்பித்துத் தீர்ப்பளித்தார்.



சட்டவிரோதமாக வாகனத்தைச் செலுத்தியமை, பாதசாரி ஒருவரை வாகனத்தால் இடித்துக் காயப்படுத்தியமை, திருட்டு ஆவண மோசடி செய்தமை, போலி ஆவணங்கள் வைத்திருந்தமை, இவரது வாகனத்தில் இருந்து ஆறாவது வகையான ஆயுதம் கைப்பற்றப்பட்டமை (பெரிய கத்தி), அரசாங்க ஆவணங்களைச் சட்டவிரோதமாக பாவித்தமை இவ்வாறு பல குற்றச்சாட்டுக்கு ஏற்கனவே இவர் உள்ளாக்கப்பட்டிருந்தார். இதற்காக அவருக்கு வழங்கப்பட்ட தண்டனைகள், தண்டப்பணம் பற்றியும் நீதிபதி தெரிவித்திருந்தார். இதனிடையே இவருடன் படுகொலை முயற்சியில் ஈடுபட்டதாகக் கூறப்படும் செந்தில் ஆனந்தன் என்ற மற்றைய நபர் இதுவரை கைது செய்யப்படவில்லை. ஈழமுரசு பத்திரிகையின் மூத்த ஊடவியலாளர் மீதான படுகொலை முயற்சியில் முகமூடி தரித்த ஆயுததாரி ஒருவரும், பிறிதொரு நபரும் ஈடுபட்டமை ஊடகஇல்ல செயற்பாட்டாளர்களால் உறுதி செய்யப்பட்ட பொழுது, இதில் ஆயுததாரி யார், மற்றைய நபர் யார் என்பது இதுவரை உறுதிசெய்யப்படவில்லை.

எனினும் படுகொலை முயற்சியின் சூத்திரதாரியாக இனம்காணப்பட்டுள்ள பாலமுரளி பாலசிங்கம் என்பவரின் வீட்டில் இருந்து ஆயுதங்களும், முகமூடி ஒன்றும், கையுறையும், மடிக்கணினியும் பிரெஞ்சுக் காவல்துறையினரால் கைப்பற்றப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# யாழ். பல்கலையில் பிரமாண்டமான முறையில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை நடத்த திட்டம்


பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
UNIVERSITY STUDENTS' UNION
UNIVERSITY OF JAFFNA

President
Mr.S.Thaceenthan
Vice President
Mr.V.Elankumaran
Secretary
Mr.S.Sayanthan
Junior Treasurer
S.Sutharsan
Editor
V.Vimalathas
Committee Members
T.Indrakumar (President, Faculty of Arts)
A.Kajanthan (President, Faculty of Management Studies & Commerce)
T.Sarupan (President, Faculty of Science)
Mr. Benedict Paul Bright (President, Faculty of Medicine)
Mr.K.Mathusuthan (President, Faculty of Agriculture)

S.Thaceenthan
President
Students' Union
University of Jaffna

S.Sayanthan
Secretary
Students' Union
University of Jaffna

யாழ். பல்கலைக்கழகத்தில் அனைத்துத் தரப்பினரையும் ஒன்றிணைத்து மே 18 திகதி முள்ளிவாய்க்கால் நினைவு தினத்தினை பிரமாண்டமான முறையில் அனுஸ்டிக்கப்படவுள்ளதாக பல்கலைக்கழக ஆசிரியர் சங்க தலைவர் ஆர். இராசகுமாரன் தெரிவித்தார்.

தமிழீழ வரலாற்றில் மறக்க முடியாத முள்ளிவாய்க்கால் படுகொலையில் கொடூரமாகக் கொல்லப்பட்ட அப்பாவி பொதுமக்கள், போராளிகளை அந்நாளில் ஒவ்வொரு தமிழ் மகனும், உணர்வுபூர்வமாக அனுஸ்டிக்க வேண்டும் என்றும் அவர் மேலும் கோரிக்கை விடுத்துள்ளார்.

மேற்படி விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், “இதுவரை காலமும் 2009ஆம் ஆண்டு இறுதிப் போரிலே கொல்லப்பட்டவர்களை நினைவுகூருவதற்கு மிகப் பெரும் தடைகள் இருந்தது. பத்திரிகை செய்திகளின்படி அவ்வாறான தடைகள் இல்லாது இருப்பது போலத் தெரிகிறது. எது எவ்வாறாக இருந்தாலும் முள்ளிவாய்க்காலிலே படுகொலை செய்யப்பட்ட எமது உறவுகளை, தாய், தந்தையவர்கள் நினைவுகூருவது என்பது எங்களுக்கு இருக்கின்ற உரிமை. இந்த உரிமைகளை யாரும் மறுக்க முடியாது. யார் தடுத்தாலும் எமது உறவுகளை நினைவுகூர்ந்துதான் ஆக வேண்டும்.

யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் ஏற்கனவே முள்ளிவாய்க்கால் நினைவு தினத்தினை யாழ். பல்கலைக்கழகத்தில் எதிர்வரும் 18ஆம் திகதி திங்கட்கிழமை பாரிய அளவில் அனுஸ்டிப்பது என்று தீர்மானம் எடுத்துள்ளது. இதில் மாணவர்கள், விரிவுரையாளர்கள், கல்விசார ஊழியர்களையும் இணைத்து இந்நினைவு கூரலை செய்வதற்கு எத்தணித்துள்ளோம். இந்த நினைவு கூரலானது ஈழத்தில் சகல பகுதிகளிலும் அனுஸ்டிக்கப்பட வேண்டும் என்பது பல்கலைக்கழக சமூகத்தின் விருப்பமாக உள்ளது.

இறுதிப் போரில் எமக்காக போராடிய போராளிகள், அப்பாவி குழந்தைகள், பெண்கள், நோயாளிகள், வயோதிபர்கள், சரணடைந்தவர்கள், கைது செய்யப்பட்டவர்கள் என்று சகல தரப்பினரும் கொடூரமான முறையில் கொல்லப்பட்டனர். இது வரலாற்றிலே காணமுடியாத மிகப் பெரும் துயரமான நிகழ்வாக முள்ளிவாக்கால் படுகொலையே உள்ளது.

எனவே இந்த படுகொலை நாளை நினைவு கூருவது என்பது ஒவ்வொரு தமிழ் மகனினதும் கடமையாகும்.

இந்த நினைவுகூரலை இதுவரை காலமும் பல்கலைக்கழகத்தில் அனுஸ்டித்துள்ளோம். அதேபோன்று வேறு பல இடங்களிலும் அனுஸ்டிக்கப்பட்டுள்ளது. இந்த நினைவுகூரலை எந்த ஒரு அரசியல் நோக்கம் கொண்டதாக நாங்கள் பார்க்கக் கூடாது.

இதுவரை காலமும் உயிரிழந்த உறவுகளை நினைவுகூர்ந்து பிராத்தனை செய்யவேண்டியவர்களாக நாங்கள் உள்ளோம். இந்த நாட்டில் இத்தினம் நினைவுகூரம் தினமாக இருக்க வேண்டும். ஒரு புறம் வெற்றி நாளாகவும் மறுபுறம் நினைவுகூரம் நாளாகவும் இருக்கக் கூடாது. எனவேதான் இம்முறை யாழ். பல்கலைக்கழகத்தில் பெருமளவில் நினைவுகூரலை நடத்த தீர்மானித்துள்ளோம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

○ ○ ○ ○ ○ ○ ○ ○ ○ ○ ○ ○ ○ ○

# கோத்தபாயவை கைது செய்ய உச்ச நீதிமன்றம் இடைக்காலத் தடை



முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்சவை கைது செய்ய உச்ச நீதிமன்றம் இடைக்கால தடை விதித்துள்ளது.

தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் விசாரணைக்கு உட்படுத்தப்படும் வரையில் கோத்தபாயவை கைது செய்ய வேண்டாம் என உச்ச நீதிமன்றம் அறிவித்துள்ளது. மனு மீதான விசாரணை முடிவடையும் வரையில் இந்த தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

உச்ச நீதிமன்ற நீதியரசர்கள் சரத் ஆப்ரூ மற்றும் ஈவா வனசுந்தர ஆகியோரினால் இந்த மனு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டது.

## இலங்கைச் செய்திகள்

# உணர்வுபூர்வமான நினைவேந்தலுக்கு தமிழ் சிவில் சமூக அமையம் அழைப்பு



இறுதிக் கட்டப் போரில் படுகொலை செய்யப்பட்ட தமிழ்மக்களை உணர்வுபூர்வமாக நினைவுகூர முன்வர வேண்டும் என்று தமிழ் சிவில் சமூக அமையம் அழைப்பு விடுத்துள்ளது. இதுதொடர்பாக, தமிழ் சிவில் சமூக அமையத்தின் சார்பில், அந்த அமைப்பின் இணைப் பேச்சாளர்கள் எழில்ராஜன் மற்றும் குமாரவடிவேல் குருபரன் ஆகியோர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

“இலங்கைத்தீவு காலனித்துவத்தின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டது முதல் இன்றுவரை தொடரும் தமிழ் மக்களுக்கெதிரான தொடர்ச்சியான இனப்படுகொலை நடவடிக்கைகளின் அதிமூர்க்கமான ஒரு காலகட்டம் கிழக்கே 2006 இல் மாவிலாறில் ஆரம்பித்து வடக்கே 2009 மே 18இல் முள்ளிவாய்க்காலில் முடிவுக்கு வந்த இறுதிப் போரின் காலமாகும்.

இக்காலப்பகுதியில் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் கொன்றொழிக்கப்பட்டுள்ளனர். இவர்களின் இழப்பு தனிநபர்களாக இறந்தவர்களது உறவினர் நண்பர்கள் மீதும் அவர்களது குடும்பங்கள் மீதும் ஒட்டுமொத்தமாக தமிழர்களாக எமது கூட்டிருப்பின் மீதும் ஆறாத மனவடுவை ஏற்படுத்திச் சென்றுள்ளது.

இந்நிலையில் எமது தனிமனித மற்றும் கூட்டுக் குணப்படுத்தலுக்கும் ஒரு தேசமாக எமக்குரிய சுயநிர்ணய உரிமையைப் பெற்றுக்கொள்வதற்கான எமது பயணத்தின் தொடர்ச்சிக்கும் நாம் எமது இழப்புகளை நினைவுகூர்வதும் நினைவுகளைப் தொடர்ச்சியாக பேணுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதும் எமது கடமையும் உரிமையுமாகும்.

இதயம் நிறைந்த வேதனைகளோடு தமிழ்மக்களாகிய நாம் மே 18ஐ அண்மித்து வரும் இவ்வேளையில் உணர்வுபூர்வமாக இத்தினத்தை அனுசரிக்க தமிழ் சிவில் சமூக அமையம் அனைவரையும் வேண்டி நிற்கிறது.

பொருள்பொதிந்த ஒரு நினைவு கூரலை உறுதிப்படுத்த பின்வரும் ஆலோசனைகளை முன் வைக்கிறோம்.

அஞ்சலி நிகழ்வுகள் கூட்டு ஒழுங்கு செய்யப்படும் இடங்களுக்கு மக்கள் ஆர்வத்துடன் சென்று கலந்து கொள்ள வேண்டும்.

அன்றைய தினத்தில் அனைத்து ஆலயங்களிலும் உணர்வுபூர்வமான நினைவேந்தல் வழிபாடுகளை மேற்கொள்ளல்.

பாடசாலைகளில் காலை ஒன்றுகூடலின்போது நினவுச்சுடர் ஏற்றி மலரஞ்சலி செலுத்தலும் அஞ்சலி உரை ஒன்றை நிகழ்த்தலும்.

அரச அரசு சார்பற்ற நிறுவனங்களில் பொருத்தமான நேரத்தில் ஒன்று கூடி நினைவுச்சுடரேற்றி அஞ்சலி செலுத்துதல்.

தமது நிர்வாகத்திற்கு உட்பட்ட திணைக்களங்களில் இதனை நடைமுறைப்படுத்துவதற்கான ஆலோசனையை வடக்கு, கிழக்கு மாகாண சபைகள் விடுக்க வேண்டும்.

சனசமூக நிலையங்கள், இளைஞர் கழகங்கள் போன்ற பொது அமைப்புக்கள் அன்றைய தினத்தில் மாலைப்பொழுதில் கிராமமட்ட அஞ்சலி நிகழ்வுகளை ஒழுங்கு செய்ய வேண்டும்.

மரணித்தவர்களுக்கான நினைவுச்சின்னம் அமைப்பற்கான ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

மேற்சொல்லப்பட்டவை போன்ற முயற்சிகளை மேற்கொள்வதன் மூலம் உணர்வுபூர்வமான நினைவேந்தல் ஒன்றை மேற்கொள்ள அனைத்து தமிழ் மக்களையும் அழைத்து நிற்கிறோம்” என்று கூறப்பட்டுள்ளது.

# இனப்படுகொலை நினைவேந்தல் வாரம் ஆரம்பம்



இறுதிப் போரில் கொல்லப்பட்டவர்களுக்கான நினைவேந்தல் வாரத்தை கடந்த செவ்வாயன்று முள்ளிவாய்க்காலில் நினைவுச் சுடரேற்றி ஆரம்பித்து வைத்தார் வடக்கு மாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கம்.

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை நினைவு தினம் 12ம் திகதியிலிருந்து 18ஆம் திகதி வரை அனுஷ்டிக்கப்படும் என்று வடமாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கம் அறிவித்திருந்தார். அதன்படி கடந்த செவ்வாயன்று குறித்த நினைவேந்தலை ஆரம்பிக்கும் முகமாக நினைவுச் சுடரேற்றி ஆரம்பித்து வைத்தார் சிவாஜிலிங்கம்.

மேலும் குறித்த நினைவேந்தலில் வடமாகாண சபை பிரதி அவைத் தலைவர் அன்ரனி ஜெகநாதன், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் மேரி கமலா குணசீலன் ,வடமாகாண சபை உறுப்பினர் ரவிகரன் ஆகியோர் குறித்த நினைவேந்தலில் கலந்து கொண்டனர்.

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை வாரம் நினைவு நாள் வியாழனன்று பருத்தித்துறை முனை பகுதியில் வடமாகாண சபை உறுப்பினர் சுகிர்தன் தலைமையில் அனுஸ்டிக்கப்பட்டுள்ளது.

அவருடன் வடமாகாணசபை உறுப்பினர் சிவாஜிலிங்கம் உள்ளூராட்சி மன்ற பிரதிநிதிகள் சஜவன், சதீஸ் மற்றும் பலரும் கலந்து கொண்டனர்.

# யாழ். வீரசிங்கம் மண்டப வளாகத்தில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு!

முள்ளிவாய்க்கால் மண்ணில் படுகொலை செய்யப்பட்ட தமிழ் மக்களின் நினைவாக யாழ்.வீரசிங்கம் மண்டபத்திற்கு முன்பாகவுள்ள உலக தமிழாராச்சி மாநாட்டில் படுகொலை செய்யப்பட்டவர்களின் நினைவிடத்திற்கு முன்பாக கொட்டும் மழையிலும் அஞ்சலி நடத்தப்பட்டுள்ளது.



தமிழதேசிய கூட்டமைப்பின் ஒழுங்கமைப்பில் குறித்த அஞ்சலி நிகழ்வு நடத்தப்பட்டது. அஞ்சலி நிகழ்வில் வடமாகாண விவசாய அமைச்சர் ஐங்கரநேசன், மாகாணசபை உறுப்பினர்களான சிவாஜிலிங்கம், சுகிர்தன், கஜதீபன் ஆகியோரும் பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

# தலைவனின் பெயராலே.....

- ச.ச.முத்து

அண்மையில் ஒரு ஊடகமொன்றில் நடப்பு அரசியல் சம்பந்தமான கருத்துகூறல் ஒன்றை கேட்டுக்கொண்டிருக்க நேரிட்டது. அதில் கதைத்து கொண்டிருந்தவர் மிக லாகவமாக தமிழர்களின் பிரச்சனைக்கு தீர்வு 13ம்திருத்தம், மாவட்டசபை என்று அடிபணிவு கருத்துகளை கூறிக் கொண்டு இருந்தார்.

இதில் மிக மிலேச்சத்தனமும், கேவலமும் எதுவென்றால் போகிற போக்கில் தனது கருத்து ஆதரவாக, தனது கருத்துக்கு கேடயமாக

'நான் தலைவரை சந்தித்தபோது...'

'நான் தலைவருடனும் பாலா அண்ணையுடனும் கதைத்துக் கொண்டிருந்தபோது....' என்ற சொற்பதங்களை இடைக்கிடையே கூறிக்கொண்டே இருந்தார். இத்தனைக்கும் தலைவரும் தமிழீழ மக்களும் கடந்த காலங்களில் நிராகரித்த தீர்வுகளை இப்போது ஆதரித்து கதைப்பதற்குக்கூட 'தலைவரை சந்தித்தபோது' என்ற அடைமொழியுடன் நிறுவ முற்படுவது எத்தனை அற்பமானது. இப்படியாக 2009க்கு பின்பான அரசியலை வியாக்கியானம் செய்பவர்கள் இந்த யுக்தியை பயன்படுத்துவதை கேட்க நேரிடுகிறது.

தலைவருடன் பக்கத்தில் இருந்தோம் என்பதோ, படம் எடுத்தோம் என்பதோ சந்தித்தோம் என்பதோ, தலைவரின் இலட்சியத்தை இன்னும் வலுப்பெற வைக்க ஒரு நிரூபணமாக முன்வைக்கலாமே தவிர தலைவரே நிராகரித்த தீர்வுகளை இப்போது திணிப்பதற்கு ஒரு ஆவணமாக வைக்க முடியாது. அது எவ்வளவு வரலாற்று துரோகம்.

இரண்டாவது, தமிழீழ இலட்சியத்தை அடைந்துவிட்ட பின்னர் வேண்டுமானால் தலைவருடன் இருந்தோம் என்பதோ தலைவருடன் நின்றிருந்தோம் என்பதோ, புலத்தில் இருந்து தலைவரை சென்று சந்தித்து வந்தோம் என்பதோ ஒருவேளை ஒருவிதமான மரியாதைக்கும் கௌரவத்தையும் தரக்கூடும்.

ஆனால் தமிழீழ விடுதலை இலட்சியத்துக்கான பெரும் பாதை இன்னும் நீண்டுள்ள இந்த பொழுதில் ?நீ தலைவருடன் இருந்திருந்தாலென்ன, தலைவரை எத்தனை தடைவை சந்தித்திருந்தாலென்ன... அவருடைய இலட்சியத்தை வென்றெடுக்க இப்போது நீ என்ன செய்து கொண்டிருக்கிறாய், அல்லது இப்போது என்ன சொல்லிக்கொண்டிருக்கிறாய்.. அல்லது இப்போது உன் நிலைப்பாடு என்ன? என்பதுதான் மிக முக்கியம். இன்னும் பலநூறு நெருப்பாறுகளையும் மேடுகளையும் பள்ளங்களையும் கடக்க இருக்கும் ஒரு விடுதலைப்போராட்டம் அதனைத்தான் பார்க்கும். கேட்கும்.

மற்றது, தலைவருடன் இருந்த, சந்தித்த எல்லோருமே தலைவரின் கருத்துகளில் எத்தனை தூரம் உறுதியாக இன்னும் தொடர்ந்து இருக்கிறார்கள் என்பதும், தலைவரின் உறுதியில் நேர்மையில் எவ்வளவு தூரம் தாமும் தொடர்கிறார்கள் என்பதுமே தலைவருடன் இருந்ததற்கான அத்தாட்சியே தவிர வேறெதுவும் இல்லை.

இதற்கு வெகுதூரம் போகத்தேவையில்லை. தேசியத் தலைவர் தான் ஆரம்பித்த அமைப்பான தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்புக்கு மத்திய குழுத்தலைவராக உமாமகேஸ்வரனை நியமிக்கின்றார். முதன் முதலில் தமிழீழ விடுதலைப்புலிகளால் பத்திரிகைககளுக்கு அனுப்பபட்ட கடிதம்கூட மத்திய குழுவின் தலைவர் என்றமுறையில் உமாமகேஸ்வரனின் கையொப்பத்துடனேயே வெளிவந்தமை நினைவிருக்கலாம்.

அப்படி நியமித்து சொற்ப காலத்திலேயே உமாமகேஸ்வரன் தனது சுயதமும்பல்களை வெளிப்படுத்தி அம்பலமாகி அமைப்புக்குள்ளேயே குழப்பங்களை ஏற்படுத்தி வெளியேற்றப்படுகின்றார்.

தலைவருடன் கிட்டுவுக்கு பிறகு மிக நெருக்கமாக மிக நம்பிக்கைக்கு இருந்த சிலரில் கருணாவும் ஒருவன். தலைவருடன் பல பொழுதுகளில் ஒன்றாக நின்றவன். ஆனால் என்ன நடந்தது... தலைவர் நேசித்த இலட்சியத்துக்கே முழு எதிரியாக, முழு இனத்துக்குமே துரோகியாக கருணா மாறிப்போகின்றான்.இப்போது சிங்கதேசத்தின் செல்லப்பிள்ளையாக ஆளும்-எதிர் கட்சிகள் இரண்டினதும் அரவணைப்பில் உலாவந்து அடிபணிவு கருத்துகளின் ஊற்றாக இருக்கும் கேபி எத்தனை நாட்கள் தலைவரின் பக்கத்திலேயே தலைவருடனயே இருந்திருப்பான். கதைத்திருப்பான்..

ஆனால் இன்று மாவீரர்களதும், தலைவரதும் இலட்சியத்தை ஏலம்போட்டு கூறி மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பவர்களில் கேபியும் ஒருவர். தலைவருடன் பல பொழுதுகளில் பக்கத்தில் இருந்து அவரது இலட்சிய உறுதியையும் போராட்டத்தின் மீதான நேர்மைமிகு பங்களிப்பையும் கதைத்தும் பார்த்தும் அறிந்த இவர்களில் எவரதும் இன்றைய நிலையையும் தலைவருடன் இருந்தவர்கள் என்ற ஒரு காரணத்துக்காக ஏற்றுக்கொள்ளப்படவோ ஆமோதிக்கப்படவோ ஒருபோதும் மாட்டா.

தேசியத்தலைவர் என்பது இரண்டுவிதமான பரிணாமங்களை கொண்டது. ஒன்று நேரில் உலாவி, போர் புரிந்து இலட்சிய யாகம் வளர்த்து, விடுதலை வென்றெடுக்க முழுக்க முழுக்க அர்ப்பணமும் தியாகமும் நிறைந்து நிற்கும் ஒரு உருவம்.

இரண்டாவது, தனது இலட்சிய உறுதியாலும், எந்த பொழுதிலும் இலட்சியத்தை தனது பதவிக்காகவோ, சுயநலனுக்காகவோ விற்றுவிடாத தன்மையாலும், தான் வரித்துக் கொண்ட இலட்சியத்துக்காக தனது வாழ்வு, உயிர் தனது குடும்பம் முழுமையையும் அர்ப்பணித்து நின்றிருந்த நேர்மையாலும், அடிமுடி அறிய வெண்ணாத வீரத்தாலும், தனது தாயக மக்களை வளமும் அறிவும் ஆற்றலும் நிறைந்தவர்களாக்க அவர் முன்வைத்த அரசியலாலும். உருவான கருத்துகளால் உருவாகி மனமெங்கும் படிந்துநிற்கும், உள்ளுறைந்து போயிருக்கும் வானமளந்துநிற்கும் ஒரு மாபெரும் கருத்தியலாகவும் அவர் எங்கும் நிறைந்திருக்கிறார். இந்த தமிழீழ விடுதலைப்போராட்டக் "களத்தில் தம் இறுதி மூச்சை நிறுத்திக் கொள்ளும்வரை வீரமுடனும் அர்ப்பணிப்புடனும் களமாடிய பல்லாயிரம் மாவீரர்களில் மிகமிக அதிகமானோர் தேசியத் தலைவரின் கருத்துகளால், அவர் வெளிக்காட்டிய வழிகாட்டலால், வீரத்தால் ஈர்ப்படைந்தே அமைப்புக்கு வந்து சேர்ந்தவர்கள் ஆகும். தலைவரை நேரடியாக பார்த்துப் பழகி வந்தவர்கள் மிகமிக சொற்பமே.

இப்படித்தான்,1979ன் நடுப்பகுதியல் மாங்குளத்தில் அமைந்திருந்த அமைப்பின் முகாமுக்கு புதிய போராளி



ஒருவர் அனுப்பபட்டிருந்தார். ஆனால் அவருக்கு தேசியத் தலைவரை தெரியாது. ஒருபோதும் பார்த்ததும் இல்லை. அந்த நேரத்தில் தலைவரின் புகைப்படம் ஒன்றுகூட வெளியாகி இருக்கவில்லை. பாடசாலை பரீட்சை அடையாள அட்டைக்கு என எடுக்கப்பட்ட ஒரு சிறுவனின் முகமே பிரபாகரன் என்ற பெயரில் சிங்களப் பேரினவாத தேடும் பட்டியலில் வெளியாகி இருந்தது. மாங்குளம் முகாமுக்கு புதிதாக வந்திருந்த போராளி அந்த முகாமுக்கு யார் வந்தாலும் உடனே செல்லக்கிளி அம்மானையோ, கிட்டுவையோ அழைத்து 'இவரா தம்பி, இவரா தலைவர்' என்று கேட்டு கொண்டே இருப்பார்.

தலைவரை தெரியாமலேயே அவரது உண்மையான வழிகாட்டலை ஏற்று வந்திருந்த அந்த ஆரம்பப் பொழுதில் வந்திருந்த போராளியை போலவே இற்றைவரை எத்தனை எத்தனை போராளிகள் தலைவரை சந்திக்காமலேயே ஒரு பொழுது அவருடன் இருந்து கதைக்காமலேயே தம் இலட்சியத்துக்காக வீரமரணமாகியுள்ளார்கள். இவர்களை தியாக வேள்வியில் தம்மை ஆகுதி ஆக்கவும், எத்தனை இடர்வரினும், எந்த நிலையிலும் தளராது விடுதலை 'களத்தில் நின்றிருக்க செய்தது எது..' அது பிரபாகரன் என்ற கருத்து. பிரபாகரம் என்ற தத்துவம், பிரபாகரன் என்ற மனிதன் தன் வாழ்வின்மூலம், தன் செயலின் வழியாக, தன்னையே முன்னிறுத்தி தானே செய்து காட்டிய மகத்தான வழிகாட்டல் மூலம் ஏற்பட்ட ஒரு பெரு நம்பிக்கையே பல்லாயிரம் பல்லாயிரம் போராளிகளை அவர் காட்டும் திசையில் வீரமுடன் செல்லவைத்தது. இனியும் வைக்கும்.

சரி அதைத்தான் விடுவோம். இன்றைக்கு ஆறுவருடத்துக்கு பின்னரும் அவர் களமாடிய மணல்மேட்டில் இருந்து அடுத்த தேசத்தில் தமிழ்நாட்டின் ஒரு குக்கிராமத்தில் நல்லம்மாபட்டியில் (உசிலம்பட்டிக்கு மேற்கே மூன்று கி.மீ தூரம்) ஒரு அரசியலே அறியாத பெண்ணிடம் 'பிரபாகரன் தெரியுமா?'

(22ம் பக்கம் பார்க்க)

## மீண்டும் பற்றியெரியும்...

இருக்க மாட்டார்கள். ஆனால் பாக் தாத்தை இஸ்லாமிய அரசின் போர் அணிகள் கைப்பற்றும் வரை இலவுகாத்த கிளியாக அயல்நாடான ஈரானின் ஆயுதப் படைகள் இருக்கும் என நாம் கருத முடியாது. ஏனென்றால் ஏற்கனவே அடிக்கடி லெபனானிற்குள் எட்டிப் பார்த்து அங்குள்ள சியா இஸ்லாமியர்களுக்கு தலையிடி கொடுத்து வரும் இஸ்லாமிய அரசு, இனிவரும் நாட்களில் பாக் தாத்தைக் கைப்பற்றும் பட்சத்தில் அடுத்த கட்டமாகத் தனது போர் அணிகளை சியா இனத்தவர்களின் கோட்டையாகத் திகழும் ஈரானின் பக்கமே திருப்பும். தவிர ஈராக்கில் உள்ள சியா இனத்தவர்களை இஸ்லாமிய அரசின் ஆயுதபாணிகள் கொன்றுகுவிக்கும் வரை ஈரானிய அரசாங்கம் அமைதிகாப்பதற்கு ஈரானிய மக்களும் அனுமதிக்கப் போவதில்லை.

இந்த நிலையில் பார்சானியோ அன்றி குர்து இன மக்களோ எதிர்பார்ப்பது போன்று குர்திஸ்தான் தவிர்ந்த ஈராக்கின் ஏனைய பகுதிகள் முற்றுமுழுதாக இஸ்லாமிய அரசின் வசம் வீழ்ந்து விடும் என நாம் கருத முடியாது. ஆனாலும் பாக்தாத்தில் பலவீனமான அரசாங்கம் இருப்பது குர்து போராளிகளின் கரங்களையே பலப்படுத்தும். ஏனென்றால் இஸ்லாமிய அரசிடம் தமது ஆயுதங்களைத் தாரைவார்த்துவிட்டுத் தப்பியோடும் ஈராக்கிய ஆயுதப் படைகளுக்குக் கனரக ஆயுதங்களை வழங்குவதைவிடக் குர்து போராளிகளுக்கு அவற்றை வழங்குவது சாலச்சிறந்தது என்ற முடிவுக்கு அமெரிக்காவும், ஏனைய மேற்குலக நாடுகளும் வருவதற்கு பாக்தாத்தில் நிகழக் கூடிய சம்பவங்கள் வழிகோலும். இவ்வாறான கோணத்தில் நாம் பார்ப்போமானால் பாக்தாத்தைக் கைப்பற்றும் பாக்தாதியின் ஆசை, பார்சானிக்கே அனுகூலமாக அமையும் எனலாம்.

சங்கதி24
www.sankathi24.com
● செய்திகள்
● ஆய்வுகள்
● பிரான்ஸ்
● தமிழகம் மற்றும் பன்னாட்டுச் செய்திகள்
தாயகச் செய்திகளின் தேசியத்தளம்

# நினைவுக்கு என்றும் வினை!

01

– கந்தரதன்




தமிழர் தாயகப் பகுதிகளில் போரின்போது சிறிலங்கா இனவாத அரக்கர்களினால் படுகொலை செய்யப்பட்ட மக்களை நினைவு கூருவதைத் தடுத்து நிறுத்த சிறிலங்கா இராணுவத்தினரும் காவல்துறையினரும் வழமைபோன்று தமது கெடுபிடிகளை ஆரம்பித்துள்ளனர். வீதிகளில் வழமைக்கு மாறான சுற்றுக்காவல் நடவடிக்கைகளிலும் இவர்கள் ஈடுபட்டுள்ளதாகத் தாயகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவற்றையும் மீறி தாயகத்தில் மக்கள் தமது உறவுகளை நினைவில் கொள்ளத் தலைப்பட்டுள்ளனர். புலம்பெயர்தேசம் உட்பட தாயகத்தின் பல பகுதிகளிலும் மே 18 முள்ளிவாய்க்கால் வலிசுமந்த நினைவுகளை பல்வேறு வழிகளிலும் நினைவிற்கொண்டுள்ளனர்.

இந்த இனப் படுகொலையை ஒரு நினைவுதினமாக அனுட்டித்து வந்த நாங்கள் இம்முறை மே பதினொன்று முதல் மே பதினெட்டு வரையான காலப்பகுதியை தமிழ் இனப்படுகொலை வாரம் என அனுஸ்டிப்பது என்ற தீர்மானம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது என வடக்கு மாகாண சபையின் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்திருந்தார்.

நடந்து முடிந்த இறுதி யுத்தத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் உள்ளக அறிக்கையில் எழுபது ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இதைப்போல் ஒரு இலட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் தமிழ் இனப்படுகொலைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்கள்.

ஆகவே இந்த படுகொலைகளை நினைவு கூரக்கூடிய விதத்திலே மக்கள் பெரிய அளவிலே துணிந்து முன்வந்து அனுட்டிப்பதன் ஊடாகத்தான் நாங்கள் சர்வதேசத்திடம் நீதியை கோரி நிற்கின்றோம். எங்களுக்கு ஓர் அரசியல் தீர்வு தேவை என்ற விடயத்தை, பொறுப்புக் கூறலை சிங்கள அரசு உறுதிப்படுத்தவேண்டும். பாதிக்கப்பட்ட எங்களுடைய மக்களுக்கு நிவாரணம் நீதி கிடைக்க வேண்டும் என்பதை உலகத்திற்கு சொல்லக்கூடிய விதத்தில் மக்கள் ஆர்ப்பரித்து பல்லாயிரக் கணக்கில் எழவேண்டும்.

குறிப்பாக முள்ளிவாய்க்காலுக்கு அண்மையில் விஜயம் செய்த அமெரிக்காவின் உதவி இராஜாங்க செயலர் உயிரிழந்த மக்களுக்கு மலர் அஞ்சலி செலுத்தியுள்ளார். அவர்கள் செய்தது போன்ற அஞ்சலியை நாமும் முள்ளிவாய்கால் உட்பட அனைத்து இடங்களிலும் அஞ்சலி செலுத்துவது எந்த விதத்திலும் எந்த சட்டத்தையும் மீறும் செயலாக அமையாது.

அவ்வாறு நாம் அஞ்சலி செலுத்துகின்றபோது சிங்கள அரசின் படைகள் தடுக்குமாக இருந்தால் அதனை அமெரிக்கா உட்பட சர்வதேச சமூகம் நன்றாக புரிந்துகொள்ளும். ஆகவே எங்களுடைய மக்கள் தமது உறவுகளைப் பறிகொடுத்த மக்கள் ஆயிரக்கணக்கில் திரண்டு அனைத்து மாவட்டங்களிலும் ஒன்று கூடி உரிய இடங்களில் நடைபெறுகின்ற தமிழ் இனப்படுகொலை வார நிகழ்வுகளில் கலந்து கொள்வதோடு தாமும் அஞ்சலிகளை செலுத்த வேண்டும்.

இவ்வஞ்சலியை இலங்கை ஆட்சியாளர்கள் எவ்வளவு வன்முறைகள் பிரயோகித்து தடுத்தாலும் எமது மக்கள் கொல்லப்பட்டதனை அனுட்டித்தே காட்டுவோம் என்று உறுதிபடத் தெரிவித்திருந்த அவர், அதனை செயலிலும் காட்டிவிட்டார்.

அதாவது, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் வட மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிங்கம் கடந்த செவ்வாய்க்கிழமை முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் பகுதியில் உயிரிழந்த தமிழ் மக்களை நினைவுகூர்ந்து தீபமேற்றும் நிகழ்வொன்றை நடத்தியுள்ளார்.

சிறிலங்கா இராணுவத்தினால் கொல்லப்பட்டவர்களை நினைவு கூரும் வகையில் முள்ளிவாய்க்கால் மண்ணில் சுடர் ஏற்றி நினைவு கூரப்பட்டதனையடுத்து அங்கு சிறிலங்கா இராணுவத்தின் புலனாய்வு பிரிவும் காவற்துறையும் பெருமளவில் குவிக்கப்பட்டது. இதனால் அங்கு பெரும் பதற்ற நிலை ஏற்பட்டதோடு அச்சநிலையும் காணப்பட்டது. இதனால் தமது உறவுகளை முள்ளிவாய்க்கால் சென்று நினைவுகூர முடியாத நிலையும் அங்கு சிறிலங்கா இராணுவத்தினால் ஏற்படுத்தப்பட்டது.

கடந்த செவ்வாய்க்கிழமை காலை முள்ளிவாய்க்கால் சென்ற வடமாகாணசபை உறுப்பினர்கள் சிவாஜிலிங்கம், ரவிகரன், பிரதி அவைத் தலைவர் அன்ரனி ஜெயநாதன், வடமாகாணசபை முன்னாள் உறுப்பினர் மேரிகமலா குணசீலன், வலிவடக்கு பிரதேச சபை உப தலைவர் சஜீவன், வல்வெட்டித்துறை நகரசபை முன்னாள் உறுப்பினர் கோ.கருணானந்தராசா, வல்வெட்டித்துறையைச் சேர்ந்த பொ.சிவஞானசுந்தரம் ஆகியோர் நேரில் கலந்துகொண்டு இரு பொதுச் சுடர்களை ஏற்றி நினைவுரைகளை ஆற்றி எழுச்சியுடன் நினைவுகூர்ந்தனர்.

இதனையடுத்து அங்கு வந்த இராணுவ புலனாய்வாளர்கள் மற்றும்



காவல்துறையினர் அங்கு நின்றவர்களைப் படம் பிடித்ததோடு மிரட்டியும் இருந்தனர். இதனால் அப்பகுதியில் பெரும் பதற்றம் ஏற்பட்டது. இதேவேளை, போரில் உயிரிழந்த தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்களுக்காக தீபமேற்றப்படுவதாக காவல்துறையினருக்கு தகவல் கிடைத்தது. காவல்துறையினர் சம்பவ இடத்திற்கு சென்றபோது மாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கம் உள்ளிட்ட மூன்று பேரை அங்கு சந்தித்துள்ளனர்.

இதன்போது, தமது உறவினர்களும் யுத்தத்தில் உயிரிழந்தமை காரணமாக அவர்களுக்காக ஒரேயொரு தீபத்தை ஏற்றியதாக அவர் கூறியுள்ளார்.

கிடைத்த தகவல் அதுதான். ஒற்றையாட்சிக்குள் விடுதலைப் புலிகளை நினைவுகூர்ந்து இவ்வாறான நிகழ்வுகளை ஏற்பாடுசெய்ய முடியாது. அவ்வாறுசெய்தால் அது சட்டவிரோதமானது. எதிர்வரும் 18 ஆம் திகதியும் இவ்வாறான நிகழ்வொன்று இடம்பெறலாம் என காவல்துறையினர் அவதானமாக செயற்பட்டுவருகின்றனர் என்று ஊடகப் பேச்சாளர் ருவன் குணசேகர இது குறித்து தகவல் தெரிவித்தார்.

இதேவேளை முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு யாழ்.பல்கலைக்கழகத்திலும் நினைவுகூர ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. இதனையடுத்து யாழ். பல்கலை சுற்றாடலிலும் இராணுவத்தினர் கண்காணிப்பில் ஈடுபடத் தலைப்பட்டுள்ளனர்.

சிறிலங்காவில் மைத்திரி அரசு, இறந்தவர்களை நினைவுகூரத் தடையில்லை எனச் சர்வதேசத்தை ஏமாற்றும் முகமாகத் தெரிவித்திருந்தார். ஆனால், சிறிலங்காவின் அரச கைக்கூலிப் படைகள் தமிழ் மக்களின் நினைவேந்தலைத் தடுப்பதிலேயே குறியாகவுள்ளன.

இதற்கு புலத்தில் வாழும் எம்மவர்கள் தான் ஒன்றுசேர்ந்து தமது பலத்தை சர்வதேசத்தின் முன் நிலைநிறுத்திக் காட்டவேண்டும். இது எம் ஒவ்வொருவரின் கடமையுமாகும்!

(சூறையாடல்கள் தொடரும்)

யாழ்ப்பாண இராச்சியத்தின் வீழ்ச்சிக்குப் பின்னர் ஈழத் தீவில் முகிழ்த்து இருபது ஆண்டுகள் தளைத்தோங்கி நின்ற தமிழீழ நடைமுறை அரசை சிங்களம் அழித்து இவ்வா ரத்தோடு ஆறு ஆண்டுகள் கடந்து செல்கின்றன.

இது எவ்வாறு நடந்தது? இவ்வாறான நிலை ஏற்படுவதை எம்மால் ஏன் தடுத்து நிறுத்த முடியவில்லை? இவையெல்லாம் ஆறு ஆண்டுகளாக எம்மவர்களில் பலரைக் குடைந்து கொண்டிருக்கும் முக்கிய கேள்விகள்.

# சத்தியத்தின் சாட்சியாக

கலாநிதி சேரமான்

நோர்வேயின் அனுசரணையுடன் ஏற்படுத்தப்பட்ட போர் நிறுத்த ஒப்பந்தத்திற்கு வழிகோலிய தமது இராணுவ வெற்றிகளை அரசியல் வெற்றிகளாகத் தமிழீழ விடுதலைப் புலிகள் மாற்றியமைக்கத் தவறியதாலேயே இந்நிலை எழுந்தது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அடித்தொண்டு 'அரசியல் சாணக்கியர்களும்', உலக அரசியலின் நெழிவு சுழிவுகளைத் தமிழீழ விடுதலைப் புலிகள் சரியாகப் புரிந்து கொள்ளத் தவறியதாலேயே இந்நிலை ஏற்பட்டது என்று புலம்பெயர் தேசங்களில் உள்ள நாற்காலி அரசியல் 'விற்பன்னர்களும்', வளைந்து கொடாது கொண்ட கொள்கையில் தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் 'பிடிவாதமாக' நின்றதாலேயே இந்நிலை ஏற்பட்டது என்று கோத்தபாயவின் வீட்டு முற்றத்தில் ஞானம்பெற்ற கே.பி போன்ற போதிசத்துவர்களும் மாறிமாறி வியாக்கியானங்களை அளிக்க, அவற்றை மையப்படுத்திய வாதப்பிரதிவாதங்களோடு ஆறு ஆண்டுகளை நாம் கழித்து விட்டோம்.

இவ் வியாக்கியானங்களுக்கு மேலதிகமாக இன்னுமொரு வியாக்கியானத்தை முன்வைத்து, மற்றுமொரு சடலப் பரிசோதனையை நிகழ்த்துவது இப்பத்தியின் நோக்கமன்று. மாறாக தமிழீழத் தனியரசுக்கான வாய்ப்புக்கள் பற்றிய திடமான தரிசனத்தை இப்பத்தி முன்வைக்கின்றது.

முதலில் நாம் ஒரு விடயத்தைத் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். தமிழீழத் தனியரசு என்பது சாத்தியமற்றதொன்று என்ற எண்ணக் கருத்து 2009 மே 18இற்குப் பின்னர் தோற்றம் பெற்ற ஒன்றன்று.

ஆயுத எதிர்ப்பியக்கமாகத் தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டம் முகிழ்த்த 1972ஆம் ஆண்டாக இருந்தாலும் சரி, கறுப்பு யூலை படுகொலைகளின் எதிர்வினையாக ஆயுதப் போராட்ட இயக்கங்கள் புத்தெழுச்சி பெற்ற 1983ஆம் ஆண்டாக இருந்தாலும் சரி, இந்தியப் படைகளை எதிர்கொண்டு தமிழீழ விடுதலைப் புலிகள் வீரப்போர் புரிந்த 1987ஆம் ஆண்டின் இறுதி முதல் 1990ஆம் ஆண்டின் தொடக்கப் பகுதி வரையான காலகட்டமாக இருந்தாலும் சரி, சிங்களப் படைகளிடம் யாழ்ப்பாணம் வீழ்ச்சி கண்ட 1995ஆம் ஆண்டின் இறுதி மாதமாக இருந்தாலும் சரி, ஒட்டுசுட்டான் வரை நெருங்கி வன்னியை ஆக்கிரமிக்கும் நிலையை சிங்களப் படைகள் எட்டிய 1999ஆம் ஆண்டாக இருந்தாலும் சரி, இவ்வாறான கருத்தை முன்வைப்பதற்குப் பலர் இருந்தார்கள்.

அடிக்கொரு தடவை தாம்கூறிய இக்கருத்து 2009ஆம் ஆண்டு இதே வாரத்தில் முள்ளிவாய்க்காலில் பலித்துப் போனது இவர்களுக்குத் தித்திப்பான ஓர் செய்திதான். ஏனென்றால் தமிழீழத் தனியரசைத் தமது உயிர்மூச்சாக வரித்துத் தமது உயிர்களை ஈகம்செய்த முப்பத்தையாயிரம் தொடக்கம் நாற்பதுனாயிராம் வரையான மாவீரர்களையும், தமிழீழ தாயகம் முதல் உலகின் மூலை முடுக்கெங்கும் இம் மாவீரர்களுக்கு உறுதுணையாகத் நின்ற பல இலட்சம் தமிழர்களையும் விடத் தாம் அறிவாளிகள் என்று பீற்றிக் கொள்வதற்கு இவர்களுக்குக் கிடைத்த அரியதொரு வாய்ப்பாகவே முள்ளிவாய்க்கால் அமைந்தது எனலாம்.

ஆனாலும் முள்ளிவாய்க்காலில் தமிழீழ நடைமுறை அரசு அழிக்கப்பட்டது தமிழீழ தேசம் சந்தித்த மிகப்பெரியதொரு பின்னடைவே தவிர அதுவொரு நிரந்தரத் தோல்வியல்ல என்பதை வரலாற்றின் பக்கங்களைப் புரட்டிப் பார்த்தவர்களுக்கு நன்கு தெரியும்.

மனித குலம் நாகரீகத்தின் நுழைவாயிலில் காலடி வைத்த நாள் தொட்டு அரசுகள் தோற்றம் கொள்வதும், அவை பின்னர் வல்லரசுகளாக எழுச்சி கொள்வதும், பின்னர் அதே அரசுகள் தேய்ந்து, அழிந்து போவதும் வரலாற்றில் மாறிமாறி நடந்தேறும் நிகழ்வுகளே. வல்லரசுகளாகிப் பின்னர் தடயமேயின்றி அழிந்து போன அரசுகள் மீண்டும் எழுச்சி கொண்டு வல்லரசுகளாக விசுவரூபம் எடுத்த சம்பவங்களும் வரலாற்றில் உண்டு.

இதற்கான உதாரணம் எமது இனத்திலேயே இருக்கின்றது. சங்க காலத்தில் தென்னிந்தியாவில் வலிமை மிக்க பேரரசாக விளங்கிக் கிறிஸ்துவுக்குப் பின் மூன்றாம் நூற்றாண்டுக் காலப்பகுதியில் தேய்ந்து ஒடுங்கிச் சிற்றரசாக மாறிய சோழ அரசு, ஒன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் மீண்டும் புத்தெழுச்சியோடு பேரரசாகத் தளைத்தெழுந்து தென்னாசியாவையும், தென்கிழக்காசியாவையும் ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்து இந்து சமுத்திரப் பிராந்தியத்தை ஆட்சிசெய்தது வரலாறு.

வரலாற்றின் இப்படிப்பினை தனியரசுக்காகப் போராடி வரும் தேசிய இனங்களின் விடயத்திலும் பொருந்தும். ஈராக், ஈரான், சிரியா, துருக்கி, ஆர்மேனியா ஆகிய ஐந்து நாடுகளின் ஆக்கிரமிப்பில் இருந்து தமது தாயகத்தை விடுவிப்பதற்காகக் குர்து இன மக்கள் நிகழ்த்தி வரும் சுதந்திரப் போராட்டம் பல தசாப்தகால நீட்சியைக் கொண்டது. தனியரசை நிறுவும் இலட்சியப் பயணத்தில் இவர்கள் கொடுத்த உயிர்விலை அளவிட முடியாதது. இன்றும் தமது விடுதலைக்காகக் குருதி சிந்தும் குர்து இன மக்களின் சுதந்திரப் போராட்டம் பல தடவைகள் அழிவுக்கு ஆளாகியது. இனியும் இவர்களால் மீண்டெழ முடியாது என்று இவர்களின் எதிரிகள் எக்காளமிட்ட பொழுதுகளிலெல்லாம் இவர்கள் மீண்டெழுந்து போராடினார்கள். உயிர்விலை கொடுத்து உறுதியோடு தொடர்ச்சியாக இவர்கள் முன்னெடுத்த போராட்டங்கள் இன்று இவர்களை விடுதலையின் தலைவாசலில் கொண்டு வந்து நிறுத்தியுள்ளன. ஒரு வகையில் தமிழீழ மக்களுக்கு முன்னுதாரணமாக திகழ்பவர்கள் குர்து இன மக்கள் எனலாம்.

ஏனென்றால் 2009 மே 18 வரை வீறுகொண்டு போராடிய நாம், முள்ளிவாய்க்காலில் தமிழீழ நடைமுறை அரசு அழிக்கப்பட்டதன் விளைவாக ஏற்பட்ட தோல்வி மனப்பான்மையால் பீடிக்கப்பட்டவர்களாக ஒடுங்கிக் கிடக்கின்றோம். தமிழீழத் தனியரசு இனியும் சாத்தியமில்லை என்ற சிந்தனையால் சூழப்பட்டவர்களாக மீண்டும் நாடாளுமன்ற அரசியலையும், இந்தியாவையும், ஐக்கிய நாடுகள் மன்றத்தில் மேற்குலகம் நிறைவேற்றும் தீர்மானங்களையும் நம்பியவர்களாக இருக்கின்றோம்.

ஆனாலும் இன்று இல்லாவிட்டாலும் என்றோ ஒரு நாள் தமிழீழத் தனியரசு மலர்ந்தே தீரும் என்பதே வரலாறு புகட்டும் பாடம் என்பதைப் புரிந்து கொள்ளாதவர்களாகவே நாம் இருப்பது மிகவும் வேதனைக்குரியது.

தமிழீழ தேசியத் தலைவர் அவர்களின் தரிசனத்தை இவ்விடத்தில் மீள்பதிவு செய்தாயின், ஒரு தேசிய இனம் தனக்கான தனியரசை நிறுவுவது என்பது அவ்வினம் தனது தாயக பூமியை மீட்டெடுப்பதிலும், அதற்கு அனைத்துலக அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதிலுமே தங்கியுள்ளது எனலாம். எனினும் இவ்விரு நிகழ்வுகளும் நடந்தேறுவது என்பது வெறுமனவே ஒரு விடயத்தில் மட்டும் தங்கியிருப்பதன்று. மத்திய கிழக்கை நாம் எடுத்துக் கொண்டால், அங்கு இஸ்ரேல் என்றொரு அரசு உருவாகி இன்று நிலைபெற்று நிற்பதற்கு யூத மக்களின் ஆயுத–நிதி வலிமையும், அவர்களுக்கு அமெரிக்கா தலைமையிலான மேற்குலகம் துணைநின்றதும் முக்கிய காரணிகளாக இருந்தன எனலாம்.

அதேநேரத்தில் தென்னாசியாவில் வங்காளதேசம் என்றொரு அரசு உருவாகுவதற்கு இந்தியா என்ற பிராந்திய வல்லரசும், கிழக்கு ஆசியாவில் கிழக்குத் தீமோர் என்ற அரசு உருவாகுவதற்கு அவுஸ்திரேலியா என்ற பிராந்திய அரசும், கிழக்கு ஐரோப்பாவில் கொசவோ என்றொரு அரசு



உருவாகுவதற்கு அமெரிக்கா தலைமையிலான மேற்குலக வல்லரசுகளும் காரணமாக இருந்தன என்பதே வரலாறாகும்.

இவற்றைவிட ஒரு துளி குருதிகூட சிந்தாமல் அமைதியான பொதுவாக்கெடுப்பின் மூலம் தனியரசை நிறுவிய மொன்நிக்ரோவும் உலக வரலாற்றில் தனியிடத்தைப் பிடித்திருப்பதையும் நாம் மறக்கக்கூடாது.

எனவே எந்த விதத்தில் தமிழீழத் தனியரசு உருவாகும் என்பதை இன்று எவராலும் எதிர்வுகூற முடியாது போனாலும்கூட, வரலாறு காட்டும் படிப்பினைகளின் அடிப்படையில் நாம் நுணுகி ஆராயும் பொழுது, ஏதோ ஒரு வழியில், என்றோ ஒரு நாள் தமிழீழத் தனியரசு நிச்சயம் மலர்ந்தே தீரும் என்பதை மட்டும் எந்தவித ஐயமும் இன்றி உறுதியாகக் கூறலாம்.

அரசியலில் நிரந்தர நண்பனும் இல்லை, எதிரியும் இல்லை. நலன்களே நிரந்தரமானவை. ஒவ்வொரு உலக நாட்டினதும் வெளியுறவுக் கொள்கையும், அந்நாட்டினது நலனை அடிப்படையாகக் கொண்டே வகுக்கப்படும். ஆனால் இந்நலன்கள் எல்லாக் காலங்களிலும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. காலத்திற்குக் காலம் இவை மாறுபடுவதுண்டு.

ஈழத்தீவில் தமிழீழம் என்றொரு அரசு பிறப்பெடுப்பது தமது நலன்களுக்கு ஒவ்வானதல்ல என்று உலகின் வலிமை

(22ம் பக்கம் பார்க்க)

# நறுக்கென

## வாழ்நாளில் ராஜபக்சாக்கள் சிறை செல்வார்கள் என நினைக்கவில்லை



தான் நல்லவர் என்றால் தங்களுக்கு எதிராக சுமத்தப்படும் முறைப்பாடுகளுக்கு ஒரு போதும் பயப்படக்கூடாதென சமூக சேவைகள் மற்றும் நலத்துறை அமைச்சர் பீ.ஹரிசன் தெரிவித்துள்ளார்.

குளியாப்பிட்டியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.


அவர் மேலும் தெரிவிக்கையில், "ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ கைகளில் விலங்கு போட்டுக்கொண்டு விளக்கமறியல் செல்வார் என நாங்கள் யாரும் எதிர்பார்க்கவில்லை.

ராஜபக்சவின் சகோதரன் கைகளில் விலங்கு மாட்டிக்கொண்டு எங்கள் கண்களுக்கு முன் விளக்கமறியல் செல்வார்கள் என நாங்கள் யாரும் எதிர்பார்த்திருக்க மாட்டோம்.

இதனை அவர்களும் எதிர்பார்த்திருக்க மாட்டார்கள்." என்றார்.

*ஓடமும் ஒரு நாள் வண்டியில் ஏறும்... வண்டியும் ஒரு நாள் ஓடத்தில் ஏறும்...*

## ஐ.நா. அறிக்கையில் கோத்தா உள்ளிட்ட 40 பேர் மீது போர்க்குற்றச்சாட்டு?



ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில், சமர்ப்பிக்கப்படவுள்ள சிறிலங்கா குறித்த அறிக்கையில், 40 பேருக்கு எதிராக போர்க் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளதாக, கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று தகவல் வெளியிட் டுள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையத்தின் முன்னாள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை, நியமித்த விசாரணைக் குழுவின் அறிக்கையிலேயே, 40 பேர் மீது போர்க்குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இவ்வாறு போர்க்குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளவர்களின், முன்னாள் உயர்மட்ட பாதுகாப்பு அதிகாரி, சிறிலங்கா படையினருக்குத் தலைமை தாங்கிய மூத்த இராணுவ அதிகாரி ஒருவர் ஆகியோரும் உள்ளடங்கியுள்ளனர் என்றும் கொழும்பு ஆங்கில ஊடகம் குறிப்பிட்டுள்ளது.

முன்னாள் உயர் மட்டப் பாதுகாப்பு அதிகாரி என்று குறிப்பிடப்பட்டுள்ளது, சிறிலங்காவின் முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்சவாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

*கோத்தா. ஐ.நா. வைக்குது ஆப்பு. இன அழிப்புக் குற்றவாளிகள் தப்பியதாக சரித்திரம் இல்லை.*

## இளைஞர்களிடையே தமிழ்த் தேசிய உணர்வை விதைக்க வேண்டும்



தமிழர்களது பாரம்பரியம், கலை, கலாச்சாரங்களை தொடர்ச்சியாக தக்கவைக்க வேண்டுமாக இருந்தால் இளைஞர்கள் மத்தியில் தமிழ்த் தேசிய உணர்வு ஊட்ட வேண்டும் என மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேந்திரன் தெரிவித்துள்ளார். அதன்மூலம் தான் நாம் எமது அரசியல் பலத்தினை தக்கவைத்துக்கொள்ள முடியும் எனவும் அவர் கூறியுள்ளார்.

மட்டக்களப்பு சின்ன ஊறனி காந்தி ஸ்டார் விளையாட்டுக் கழகத்தின் சித்திரை புத்தாண்டு விளையாட்டு நிகழ்வு அதன் தலைவர் கே.முரளி தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுபபினர்களான பொன்.செல்வராசா, பா.அரியநேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

*அண்ணை அரியநேந்திரன் முதலில் ஐயா சம்பந்தருக்கும். சுமந்திரனுக்கும் தமிழ்த் தேசியம் என்றால் என்ன என்று படிப்பியுங்க...*

## நாமலின் மெய்ப்பாதுகாவலருக்கு விளக்கமறியல் நீடிப்பு

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கலந்து கொண்ட கூட்ட மொன்றிற்கு துப்பாக்கியுடன் சென்றதாக குற்றம்சுமத்தப்பட்டு கைது செய்யப்பட்ட இராணுவ சிப்பாய்க்கு இம் மாதம் 19ஆம் திகதி வரை விளக்கமறியல் நீடிப்பு செய்யப்பட்டுள்ளது.

அங்குனுகொலபெலெஸ்ஸ நீதவானின் உத்தரவுக்கமையவே குறித்த இராணுவ சிப்பாய்க்கு விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த மாதம் 25ஆம் திகதி அங்குனுகொலபெலெஸ்ஸ பிரதேசத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் இடம்பெற்ற கூட்டத்திற்கு துப்பாக்கியுடன் சென்றதாக குற்றம் சுமத்தப்பட்ட வீ.ஜ.ருவண் சேனகுமார என்ற இராணுவ சிப்பாய்க்கே விளக்கமறியல் நீடிப்பு செய்யப்பட்டுள்ளது.

அச்சந்தர்ப்பத்தில் குறித்த சிப்பாய் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்சவின் மெய்ப்பாதுகாவலராக செயற்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இராணுவ சிப்பாயின் கையில் இருந்தது தண்ணீர் போத்தலே என்று நாமல் வலியுறுத்தியுக்ளார்

*துப்பாக்கி தண்ணீர் போத்தலாக மாறும் அதிசயம்... ராஜபக்ச குடும்பத்தில்தால் நடக்கும்...*

## மிலிபான்டை பார்த்து மகிந்தவும் பழக வேண்டும் — சம்பிக்க ரணவக்க



பிரித்தானிய தொழில் கட்சித் தலைவர் எட் மிலிபான்ட் தேர்தலில் தோல்வி கண்டு பதவி விலகியதைப் போன்று, இலங்கை அரசியல்வாதிகளும் நடந்துகொள்ள வேண்டும் என அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் முரண்பாடுகள் களையப்படாவிட்டால் அக்கட்சி அழிந்து விடும். ஐ.தே.கட்சி ஆட்சி அமைக்கும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அமைச்சர் கருத்து வெளியிட்டார். மேலும் தெரிவிக்கையில்,

பிரித்தானியாவை அனைத்திற்கும் நாம் உதாரணமாக எடுத்துக்கொள்ளவிட்டாலும் அண்மையில் நடைபெற்ற தேர்தலில் தோல்வி கண்ட தொழிற்சங்ககட்சி தலைவர் மிலிபான்ட் தோல்வியை ஏற்றுக் கொண்டு தனது பதவியை இராஜினாமா செய்து விலகி விட்டார்.

எனவே எமது நாட்டில் தோல்வி கண்ட தலைவர்களும் மிலிபான்டை முன்னுதாரணமாக எடுத்துக்கொள்ள வேண்டும் என்றும் அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

*அண்ணை சம்பிக்க ரணவக்க. மகிந்தவையும் மிலிபான்டையும் ஒப்பிட்டு மிலிபான்டை மலினப்படுத்தாதீங்க...*

## மங்களவிடம் ரூ. 1 பில்லியன் நட்டஈடு கேட்கும் மகிந்த



வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவிடம் ஒரு பில்லியன் ரூபாய் நட்டஈடு கேட்டு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் சார்பில் கோரிக்கை கடிதம் ஒன்றை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதியின் சார்பில் சட்டத்தரணி அத்துல பிரியதர்தன டி சில்வாவே இந்த கோரிக்கை கடிதத்தை கடந்த செவ்வாய்க்கிழமை (12) அனுப்பி வைத்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை அவதூறு செய்தல் மற்றும் அவமதித்தல் ஆகிய குற்றச்சாட்டுக்களே மங்கள சமரவீர மீது சுமத்தப்பட்டுள்ளன.

மகிந்தவின் பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் செயற்பட்ட மங்கள சமரவீரவிடமிருந்து ஒரு பில்லியன் ரூபாய் நட்டஈடு கோரப்பட்டுள்ளது.

அந்த நட்டஈட்டு தொகையை 21 நாட்களுக்குள் வழங்காவிட்டால் அவருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்படும் என்றும் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

*மகிந்த தமிழ் மக்களுக்கு எத்தனை ட்ரில்லியன் நட்ட ஈடு கொடுக்க வேண்டும்...?*

## என்னை சிறைப்பிடிக்கும் முயற்சியில் ரணில் — மகிந்த



"எனது மீள்வருகை அரசுக்கு அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

புலம்பெயர் தமிழர்களின் தேவைக்காக என்னைக் கைதுசெய்ய அரசு முயற்சிக்கின்றது." இவ்வாறு கூறியுள்ளார் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ.

"பழிவாங்கலின் பின்னணியில் பிரதமர் ரணிலே உள்ளார். என்னையும் குற்றவாளியாக்கி பழிவாங்கவே ரணில் முயற்சிக்கின்றார். ஆனால், சவால்களுக்கு முகம்கொடுக்க நான் தயார்" என்றும் அவர் கூறியுள்ளார்.

*மகிந்த. எதற்கும் புலம் பெயர் மக்கள் என்று புலம்பி. இறுதியில் மறியலுக்குள்ளும் புலம்பெயர் மக்கள் என்று புலம்புவீரோ?*

## பயங்கரவாதிகளுக்கு அஞ்சலி செலுத்த முடியாது — கரு ஜயசூரிய



நாட்டில் பயங்கரவாதிகளுக்காக அஞ்சலி செலுத்த முடியாது என பௌத்த சாசன அமைச்சர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

எனினும் போரில் உயிரிழந்த தங்களின் சொந்தங்களுக்காக அஞ்சலி செலுத்த வடக்கு மக்களுக்கு உரிமையுண்டு என அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது பாரியளவில் ஊழல் மோசடிகள் இடம்பெற்றுள்ளன. இந்த விடயங்கள் குறித்து விரைவில் அறிக்கையொன்று வெளியிடப்படும். என கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

*பயங்கரவாதிகளுக்கு அஞ்சலி செலுத்த முடியாதெனில். இராணுவத்தினருக்கு அஞ்சலி செலுத்த முடியாதே?*

# தமிழ் மண்ணில் என்ன நடக்கிறது?

தாயகத்தில் இருந்து கதிர் செல்லமுத்து

தமிழ்க் கட்சிகள் ஒன்றுபட வேண்டும். ஒற்றுமைதான் தேவை. அவ்வாறு ஒற்றுமைப்பட்டால் தான் தமிழ் மக்கள் உரிமைகளைப் பெற முடியும் என்ற குரல் அன்றிலிருந்து இன்றுவரை எழுந்துகொண்டே இருக்கிறது. போராளிக் குழுக்கள் ஒற்றுமையுடன் இருந்திருந்தால் இவ்வாறு பாரிய பின்னடைவு ஏற்பட்டிருக்காது என்றும் கூறுகின்றனர். இன்று கட்சி அரசியல் நடத்துபவர்களின் நிலைக்கும் போராடியவர்களின் இலட்சியத்திற்கும் நிறைய வேறுபாடுகள் இடைவெளிகள் உள்ளன. எனவே போராட்டத்தையும் கட்சி அரசியல் வாதிகளையும் ஒப்பிட்டுப் பார்ப்பதும் பொருத்திப் பார்ப்பதும் வெவ்வேறான இலட்சியங்களை ஒன்றாக்குவது போலாகும்.

தமிழர் தரப்பு அரசியல் கட்சிகளை ஓரணிக்குள் கொண்டு வரும் முயற்சி 1956 நாடாளுமன்றப் பொதுத் தேர்தலுக்குச் சற்று முன்னர் தான் முதன் முதலில் மேற்கொள்ளப்பட்டதாகும். அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரசிலிருந்து சா ஜே வே. செல்வநாயகம். டாக்டர் இ மு வி. நாகநாதன். கு.வன்னியசிங்கம் போன்ற தலைவர்கள் பிரிந்து தமிழரசுக் கட்சியைத் தோற்றுவித்த போது பிரிய விடாமல் ஒற்றுமையை ஏற்படுத்த எவரும் முன்வரவில்லை. இது நடந்தது 1949 இல் ஆகும். இதன் பின்னர் 1952 இல் பொதுத் தேர்தல் நடைபெற்றது. அப்பொழுதும் எவரும் ஒற்றுமை பற்றிப் பேசவில்லை. ஆனால் ஏழு ஆண்டுகள் கடந்த பின்னர் 1956 இல் உச்சநீதிமன்றப் பிரதம நீதியரசராக இருந்த செ.நாகலிங்கம் தலைமையில் ஒற்றுமைக் கூட்டணி ஏற்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அது பலனளிக்கவில்லை. ஏன் பலனளிக்கவில்லை எனில் அது ஒரு தேர்தல் கூட்டணியாக மட்டும் அமைய வேண்டும் என்று சிலர் விருப்பப்பட்டதே காரணமாகும்.

தமிழ் மக்களின் பிரச்சினையை எந்த அடிப்படையில் எதிர்கொள்வது. தீர்வுத் திட்டம் எத்தகைய அரசியல் தீர்வு மூலம் காண்பது போன்றவற்றில் எந்தவித உடன்பாடும் காணாமல் யார் யார் எந்தெந்தத் தொகுதிகளில் போட்டியிடுவது பிரச்சினைகளின் தீர்வைப் பற்றிச் சிந்திக்காது நாடாளுமன்றத்துக்குப் பிரச்சினையில்லாமல் எப்படிப் போவதிலேயே ஒற்றுமை ஏற்படுத்த முயன்றனர். இலட்சியம் அடிப்படைக் கொள்கை என்பவற்றை மூலாதாரமாக வைத்து ஒரே குரலில் நாடாளுமன்றத்தில் பணியாற்றக் கூடிய கூட்டணியே அமைய வேண்டும் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சி வலியுறுத்தியது. இதனை மற்றவர்கள் ஏற்றுக்கொள்ளாததால் அன்று கூட்டணி முயற்சி வெற்றியளிக்கவில்லை. ஆனால் மக்கள் பெருமளவில் ஒற்றுமைப்பட்டு தமிழரசுக் கட்சிக்குப் பெரு வெற்றி அளித்தனர். கட்சிகளின் ஒற்றுமையிலும் பார்க்க கொள்கை உறுபாடுள்ள கட்சியை மக்கள் தங்கள் ஒற்றுமை மூலம் காட்டினர். மக்களின் ஒற்றுமைதான் அடிப்படையில் பலமானது என்பதை அதன் பின்னர் நடந்த தேர்தல்களிலும் ஆயுதப் போராட்டத்திலும் மக்கள் காட்டினர்.

**சிதறடிக்கப்பட்ட ஒற்றுமை**

1970 இல் சிறிமாவோ பண்டாரநாயக்க தேர்தலில் வெற்றி பெற்ற பின்னர் புதிய அரசியல் யாப்பினைத் தயாரிக்க முனைந்த பொழுது தமிழ் மக்களை ஒற்றுமைப்படுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. கட்சிகளுக்கு அப்பால் நின்றவர்களின் முயற்சிகளால் தமிழர் கூட்டணி அமைக்கப்பட்டது. அரசியல் யாப்பு அவையில் தமிழர் கூட்டணி சார்பில் குறைந்த பட்சத் தீர்மானங்கள் முன்வைக்கப்பட்டன. தமிழரசுக் கட்சியும் தமிழ்க் காங்கிரசும் வேறு சில தீர்மானங்களையும் முன்வைத்தன. தமிழர் கூட்டணியினதும் தமிழரசுக் கட்சியினதும் திருத்தத் தீர்மானங்களை ஆனந்தசங்கரி – அருளம்பலம் – தியாகராசா ஆகிய தமிழ்க் காங்கிரசைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதிர்த்து வாக்களித்தனர். ஆனால் தமிழர் கூட்டணியில் காங்கிரசும் இணைந்திருந்ததனால் இவர்களும் தமிழர் கூட்டணியிலேயே இருந்தும் தமிழர் கூட்டணியின் திருத்தங்களை எதிர்த்தமையுடன் தாங்கள் சார்ந்த காங்கிரசினால் கொண்டுவரப்பட்ட திருத்தத் தீர்மானங்களையும் கைவிட்டுத் தங்கள் கட்சிக்கும் துரோகம் செய்தனர். முக்கியமான தருணத்தில் இவர்கள் இவ்வாறு நடந்து கொண்டமை தமிழ் மக்களின் ஒற்றுமையைச் சிதறடிக்கும் செயலாகவே நோக்கப்பட்டது. இதிலிருந்து கட்சிகளின் ஒற்றுமை என்பது கொள்கைகளின் அடிப்படையில் உறுதியுடன் மேற்கொள்ளப்பட வேண்டிய ஒன்று என்பதற்கான இரண்டாவது எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது. மக்கள் தான் ஒற்றுமைப்பட்டு இவ்வாறானவர்களைத் தூக்கி வீச வேண்டும் இவர்களைப் போன்றவர்களை ஒற்றுமையாக்கலாம் என்பது பயன் தரும் செயலாக அமையமாட்டாது.

1976 இல் நடந்த முதலாவது தமிழர் கூட்டணியின் மாநாட்டில் கட்சியின் பெயர் தமிழர் கூட்டணி. தமிழர் விடுதலைக் கூட்டணி எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. அமரர்கள் ஜீ.ஜீ. பொன்னம்பலமும் சா.ஜே.வே செல்வநாயகமும் இணைத் தலைவர்களாகத் தெரிவானார்கள். (இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் தொண்டமான் சில விதிவிலக்குடன் தலைவராக இணைக்கப்பட்டார்). யார் அடுத்த தேர்தலில் போட்டியிடுவது என்ற மோதல்கள் இல்லாமல் அவர்கள் இயங்கினார்கள். 4 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிரான வழக்கில் கட்சி பேதம் காட்டாது ஜீ.ஜீ பொன்னம்பலம் வாதாடி வெற்றி பெற்றார். அடுத்தது இவ்விரு தலைவர்களும் சாவடைந்தபடியால் தமிழர் விடுதலைக் கூட்டணிக்குள் தமிழரசு – காங்கிரசு என்று உள் மோதல் ஏற்பட்டது. தமிழர் நலனிலும் பார்க்க யார் யார் நாடாளுமன்றம் செல்வது என்ற போட்டி ஏற்பட்டது. இதில் குமார்பொன்னம்பலம் ஓரம் கட்டப்பட்டார். அதனால் அவர் வழக்கு மன்றம் சென்று தமிழ்க்காங்கிரசைத் தனிக் கட்சியாக ஆக்கினார். தமிழர் விடுதலைக் கூட்டணி தனித்துத் தமிழரசுக் கட்சியையும் காங்கிரசில் இருந்த ஒன்றோ இரண்டு பேர்களையும் கொண்டதாக இயங்கியது.

**இன்று கட்சி அரசியல் நடத்துபவர்களின் நிலைக்கும் போராடியவர்களின் இலட்சியத்திற்கும் நிறைய வேறுபாடுகள் இடை வெளிகள் உள்ளன.**

ஓரங்கட்டப்பட்ட குமார் பொன்னம்பலம் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் தமிழர்களின் உரிமைக்காகவும் எழுதியும் பேசியும் அளப்பரிய பங்காற்றினார். அதனால் அவரது உயிர் பறிக்கப்பட்டது. அவர் மாமனிதராக மதிக்கப்பட்டார். இதிலிருந்து வெறும் ஒற்றுமைக் குரல் என்பது பயனற்றது என்பதை அனைவரும் புரிந்து கொள்ளமுடியும். செல்வாவினாலும் ஜீ.ஜீ யினாலும் தோற்றுவிக்கப்பட்ட தமிழர் விடுதலைக் கூட்டணி இன்று தமிழரசுக் கட்சியும் தமிழ்க் காங்கிரசுக் கட்சியும் இல்லாமல் தனி ஒருவரிடம் உள்ளது. இதற்கான முழுப்பொறுப்பும் சம்பந்தனையே சாரும். தமிழினத்தின் ஒற்றுமையில் இலட்சியத்தில் உண்மையான அக்கறை இருந்திருந்தால் தமிழர் விடுதலைக் கூட்டணியை இவ்வாறு தாரைவார்த்துக் கொடுத்திருக்கமாட்டார்.

விடுதலைப் பயணத்தின் பொழுது தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பிரிவினையைக் கோர முடியாத படியால் விடுதலைக்குச் சமாந்திரமாகத் தேசத்தை வலியுறுத்தவும் தேசியத்தை நிலைநாட்டவும் எனச் சில கட்சிகளை இணைத்துத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்று பெயர் வைத்தார் தலைவர் பிரபாகரன். ஆயுதப் போராட்டத்தில் ஏற்பட்ட பாரிய பின்னடைவால் ஆயுதங்கள் மௌனிக்கப்பட்ட நிலையில் பெயரில் தன்னை முன்னிலைப்படுத்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ்த் தேசம் பற்றிப் பேசுவதை இனவாதம் என்கின்றது. இந்நிலையில் தமிழ்க் கட்சிகள் எல்லாம் வேற்றுமைகளைக் களைந்து ஒன்றுபட வேண்டும் என்ற குரலும் ஒலிக்கின்றது. ஒற்றுமை அவசியம் வேண்டும். ஆனால் என்ன அடிப்படையில் இவ்வொற்றுமை உண்டாக வேண்டும் என்பதுதான் மிக முக்கியம்.

தற்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் உட்கட்சிப் போட்டி மலிந்துள்ளது. தேர்தல் நெருங்குவதால் நாடாளுமன்றக் கதிரைகளுக்கான போட்டி மேலோங்கியுள்ளது. இதைச் செய்தித் தாள்கள் உறுதிப்படுத்துகின்றன. இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு 51 விழுக்காடு நாடாளுமன்றத் தொகுதிகளிலும் இதர 3 கட்சிகளுக்கு 49 விழுக்காடு தொகுதிகளும் ஏற்றுக் கொள்ளப்பட்டாலே இலங்கைத் தமிழரசுக் கட்சி ஒப்பந்தத்தில் கையெழுத்திடும் என்று தெரிவித்துள்ளனர். 1956 இல் செல்வா தொகுதிகளை விடுத்து இலட்சியத்தில் இணைவோம் என்றார். ஆனால் இன்று அவர் வழியில் செல்வதாகக் கூறுவோர் தொகுதிகளின் அடிப்படையில் இணைவோம் என்று கூறுகின்றனர். இவர்களது இலட்சியங்கள் தமிழ் மக்களின் உரிமைகள் அல்ல நாடாளுமன்றப் பதவிகள் தான் என்பது புலனாகிறது. இவ்வா



றான நிலையில் மேலும் சில கட்சிகளை இக் கூட்டமைப்பில் இணையுமாறு வேண்டுகோள் விடுக்கின்றனர். அவ்வாறு சில கட்சிகள் இணையும் நிலையில் 51 விழுக்காடு தமிழரசுக்கு என்றால் மிகுதி 49 விழுக்காட்டில் தான் இதர கட்சிகள் நாடாளுமன்றத்துக்குச் செல்ல முடியும். அப்படியானால் சில வேளைகளில் பாதி அல்லது முக்கால் மனிதர்கள் தான் நாடாளுமன்றம் செல்ல வேண்டிய நிலை ஏற்படும். நாடாளுமன்றப் பதவிகளைப் பெரிதென நினைக்காமல் தமிழினத்தின் தேசியத்தை நிலைநாட்ட ஒன்றுபட வேண்டும் என்பது தான் மக்களின் குரல்.

சிறீலங்காவின் தேசியத்தை நிலை நிறுத்தும் தேசிய நிறைவேற்றுச் சபையில் இருந்து கொண்டு தமிழ்த் தேசியம் பற்றிப் பேசமுடியாது. அதனால் தான் அவ்வாறு தேசியம் தேசம் பற்றிப் பேசுவோரை இனவாதம் பேசுவதாகத் தமிழ்க் கூட்டமைப்பின் தலைவர் இழிவுபடுத்துகின்றார். மாறாக உண்மையாகத் தமிழ்த் தேசத்தின் தேசியத்தை நிலைநாட்டப் பாடுபடுவீர்களானால் நாடாளுமன்றத்தில் தொகுதிகள் தாருங்கள் என்று கேட்காமல் தேர்தலில் போட்டியிடாமல் முழுமையாக ஒத்துழைப்போம் ஒன்றுபடுவோம் என்ற குரலும் ஒலித்துக் கொண்டிருக்கின்றது என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

எத்தனை ஆயிரம் பேர் வித்தாகிப் போனார்கள். எத்தனை இலட்சம் பேர் உடலையும் உயிரையும் உரமாக்கி விட்டுச் சென்றுள்ளார்கள். இவர்களுடைய இலட்சியத்தை நிறைவேற்றுவதற்காகப் பதவிகளைத் தியாகம் செய்யக் கூடாதா? உயிரினும் பெரிதா நாடாளுமன்றக் கதிரைகள். தமிழ்க் கட்சிகள் ஒற்றுமைப்பட வேண்டுமென்றால் அவர்கள் தமிழ்த் தேசியத்தை அடையும் வகையில் எதனையும் தியாகம் செய்யும் வகையில் இலட்சியப்பற்றோடு ஒன்றுபட வேண்டும். ஏதோ ஒரு கட்சியுடன் ஒன்றிணைவோம் என்பது தமிழினத்தை மீள அடிமையாக்கும் கூட்டாகவே அமையும்.

இளம் + தளம் + புலம் = தாயகம்

# தமிழர்களை துண்டாடிய முள்ளிவாய்க்கால் படுகொலை!

**வீ. ஆர். வரதராஜா**

முள்ளிவாய்க்கால் ஆறாம் ஆண்டு நினைவேந்தல் வாரம் புலம்பெயர் நாடுகளில் ஆரம்பமாகிவிட்டது.

18ம் திகதி நடைபெறும் நினைவேந்தலின் போது சர்வதேசத்திடம் [illegible] செய்தி ஒன்றை புலம்பெயர் தமிழர்கள் வழங்கவுள்ளனர்.

அனைத்து தமிழ் அமைப்புகளும் இணைந்து இரண்டு முக்கிய கோரிக்கைகளை முன்வைத்துள்ளன. முள்ளிவாய்க்கால் அவலத்தை முடிமறைக்க எடுக்கப்படும் முயற்சிகளை அவை கடுமையாகக் கண்டித்துள்ளன.

போர்க்குற்றங்களை விசாரிக்க சர்வதேச சுதந்திர ஆணைக்குழுவொன்றை ஐ.நா. பாதுகாப்புச்சபை நியமிக்கவேண்டும். தாயகத் தமிழ் மக்களுக்கான நீதிக்குத் தீர்வு காணப்படவேண்டும். பிரித்தானிய அரசாங்கம் [illegible] மக்களுக்கு வழங்கப்பட்ட [illegible] தமிழ் மக்களுக்கும் வழங்கப்பட வேண்டும். சிறிலங்காவிலிருந்து பிரிந்துசெல்ல விரும்புகின்றார்களா என்ற கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பு நடத்தப்படவேண்டும்.

> **பிரான்ஸ் தலைநகரான பாரிசில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரம் கடந்த திங்கள் முதல் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.**

இந்த இரண்டு கோரிக்கைகளை முன்வைத்து நாளை புலம்பெயர் தமிழர்கள் மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்துகொள்ளவுள்ளனர். கருத்துக்கணிப்பு வாக்கெடுப்பை ஐ.நா. தமது பாதுகாப்பிலிருந்து நடத்தவேண்டும்.

அந்த வாக்கெடுப்பில் புலம்பெயர் தமிழர்களும் கலந்துகொள்ள ஐ. நா. ஏற்பாடு செய்ய வேண்டும் என்ற கருத்தும் முன்வைக்கப்பட்டுள்ளது. நாளைய பேரணிகளில் இவை வலியுறுத்தப்படவுள்ளன.

எனவே, இம்முறை நினைவேந்தல் புலம்பெயர் தமிழ் மக்களின் எதிர்ப்பை சர்வதேசத்திற்குத் தெரிவிக்கும் நிகழ்வாக அமைகின்றது. இதனாலேயே அந்தந்த நாடுகளின் நாடாளுமன்றங்களின் எதிரில் தமது [illegible] களை அவர்கள் ஏற்பாடு செய்துள்ளனர்.

18ம் திகதி பெல்ஜியத்தில் அமைந்துள்ள ஐரோப்பிய நாடாளுமன்றத்தின் முன் மாபெரும் ஆர்ப்பாட்டம் இடம்பெறவுள்ளது. தமிழ் அமைப்புகள் பல ஒன்றிணைந்து பிற்பகல் 4 மணிக்கு இதனை நடாத்தவுள்ளன).

அந்நிலை பிற்பகல் 2 மணிக்கு பேரணி [illegible] நகர்வதற்கு [illegible] முத்தைச் சென்றடையவுள்ளது).

சர்வதேச விசாரணை ஆரம்பிக்கப்பட வேண்டும், தாயகத்தில் கருத்துக்கணிப்பு இடம்பெறவேண்டும் என்ற கோரிக்கைகள் அங்கு முன்வைக்கப்படவுள்ளன.

பிரித்தானியாவில் லண்டன் நகரில் இடம்பெறவுள்ள ஆர்ப்பாட்டத்தில் தமிழர்கள் ஆயிரக்கணக்கில் கலந்துகொள்ளவுள்ளனர்.

அதில் கலந்துகொள்ளுமாறு சகல அமைப்புகளும் கடந்த சில நாட்களாகவே தீவிரமான பரப்புரைகளில் ஈடுபட்டு வருகின்றன.

லண்டன் மத்தியிலிருந்து பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகும் பேரணி வெஸ்ட்மினிஸ்டர் பகுதியில் அமைந்துள்ள நாடாளுமன்றத்தின் எதிரே 4 மணிக்கு சென்றடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மிகப்பெரிய எண்ணிக்கையில் தமிழர்கள் இதில் கலந்துகொள்வார்கள் என்பதால் நகரத்தின் போக்குவரத்து ஏற்பாடுகள் பாதிக்கப்படலாம் என காவல்துறையினர் குறிப்பிட்டுள்ளனர். பல [illegible] கல்லூரிகளின் மாணவர்கள் இப்பேரணியில் கலந்துகொள்ள வசதி செய்து கொடுக்குமாறு தமிழ் அமைப்புகள் அதிபர்களை கடித மூலம் கேட்டுள்ளனர். போரில் கொல்லப்பட்ட [illegible] போனோரின் படங்களை தாங்கிக்கொண்டு [illegible] இதில் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

சர்வதேச விசாரணை ஆணைக்குழு அமைத்தல், கருத்துக்கணிப்பு நடத்துதல் ஆகிய இரு கோரிக்கைகளும் இங்கு முன்வைக்கப்படவுள்ளன.

கனடாவில் இம்முறை மக்கள் பெருமளவில் பேரணியில் கலந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. தமிழர்கள் அதிகமாக வாழும் ரொறன்ரோ பகுதியில் பேரணிக்கான மாபெரும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

ஸ்காபரோ அல்பேர்ட் காம்பெல் சதுக்கத்தில் 18ம் திகதி மாலை 5 மணிக்கு மிகப்பெரிய நினைவேந்தல் பேரணி இடம்பெறவுள்ளது. முள்ளிவாய்க்காலில் மடிந்த மக்களுக்கும் போராளிகளுக்கும் நினைவஞ்சலி [illegible] முக்கிய நிகழ்வாக அமையவுள்ளது.

கனடாவாழ் புலம்பெயர் தமிழர்களும் விசாரணைக்குழு அமைத்தல், கருத்துக்கணிப்பு ஆகியவற்றைக் கோருகின்றனர். அமெரிக்காவில் நியூயோர்க் ஐ. நா. தலைமையகத்தின் எதிரே மாபெரும் நினைவேந்தல் ஆர்ப்பாட்ட பேரணி இடம்பெறவுள்ளது. 18ம் திகதி 4 மணிக்கு இடம்பெறும் இப்பேரணியில் பெருந்திரளான தமிழர்கள் பங்குபற்றவேண்டும் எனக் கேட்கப்பட்டுள்ளனர்.

ஐ.நா.வின் எதிரே நடைபெறும் இப்பேரணியின்போது புலம்பெயர் தமிழர்களின் இரு கோரிக்கைகள் அடங்கிய மகஜர் கையளிக்கப்பட உள்ளது. இப்பேரணியில் கனடாவாழ் புலம்பெயர் தமிழர்கள் பலரும் கலந்துகொள்ள ஏற்பாடாகியிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

அத்தினத்தில் நினைவேந்தல் வாரத்தை முன்னிட்டு [illegible] இசை நிகழ்ச்சி ஒன்றும் ஏற்பாடாகியுள்ளது. 17ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு "மண்வாசனை" எனும் இந்த இசைநிகழ்ச்சி முள்ளிவாய்க்கால் நினைவாக இடம்பெறுகின்றது.

பிரான்ஸ் தலைநகரான பாரிசில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரம் கடந்த திங்கள் முதல் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

காலை 9 மணிமுதல் மாலை 5 மணிவரை [illegible] கண்காட்சி இடம்பெற்று வருகின்றது. 16ம் திகதி மாலை 5 மணியுடன் இந்த கண்காட்சி நிறைவடைகின்றது. 18ம் நாள் காலை 9:30 மணிக்கு முள்ளிவாய்க்கால் நினைவுக் [illegible] அமைந்துள்ள [illegible] ஆகிய பகுதிகளில் தமிழர்கள் கூடவுள்ளனர். அங்கு [illegible] வணக்கம் செலுத்தவுள்ளனர்.

பிற்பகல் 2 மணிக்கு பாரிஸின் நகர மத்தியில் ஒன்றுகூடும் தமிழர்கள் [illegible] பேரணியாகச் [illegible] சென்றடையவுள்ளனர்.

அங்கு பிற்பகல் 4:30 மணிக்கு பேரணி சென்றடைந்ததின் பின் மாபெரும் ஆர்ப்பாட்டக்கூட்டம் இடம்பெறவுள்ளது. இக்கூட்டத்தில் பங்குபற்றுமாறு கடந்த சில வாரங்களாக தமிழர்கள் மத்தியில் பரப்புரை செய்யப்பட்டு வந்தது.

பிரான்ஸ் ஆர்ப்பாட்டத்திலும் கருத்துக் கணிப்பு, சர்வதேச விசாரணை ஆணைக்குழு கோரிக்கைகள் இரண்டும் முன்வைக்கப்படவுள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

ஜேர்மனியிலும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரம் கடந்த 11ம் திகதியே ஆரம்பமாகிவிட்டது. தலைநகரான பேர்லினில் இது தொடர்பான பல்வேறு நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன. போரின் வடு தொடர்பான கண்காட்சி இரண்டு நாட்கள் இடம்பெறுகின்றன.

இக்கண்காட்சி கடந்த 11ம் திகதி ஆரம்பித்து 15ம் திகதி மாலை ஆறு மணிக்கு முடிவுற்றது. தமிழர்களின் அவலம் [illegible] புகைப்படங்கள் மூலமாக காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. ஜேர்மன் மொழியிலும் ஆங்கில மொழியிலும் மொழிபெயர்க்கப்பட்டிருந்த [illegible] ஜேர்மனியர்களும் ஆர்வம் காட்டி வந்திருந்தனர்.

13, 14ம் திகதிகளில் தலைநகர் பேர்லினில் முக்கிய தெருக்களில் துண்டுப் பிரசுரங்களை தமிழ் இளையோர் விநியோகித்தனர். கருத்துக்கணிப்பு வேண்டும், சர்வதேச விசாரணை அவசியம் ஆகிய கோரிக்கைகள் அவற்றில் விடுக்கப்பட்டிருந்தன.

15ம் திகதி தலைநகரில் 'முள்ளிவாய்க்கால் முற்றம்' என்ற சிறுவர் நூல்கள் வெளியிடப்பட்டன. ஜேர்மன் தமிழ் மகளிர் அமைப்பினர் இதனை ஏற்பாடு செய்திருந்தனர்.



போரில் மடிந்த மக்களுக்கும் போராளிகளுக்குமான ஆத்ம பிரார்த்தனை வழிபாடு 16ம் திகதி நடைபெறும். பேர்லின் மையப்பகுதியிலுள்ள ஆலயத்தில் இவ்வழிபாடு இடம்பெறும். இதில் பெருந்திரளான தமிழ் மக்கள் கலந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. 16ம் திகதி தலைநகர் பேர்லினில் மாலை 6 மணிக்கு [illegible] இடம்பெறவுள்ளது.

'முள்ளிவாய்க்கால் மீண்டும் முளைக்கும்' நூல் [illegible] முள்ளிவாய்க்கால் [illegible] இக்கண்காட்சியில் வைக்கப்படவுள்ளன. பெருந்திரளான மக்கள் இதில் கலந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

18ம் திகதி மாபெரும் பேரணி ஜேர்மனியின் மத்திய மாநிலத்தில் இடம்பெறவுள்ளது. அன்றைய தினம் 2 மணிக்கு [illegible] நகர பிரதான தொடருந்து நிலையத்திற்கு அருகே இருந்து தமிழர் பேரணி ஆரம்பமாகின்றது.

அம் மாநிலத்தின் பாராளுமன்றத்தின் எதிரே தமிழர் பேரணி வந்தடைந்ததும் அங்கு நினைவேந்தல் கூட்டம் இடம்பெறும். இரு கோரிக்கைகள் அடங்கிய மகஜர் நாடாளுமன்றப் பிரதிநிதிகளிடம் கையளிக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அதேநேரத்தில் 19ம் திகதி பேர்லினில் மாலை ஆறு மணிக்கு கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றும் நடைபெறவுள்ளது. அதன்போது ஜேர்மன் மொழியிலான துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப்படவுள்ளன.

இதன்போது ஏராளமான தமிழ் இளையோர் ஈடுபட ஏற்பாடாகியுள்ளனர். மேலும் அவுஸ்திரேலியா, சுவிட்சர்லாந்து, டென்மார்க், நெதர்லாந்து, கனடா, நோர்வே நாடுகளின் நாடாளுமன்றங்களின் எதிரே புலம்பெயர் தமிழர்கள் முள்ளிவாய்க்கால் [illegible] நீதிகோரி ஆர்ப்பாட்டம் நடாத்தவுள்ளனர். அதேநேரத்தில் தமிழ் நாட்டில் பல்வேறு முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

மே-17 இயக்கம் சென்னை மெரினா கடற்கரையில் கண்ணகிசிலை அருகே மாபெரும் நினைவேந்தல் நிகழ்வை நடாத்துகின்றது.

ஈழமுரசு பணியகம் தேவை

ஈழமுரசுக்கு சிறிய பணியகம் ஒன்று
La chapelle ( Paris10) பகுதியில்
குறைந்த வாடகையுடன் தேடுகின்றோம்.
தொடர்புகளுக்கு:
Tel: 00 33 970 464 464
Fax: 00 33 140 059 516
@: eelamurazuadm@gmail.com

# முள்ளிவாய்க்கால் நிழலாய் பின் தொடர்கிறது

நிழலாய் பின்தொடரும் போது நினைவு கொள்ளுங்கள் என்று எப்படிச் சொல்கிறீர்கள். நாங்கள் சாகும் போது தான் எங்களை விட்டு முள்ளிவாய்க்கால் நினைவுகள் அகன்று அடுத்த சந்ததிக்கு தாவும். அது மட்டும் நிழலாய் எமது கண் முன்னே ஒரு அசைவு இருந்தபடியே இருக்கும் என்று இறுதிப் போரில் தமது உறவுகளை பறி கொடுத்தவர்கள் சொல்கிறார்கள். பிறகு எப்படி இவர்களிடம் முள்ளிவாய்க்கால் நினைவு பற்றி பேச முடியும். நிஜம் பற்றி எல்லோ இவர்களிடம் பேசமுடியும். அந்த நிஜம் எல்லோருக்கும் தெரியும் எவராலும் மறைக்க முடியாது. பிறகு எப்படி இலங்கை அரசும் உலக நாடுகளும் பொய் என்று சொல்ல முடியும்.

கொத்துக் குண்டில் செத்தவர்களை இந்தக் கையால் தான் தூக்கி வந்து புதைத்தேன். விமானக் குண்டில் செத்தவர்களை அதே இடத்தில் புதைத்தேன். எனது அக்காவை இந்த இடத்தில் புதைத்தேன். எனது அண்ணாவை தூக்க முடியாது விட்டு வந்தேன். நான் வருவதற்குள் எனது அப்பாவை அடக்கம் செய்து விட்டார்கள். எனது உறவுகள் எல்லாம் இறந்து விட்டார்கள் நான் தனியனாக நிற்கிறேன். என்று சொல்பவர்களை யாரும் பார்க்கவில்லையா. பிறகு எவரிடம் சாட்சியங்கள் கேட்கின்றீர்கள்.

**முள்ளிவாய்க்காலுக்குச் செல்பவர்கள் ஒரு கணம் கண்ணை மூடி மண்ணில் சரிந்து பாருங்கள் எழும்புங்கள் எழும்புங்கள் என்று தான் குரல்கள் காதில் கேட்கும்.**

முள்ளிவாய்க்கால் தமிழ் இனத்தின் அடையாளம். புறநானூற்றில் என்றைக்குமே உயிரோடு வாழும் காவியம் அல்ல காவலன். வீரம் மடிந்த மண் அல்ல. தமிழன் வீரத்தை உலகத்துக்கு வெளிச்சம் போட்டுக் காட்டிய இடமாகும். சிங்களப் படைகள் வென்றாலும் உலக நாடுகள் சேர்ந்து விடுதலைப் புலிகளுக்கு எதிராகப் போராடி தோல்வி கண்ட மண் இது. 'செய் அல்லது செத்து மடி' என்று விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் அடிக்கடி போராளிகளுக்கு சொல்லும் வார்த்தையாகும். அந்தளவுக்கு இலங்கையில் தமிழர்கள் போராடினால் தான் வாழ முடியும். இல்லையேல் சிங்களவர்களுக்கு தமிழர்கள் அடிமையாக வாழ வேண்டிய சூழ்நிலை ஏற்படும் என்பது வரலாறு. தமிழ் மண்ணில் முள்ளிவாய்க்கால் மண் இன்று அல்ல என்றும் பேசப்படும் என்பதற்கு அந்த கடைசி மண் வரை பேராடிய வீரமறவர்கள் சாட்சியாக அமைந்துள்ளனர்.

போர் ஆரம்பித்த இடமல்ல முடிந்த இடமுமல்ல முடிந்தும் முடியாமல் இருக்கும் இடம் தான் பேசப்படும் என்பதற்கு முள்ளிவாய்க்கால் ஒரு உதாரணம். அதனால் தான் முள்ளிவாய்க்காலை எல்லோரும் பார்க்க விரும்புகின்றார்கள். இந்த இடத்தில் நினைவஞ்சலி செலுத்தவும் விரும்புகிறார்கள். என்ன கனவுடன் முள்ளிவாய்க்கால் இருக்கிறதோ அந்தக் கனவுடன்தான் தமிழ் மக்களும் இருக்கிறார்கள். முள்ளிவாய்க்காலையும் தமிழ் மக்களையும் என்றைக்குமே பிரிக்க முடியாது. மூன்று தசாப்த கால போர் வரலாறுகள் இந்த முள்ளிவாய்க்கால் மண்ணில் வந்து தான் குவிந்துள்ளன. தமிழர்களின் விடுதலைக்கான ஒரு முடிவினை வேண்டி காத்துக் கிடக்கின்றன.

முள்ளிவாய்க்காலுக்குச் செல்பவர்கள் ஒரு கணம் கண்ணை மூடி மண்ணில் சரிந்து பாருங்கள் எழும்புங்கள் எழும்புங்கள் என்று தான் குரல்கள் காதில் கேட்கும். ஏனெனில் அந்த மண்ணில் சரிந்தவர்களின் கனவுகளை நீங்கள் நிஜமாக்குங்கள் என்று தான் அந்த மண்ணின் சூடு தெரியும். அந்த சூட்டில் ஆவது நாம் ஒற்றுமையாக இருந்து பிரச்சனைக்கான தீர்வைப் பெற உழைப்போம்.

2006 ஆம் ஆண்டு சிறீலங்கா அரசால் ஆரம்பிக்கப்பட்ட விடுதலைப் புலிகளுடனான இறுதிப் போர் 2009 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி முடிவுக்கு வந்தது. சிறீலங்கா அரசுக்கு இந்தப் போர் முடிவு கண்டது. ஆனால் தமிழ் மக்களுக்கு ஒரு முடிவினையும் இன்னும் காட்டவில்லை. என்பது போர் முடிவடைந்து 5 வருடங்கள் கடந்த நிலையில் நன்கு தெரிகிறது. முள்ளிவாய்க்கால் போரின் ஆரம்பமா முடிவா என்பது சிறீலங்கா அரசு இனிவரும் காலங்களில் தமிழ் மக்களின் தீர்வு விடயத்தினை எவ்வாறு கையாள்கிறது என்பதில் இருந்து தெரியவரும். தமிழ் மக்களின் தீர்வு விடயத்தில் அரசு கண்டும் காணாமல் இருந்தால் எதிர்காலம் முள்ளிவாய்க்காலில் தான் போர் ஆரம்பிக்கும் என்பது உண்மை.



தாயகத்தில் இருந்து துன்னாலைச் செல்வம்

ஆட்லெறி செல்லினால் தன் தாய் காயப்பட்டு இறந்த போதும் கூட அதனை நம்ப முடியாத மகன் தனது தாயை உயிரோடு புதைத்து விட்டேனே என்று இன்றும் புலம்பிக் கொண்டிருக்கிறார். இப்படியாக எத்தனை தாய்மார்கள் இறந்திருக்கிறார்கள் எத்தனை மகன்கள் புலம்பிக் கொண்டிருக்கிறார்கள். தனது மகள் அழகானவள் நல்லாய் படிப்பாள் பாடசாலையில் முதலாம் பிள்ளையாக வருவாள் இறுதிப் போரில் காணாமல் போய்விட்டாள் திரும்பி வருவாள் என்ற நம்பிக்கையில் ஒரு தாய் இன்றும் அழுதவண்ணம் இருக்கிறார். இப்படி எத்தனை தாய்மார்கள் தமது மகள்களையும் மகன்களையும் தொலைத்துவிட்டு அழுதவண்ணம் இருக்கிறார்கள். சிங்களப் படைகளால் தமிழ்ப் பெண்கள் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டார்கள். அதாவது தமிழ்ப் பெண்களின் இரு கைகளையும் கட்டிவைத்து பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டு சுட்டுக் கொன்றார்கள். அந்த இடத்தில் நின்ற சிங்களப் படைகளே இந்த சம்பவங்களை 'கான் போனில்' வீடியோ எடுத்தார்கள். பின்னர் சனல் 4 தொலைக்காட்சி அவர்களிடம் இருந்து வாங்கி சிங்களப் படைகள் செய்த போர்க் குற்றங்கள் என்று ஒளிபரப்பு செய்தது. சிங்களப் படைகள் தமிழ் மக்களுக்குச் செய்த கொடூரங்கள் வெளிச்சத்துக்கு வந்தது.

முள்ளிவாய்க்காலில் தமிழ் மக்களின் வீரம் வேரோடு அழிக்கப்பட்டதாக சிங்கள அரசு நினைக்கிறது. மரத்தின் வேர்கள் ஒரு போதும் அழிவதில்லை மண்ணில் ஒரு மூலையில் இருந்து வளர்ந்து கொண்டே இருப்பது போல தமிழ் மக்களின் மனங்களில் எப்பொழுதும் முள்ளிவாய்க்கால் அழிக்கப்படாத படமாகத் தொங்கும். குழந்தைகள் என்று பார்க்கவில்லை பெண்கள் என்று பார்க்கவில்லை முதியவர்கள் என்று பார்க்கவில்லை எல்லோரையும் சுட்டுக்கொல்லுங்கள் என்று முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய படைகளுக்கு உத்தரவிட்டார். உலக நாடுகளே தடை செய்த நச்சுக் குண்டுகளை வீசினார். பிஞ்சுக் குழந்தைகள் உட்பட தமிழ் மக்களின் உடல்கள் பிளந்து துடிதுடித்து செத்தமண் இது. வானுயர்ந்து அழும் குரல் கேட்டும் உலக நாடுகள் பேசாமல் இருந்தன. யாருமே காப்பாற்ற வராததால் தமிழ் மக்களின் மூச்சுக் காற்று அடங்கிய மண் இது.

ஒரு இலட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் காணாமல் போயும் படுகொலை செய்யப்பட்டும் உள்ளனர். ஐ.நா போர்க்குற்ற விசாரணையில் சிறீலங்கா அரசிடம் தோல்வி கண்டுள்ளது என்று தான் சொல்ல வேண்டும். போர்க்குற்ற விசாரணையை தள்ளிப் போட்டு வரும் ஐ.நா சிறீலங்கா அரசின் மீது அக்கறை கொள்கிறது என்று தான் கருத முடியும். உலகத் தமிழனுக்கே அத்திவாரமிட்ட முள்ளிவாய்க்கால் போரில் உலக நாடுகள் சிறீலங்கா அரசுக்கு சார்பாக நின்றது. போர் முடிவடைந்து விட்டது. ஆனால் தமிழ் மக்களின் பிரச்சினையை தீர்க்க முடியாமல் உலக நாடுகள் உள்ளன.

முள்ளிவாய்க்காலில் இறந்தவர்களின் நினைவு தினம் கடந்த 12 ஆம் திகதி முள்ளிவாய்க்காலில் சுடரேற்றி ஆரம்பித்து வைக்கப்பட்டது. முள்ளிவாய்க்காலில் படுகொலை செய்யப்பட்டவர்களின் நினைவு தினம் கடந்த 12 ஆம் திகதியில் இருந்து 18 ஆம் திகதி வரை நினைவு கோரப்படும் என்று வடமாகாண சபையின் உறுப்பினர் சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார். யாழ் பல்கலைக்கழகத்திலும் இந்த நினைவு தின வாரம் ஆரம்பிக்கப்பட்டு மாணவர்களால் நினைவு கூரப்படுகிறது. வவுனியா மாவட்ட பிரஜைகள் குழுவினால் இந்த நினைவு தினம் கடைப்பிடிக்கப்படுவது மட்டுமல்ல முள்ளிவாய்க்காலில் உயிரைக் காவு கொடுத்தவர்களின் உறவினர்கள் தமது வீடுகளில் நினைவேந்தல்களில் ஈடுபட்டுள்ளனர்.

புதிய அரசு வந்தால் என்ன இராணுவத்தினர் தமிழ் மக்கள் மீதான கண்காணிப்பு நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றனர். முள்ளிவாய்க்காலில் இராணுவத்தினரும் பொலிசாரும் குவிக்கப்பட்டுள்ளனர். அந்த இடத்தில் நிற்பவர்களை படம் பிடிப்பதுமாக உள்ளனர். இறந்தவர்களுக்கு நினைவஞ்சலி கூட செலுத்த முடியாமல் தமிழ் மக்கள் உள்ளனர்.

பல இலட்சம் மக்கள் தமது பாதுகாவலராக விடுதலைப் புலிகளைத் தான் நம்பினார்கள். அதனால்த் தான் கடைசி வரை விடுதலைப் புலிகளுடன் மக்களும் நின்றார்கள். ஆயுதங்களை கீழே போட்டுவிட்டு போகும் படி கூறிய போது சிங்களப் படைகளிடம் சரணடைந்தால் என்ன நடக்கும் என்று அவர்களுக்கு நன்கு தெரியும் அதனால் அந்த மண்

(22ம் பக்கம் பார்க்க)

# குமுதினி படகு
## படுகொலை நினைவு நாள்

குமுதினி படகு 1985 மே 15 காலை 7:15 மணிக்கு நெடுந்தீவு மாவலித் துறைமுகத்தில் இருந்து 64 பயணிகளுடன் புறப்பட்டது. நயினாதீவு நோக்கிச் சென்று கொண்டிருக்கும் போது புறப்பட்ட அரைமணி நேரத்தின் பின் நடுக்கடலில் கண்ணாடி இழைப் படகில் வந்த சிங்களக் கடற்படையினரால் வழிமறிக்கப்பட்டது. ஆறு பேர் முக்கோண கூர்க்கத்தியும் கண்டங்கோடலிகள் இரும்புக்கம்பிகள் சகிதம் குமுதினியில் ஏறினர்.




பின்புறமிருந்த பயணிகளை இயந்திர அறையின் முன்பக்கம் செல்லுமாறு மிரட்டினர். அவர்கள் அனைவரும் சென்றுவிட்டனர். பின்புறம் இருபுற இருக்கைகளுக்கு நடுவே பலகைகளினால் இயந்திரத்தில் இருந்து பின்புறம் செல்லும் ஆடு தண்டுப்பகுதியை அவர்கள் அகற்றினர். இருக்கை மட்டத்தில் இருந்து கிட்டத்தட்ட சுமார் 4 அடி ஆழமானதாக அது இருந்தது.

இதன்பின் பணியாளர்கள் உட்பட ஒவ்வொருவராக உள்ளே அழைக்கப்பட்டனர். அரைகுறைத் தமிழில் அவர்கள் கதைத்தனர். குமுதினியின் இருபக்க வாசல்களிலும் உள்ளும் வெளியும் சிங்கள கடற்படையினர் இருந்தனர். ஒவ்வொருவராக சிங்கள கடற்படையினர் அழைத்து கத்தியால் குத்தியும் கண்டங்கோடலியால் வெட்டியும் இரும்புக்கம்பியால் தாக்கியும் கொன்று அந்த ஆடு தண்டுப்பகுதியில் போட்டனர்.

இப்படி கொல்லப்படுபவர்கள் எழுப்பும் அவல ஒலி முன்புறம் இருப்பவர்களுக்கு கேட்கக்கூடாது என்பதற்காக அவர்கள் பெயரையும் ஊரையும் உரக்கச் சொல்லுமாறு பணிக்கப்பட்டனர். அவலக் குரல் எழுப்ப முடியாது இறந்தவர்கள் போல் இருந்தவர்களும் உண்டு. கடுமையாகத் சிங்கள கடற்படை தாக்க குரல் எழுப்பியவர்கள் அதிகளவில் தாக்கப்பட்டு இறந்து விட்டார்கள் என சிங்கள கடற்படையினரால் கருதப்பட்டும் போடப்பட்டனர்.

பயணிகளில் ஒருவர் கடலில் குதிக்கவே அவருடன் சேர்ந்து வேறு சிலரும் கடலில் குதிக்கத் தொடங்கினர். இதனைக் கண்ட சிங்கள கடற்படையினர் அவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.


***நேரில் கண்டவர் கூறியதாவது:***

எனது தலையில் அடித்தார்கள். நான் விழுந்து விட்டேன். நான் இழுத்துச் செல்லப்படுவதை உணர்ந்தேன். கோடரி போன்ற ஆயுதத்தால் எனது தலையை அடித்தார்கள். வயிற்றிலும் கால்களிலும் அடித்தார்கள். பின்னர் ஒரு பள்ளத்தில் வீழ்ந்தேன். நான் இறந்து விட்டதாக நடித்து அப்படியே கிடந்தேன். எனக்கு மேல் மேலும் உடல்கள் விழுந்தன. குழந்தைகள், பெண்களின் அவலக்குரலைக் கேட்கக்கூடியதாக இருந்தது. கிட்டத்தட்ட 45 நிமிடங்களின் பின்னர் கோர சிங்கள கடற்படை கண்ணாடியிழைப் படகு அங்கிருந்து புறப்பட்டது

குமுதினி நெடுந்தீவுக்கு பயணிகளை ஏற்றிச் செல்லுகின்ற படகு. 1960களிலிருந்து இன்று வரை நெடுந்தீவு மக்களை வெளியுலகத் தொடர்பில் வைத்திருக்க உதவிய படகு. குமுதினி அந்த மக்களின் உயிராகிவிட்டது. அது ஒரு நினைவுச்சின்னம். அந்த மக்களின் வாழ்வின் நினைவுச்சின்னம். தமிழ்மக்களுக்கு எதிராக சிங்கள படைகளின் இன அழிப்பின் ஒரு சின்னம் அந்த சடப்பொருள் இன்று வரலாறாகி விட்டது.

சுபாஜினி சிவலிங்கம் என்ற 7 மாதக் குழந்தை முதல் 70 வயது தெய்வானை உட்பட இப்படுகொலை நிகழ்வில் இறந்தோர் எண்ணிக்கை 36 முதல் 48 வரை எனத் தெரிவிக்கப்படுகிறது.

# மே 18 நினைவேந்தல்:
# எம் உணர்வுகளால் உறவுகளுக்கு அஞ்சலி
## யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிக்கை


பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
UNIVERSITY STUDENTS' UNION
UNIVERSITY OF JAFFNA
மே 18 நினைவேந்தல்
எம் உணர்வுகளால் உறவுகளுக்கு அஞ்சலி
[illegible]

கொத்துக் கொத்தாக எம் உறவுகள் கொன்று குவிக்கப்பட்ட இறுதிப் போரின் ஆறாத ரணங்களைச் சுமந்ததாக மீண்டும் எம் கண் முன்னே விரிந்துள்ளது.

இந்த வலி சுமந்த வாரம், இழப்புக்களையும் ஈகங்களையுமே நிலையாகப் பெற்ற எம் இனத்தை ஒரே வட்டத்துக்குள் அடக்கி, தொடர்கிறது அடக்குமுறை நெருப்பு.

எம் இனத்துக்கு இழைக்கப்பட்ட அநியாயம் இன்றளவும் நியாயப்படுத்தப்பட்டு கொண்டே இருக்கின்றது. இந் நிலையில்தான் ஆண்டு தோறும் வந்து செல்கிறது வலி சுமந்த வைகாசி.

மறுக்கப்பட்ட உரிமைகளைக் கேட்டுப் பெறுவது மனிதத்தனம். அதைக் கொடுக்க வேண்டியது மனிதாபிமானம். ஆனால் நீதி கோரிய எம் உறவுகளை நிற்க வைத்துச் சுட்டதும், அடைக்கலம் காணாத மக்களை அடக்கி வைத்து அழித்ததுவும் இவ்வுலகு கண்ட ஆறாத கொடுமை.

எம் நெஞ்சிலே விழுந்த இந்தப் பேரிடி ஜென்மங்கள் கடந்தாலும் பரிணாமம் அடையாது. எம் சந்ததிகளின் இதயங்களிலே என்றென்றும் இருக்கத்தான் போகிறது.

அந்த வகையில் எம் உறவுகளின் இழப்பினையும், ஈகினையும் தாங்கிய தான இந்த வலி சுமந்த வாரத்தின் இறுதி நாளினை எங்கள் நெஞ்சத்தில் சுடரேற்றி, அகமுருகி உணர்வுகளால் அஞ்சலிக்கப்பட வேண்டும்.

எம் இரத்த உறவுகளை நினைவு கூருவது எமது கடமை. எமக்காய் மாண்டவர்களை நெஞ்சிருத்துவது எமது உரிமை.

அன்புக்குரிய எமது உறவுகளே, அழுவதற்குக்கூட உரிமை மறுக்கப்பட்டு அடக்கி அழிக்கப்பட்ட எம் சொந்தங்களை நினைந்து சுடர் ஏந்துவோம். இதில் எந்தவொரு அரசியல் சாயங்களுக்கும் இடமில்லை.

அந்த வகையிலே யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும் மே-18ஆம் திகதி திங்கட்கிழமை மாபெரும் ஒருங்கிணைப்பாய் யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் அஞ்சலி செலுத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்நினைவேந்தலில் உதிர்க்கப்பட்ட எம் உதிரத்து உறவுகளுக்கு உணர்வுகளால் அஞ்சலி செலுத்த அனைவரையும் உரிமையோடு மாணவர் ஒன்றியம் அழைக்கின்றது.

இவ்வாறு யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# புங்குடுதீவு பாடசாலை மாணவி
# பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டு படுகொலை





புங்குடுதீவு ஆலடி சந்திப் பகுதியில் பாடசாலை மாணவி ஒருவர் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

புங்குடுதீவு 9ம் வட்டாரத்தை சேர்ந்த சி.வித்தியா (வயது 18) என்ற உயர்தர வகுப்பு மாணவி புதன்கிழமை பாடசாலைக்குச் சென்று விடு திரும்பாத நிலையில், பெற்றோர் ஊர்காவற்துறை காவற்துறையில் முறைப்பாடு கொடுத்துள்ளனர்.

குறித்த மாணவி வியாழக்கிழமை காலை கை, கால்கள் மரக்கட்டைகளால் இழுத்து கட்டப்பட்ட நிலையில் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு பின்னர் கொலை செய்யப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கண்ணகி அம்மன் கோயில் பகுதியில் உள்ள பாழடைந்த வீட்டில் மாணவியின் சடலத்தைக் கண்ட பொதுமக்கள் காவற்துறைக்கு அறிவித்தனர்.

குறித்த தகவலின் அடிப்படையில், சம்பவ இடத்திற்குச் சென்ற ஊர்காவற்றுறை காவற்றுறையினர் விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில் புங்குடுதீவு மகா வித்தியாலயத்திற்கு முன்பாக மாணவர்கள் வீதி மறியல் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

# மாணவி படுகொலையினை கண்டித்து
# குடாநாடெங்கும் ஆர்ப்பாட்டம்!

புங்குடுதீவு பாடசாலை மாணவி வித்தியா படுகொலை சூத்திரதாரிகளை சட்டத்தின் முன்னிறுத்த கோரி குடாநாடெங்கும் பரவலாக போராட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றது.

அவரது சொந்த இடமான புங்குடுதீவினில் இன்று வெள்ளியன்று பாடசாலைகள் அனைத்தும் மாணவர்களது பகிஸ்கரிப்பினால் மூடப்பட்டது. இலங்கை காவல்துறை மாணவர்களை பாடசாலைக்கு செல்லுமாறு நிர்ப்பந்தித்துவருகின்ற போதும் மாணவர்கள் அதனை நிராகரித்து போராட்டத்தினில் குதித்தனர்.

அதே வேளை புங்குடுதீவினில் மாணவி கொலைக்கு நீதி கோரி வர்த்தகநிலையங்கள் சந்தைகள் பூட்டப்பட்டன. உள்ளூராட்சி மன்ற பிரதிநிதிகளும் ஆர்ப்பாட்டங்களை நடத்தியுள்ளனர்.

இதேவேளை யாழ்.பல்கலைக்கழக மாணவர்களும் இன்று வெள்ளியன்று கண்டன ஆர்ப்பாட்டமொன்றினை மதியவேளை யாழ்.பல்கலைக்கழக வளாகத்தினுள் நடத்தியுள்ளனர். சட்டமொழுங்கை பேண இலங்கை



அரசும் காவல்துறையும் தவறிவிட்டதாக அவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். கிளிநொச்சி புனித செந்திரேசா மகளிர் கல்லூரி மாணவர்கள் கண்டன போராட்டம் பேரணியாக நடத்தினர்.

# Master Trads

Gajendran Sothilingam

# மாஸ்ரர் மொழிபெயர்ப்பகம்

(கஜன் மாஸ்ரர்)

## புதிய மொழிபெயர்ப்புச் சேவை அறிந்த மொழிபெயர்ப்பாளர்கள்

### மொழிபெயர்ப்பு Traduction

தமிழ் Tamoul | பிரெஞ்சு Français | ஆங்கிலம் Anglais | சிங்களம் Cinghalais

- அடையாள அட்டை
- சாரதி அனுமதிப் பத்திரம்
- பிறப்பு - இறப்பு - திருமண சான்றிதழ்கள்
- அரசியல் தஞ்சம் கோரும் ஆவணங்கள்

- பிரான்சில் உங்கள் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் உங்கள் பிரதான ஆவணங்களை மொழிபெயர்க்கையில் யாரைத் தெரிவுசெய்வீர்கள்?
- அலுவலகக் கடிதங்களை எழுதுவதற்கு யாரைத் தெரிவுசெய்வீர்கள்?
- நீதித்துறை - நிர்வாகத்துறை உட்பட பிரான்சின் அனைத்து அலுவலகங்களிலும் (Mairie, CAF, Préfecture, Sécurité Sociale, OFPRA, CNDA...) எமது மொழிபெயர்ப்புகள் 100% ஏற்றுக் கொள்ளப்படும் என்பது உங்களுக்கு நன்கு தெரியும்.
- எமது மொழிபெயர்ப்புகள் தரமும் துல்லியமும் வாய்ந்தவை என்பது பிரெஞ்சு நீதி - நிர்வாகத் துறைகளுக்குத் தெரியும்.
- பிரெஞ்சு மொழியியலுக்கோ, மொழிபெயர்ப்புகளுக்கோ நாங்கள் புதியவர்கள் அல்ல என்பது இங்கு ஏற்கனவே வசிக்கும் தமிழ் மக்களுக்குத் தெரியும்.

### உரைபெயர்ப்பு Interprétariat

- **திருமணப் பதிவுக்கான மொழிபெயர்ப்பு**

சட்டபூர்வமான திருமணப் பதிவுகளை நகரசபையியில் (Mairie) செய்யும்போது, சிவில் சட்ட விதிகளை மொழிபெயர்ப்பதற்கு நீங்கள் எப்படியான மொழிபெயர்ப்பாளர்களை தெரிவுசெய்ய வேண்டும்?

எமது மொழிபெயர்ப்புகள் பிரான்சின் அனைத்து நகரசபைகளிலும் ஏற்றுக்கொள்ளப்படும் என்பது உங்களுக்குத் தெரியும்.

நாங்கள் அங்கீகரிக்கப்பட்டவர்கள் என்பது நகரசபைகளுக்குத் தெரியும்.

- **வீடு வாங்க, விற்பதற்கான மொழிபெயர்ப்பு**

போதிய அளவு பிரெஞ்சு மொழி அறிவற்ற நிலையில் உங்கள் பரம்பரை வரை நிலைக்கப் போகும் சொந்த வீடுகளை - வர்த்தக ஸ்தாபனங்களை வாங்கும் போதும், வங்கிகளில் வர்த்தகக் கடன் ஒப்பந்தங்களில் கையொப்பமிடும் போதும் அதில் அடங்கியிருக்கும் விடயங்களை தெளிவாகப் புரிந்துகொள்வதற்கு யாரைத் தேடுவீர்கள்?

வீட்டு முகவர் (Agent Immobilier), வங்கி முகாமையாளர் (Banquier), நொத்தாரிசு (Notaire) அலுவலகங்களில் விடயங்களை முழுமையாக நீங்கள் புரிந்துகொள்ள உதவுவதற்கு எமக்கு அங்கீகாரம் உள்ளது என்பது உங்களுக்கு நன்கு தெரியும்.

Master Trads
8, Rue Demarquay, 75010 Paris
Mº: Gare du Nord
(Sortie : Rue du Fbg. St. Denis)




01 42 09 20 45
06 76 46 22 40
e-mail : mastertrads@hotmail.com
www.mastertrads.com

# சொகுசுப் பேருந்து சேவை / LOCATION D'AUTOCARS




CITY EXPRESS
We Move the Businessclass

Tél: 0 651 651 729 - 06 95 95 63 73
www.cityexpress.fr / contact@cityexpress.fr / facebook: CityExpressParis

# 6ம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர். செல்லையா ஏகாம்பரம்

(சாம்பு - புங்குடுதீவு 4ம் வட்டாரம்)

**தோற்றம்**
15
02
1943



**மறைவு**
07
06
2009

ஆண்டு ஆறுகள் ஆனதுவோ
எத்தனை ஆண்டுகள் ஆனாலும்
நீங்கள் எங்கள் உடனேயே வாழ்வீர்கள்
எம்மால் உங்களை மறக்க முடியாது
எமக்கு வழிகாட்டியாய்
ஆசனாய் இருந்தீர்களே
நீங்கள் எம்முடன் இல்லை
என்கிறார்கள்
உங்கள் உடலை மட்டுமே
பிரிக்க முடிந்தது.
ஆறு ஆண்டுகள் என்ன
எத்தனை
ஆண்டுகள் ஆனாலும்

உங்கள் ஆன்ம சாந்திக்காய்
இறைவனை இறைஞ்சி நிற்கும்
மனைவி - சகோதரிகள் - மக்கள்
மருமக்கள் - பேரப்பிள்ளைகள்

**00 33 6 03 37 38 24**

# முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்கள் தமிழன் கனவை நனவாக்கட்டும்

**கா**லத்துக்கு காலம் இடைவெளிவிட்டு சிங்கள ஆட்சியாளர்களால் தமிழின அழிப்புக்கான இனவெறித் தாக்குதல்கள் தொடர்ந்த வண்ணம் இருந்ததே வரலாறு. 1956 இல் தொடங்கிய இனவொழிப்புத் தாக்குதல் 1958 1977 1981 ஆகிய ஆண்டுகளில் படிப் படியாக வளர்ச்சியடைந்து 1983 இல் மிகப் பெரிய இன அழிப்பாக உலகைத் திரும்பிப் பார்க்க வைத்தது. தமிழ் மக்கள் வயது வேறுபாடின்றி பால் வேறுபாடின்றி மிலேச்சத்தனமாகக் கொன்றொழிக்கப்பட்டார்கள். தமிழர்களின் சொத்துக்கள் நாசமாக்கப்பட்டன. தமிழினம் மீண்டும் நிமிர்ந்து நிற்கக் கூடாதென்ற திட்டத்தோடு மேற்கொள்ளப்பட்டதே கறுப்பு யூலை என்று வரலாற்றில் பதிவு செய்யப்பட்ட 1983 யூலை இனவழிப்பு நிகழ்வுகளாகும்.

அன்றைய இந்தியப் பிரதமர் இந்திராகாந்தியின் ஒரு தொலைபேசி அழைப்பால் கட்டவிழ்த்து விடப்பட்ட கொடுமைகளைக் கட்டுக்குள் கொண்டு வந்தார் ஜே.ஆர் ஜெயவர்த்தனா. 1958 1977 1981 1983 ஆகிய ஆண்டுகளில் இவ்வன்கொடுமைகளால் தமிழ் மக்கள் தங்கள் தாயகத்துக்கு கப்பல்கள் மூலம் அனுப்பப்பட்டனர். ஆனால் 1983 இல் தாயகத்துக்கு ஒரு பகுதியினர் திரும்பிய பொழுதும் இன்னொரு பகுதியினர் தமிழ் நாட்டிற்குச் சென்றனர். இது இந்திய அரசையும் தமிழ் நாட்டு அரசையும் சிந்திக்க வைத்த நிகழ்வாகக் கூறலாம்.

தமிழ் மக்கள் தங்கள் தாயகம் நோக்கி அனுப்பி வைக்கப்பட்டமை தாயகத்தின் அவசியத்தை உணர வைத்த உறுதிப்படுத்திய நிகழ்வுகளாகவே கருதப்படுகின்றது. தமக்கென ஒரு வீடு இருந்தால் எப்படியோ அப்படியே தமக்கென ஒரு தாயகம் இருப்பதைத் தமிழ் மக்களுக்கு இவ்வன்கொடுமைகள் உணர்த்தி நின்றன. இளைஞர்களின் எழுச்சி இவ்வன்கொடுமைகளால் வளர்ச்சி கண்டது. 1972 இன் அரசியல் யாப்பு இளைஞர்களை விழிப்படையச் செய்தது. தொடர்ந்த வன்கொடுமைகள் ஆயுதப் போராட்டத்தை நியாயப் படுத்தியது என்றால் மிகையாகாது. ஆயுதப் போராட்டத்தின் வளர்ச்சி உலகையே வியக்க வைத்தது.

1983 இற்குப் பின்னர் தமிழ் மக்களின் மேல் தாக்குதல் நடத்த எவரும் துணியவில்லை. திட்டமிட்ட இனவன்முறைகள் நடைபெறவில்லை. ஆயுதப் படைகள் தமிழ் மக்களைப் பிடித்துச் சென்று கொலை செய்தமை நடைபெற்றன. ஆனால் இன அழிப்பைத் தொடர முடியாமல் இளைஞர்களின் ஆயுதங்கள் முற்றாகத் தடுத்தன என்று தான் கூறவேண்டும். தமிழீழ விடுதலைப் புலிகளின் திறமை மிகுந்த தாக்குதல்களால் கதி கலங்கிய சிங்களம் சமாதான உடன்படிக்கையை மேற்கொண்டது. ஆனால் அனைத்து நாடுகளின் உதவியுடன் புலிகளை அழிக்கும் திட்டத்துடனேயே அதை மிக நாசூக்காக ஆட்சியாளர்கள் மேற்கொண்டனர். தமிழர் தாயகத்தில் ஒரு சமாந்தரமான ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருந்தது. உலகம் வியந்து பார்த்து. ஆனால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை வளர்ந்த நாடுகளாலும் இந்தியாவாலும். இதனால் தமிழீழ விடுதலைப் புலிகளை அழிக்கும் முயற்சியாக முதலில் வாகரையில் பாரிய இன அழிப்பைச் சிங்கள ஆட்சி மேற்கொண்டது. தமிழ் மக்கள் பெருமளவில் கொல்லப்பட்டனர். உணவு நீர் என்பனவும் மருந்து வகைகளும் கிடைக்காமல் தமிழ் மக்கள் பாரிய துன்பங்களையும் இன்னல்களையும் அடைந்தனர். உலகம் இவ்வின அழிப்பைக் கண்டு கொள்ளவில்லை. ஆட்சியாளரின் பயங்கரவாதத்தைக் கண்டு கொள்ளாது உலகம் தமிழ் மக்களின் காவலரணாக நின்ற விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதிகளாகப் பார்த்தது. முத்திரை குத்தியது.

இந்த வாகரை நிகழ்வு ஆட்சியாளர்களுக்கு மேலும் நம்பிக்கையைக் கொடுத்தது. அதனால் வன்னியை நோக்கித் தன் கவனத்தைத் திருப்பியது.

பயங்கரவாதிகளை அழிப்பதற்காக இருபதுக்கும் மேற்பட்ட நாடுகள் உதவின. இந்தியாவும் சீனாவும் பகை நாடுகள் இந்தியாவும் பாகிஸ்தானும் பகை நாடுகள் ஆனால் இவை தமிழினத்தை அழிப்பதற் காக ஒற்றுமையாகச் சிங்களத்துக்கு உதவினர். அமெ ரிக்கா ரசியா இங்கிலாந்து ஐரோப்பிய யூனியன் ஆகிய அனைத்தும் விடுதலைப் புலிகளை அழிக்க வென்று ஆட்சியாளருக்கு உதவின. இதன் விளைவு தான் முள்ளிவாய்க்காலில் நிகழ்ந்த பேரவலம் ஆகும். 1983 இற்குப் பின்னர் தமிழினத்தை அழிக்க முடியாமல் திணறிய சிங்களம் 2009 மேயில் தமிழினத்தையும் அதன் தாயகத்தையும் அழிக்கும் கொடுமையை முள்ளிவாய்க்காலில் நிகழ்த்தியது. உலகம் கண்மூடிக் கொண்டதுடன் நிற்கவில்லை. சிங்களத்துக்கு உதவிக் கொண்டே இருந்தது. இதிலே தமிழினம் இழந்த உயிர்களின் எண்ணிக்கையைக் கூட மிகக் குறைத்துக் காட்டியது அரசு.

ஆனால் மன்னார் ஆயர் அண்மையில் நோய் வாய்ப்படுவதற்கு முன்னர் இந்தியத் தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் ஒரு இலட்சத்தி 46 ஆயிரத்து 500 இற்கும் மேற்பட்டவர்கள் இறந்ததற்கான கணக்கை புள்ளி விபரங்களுடன் காட்டியுள்ளார். நடைபெற்றது விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் என்று அரசு கூறுவதைத் தமிழ் அரசியல் வாதிகள் கூறுவதை ஏற்காத ஆயர் தமிழினத்துக்கு எதிரான போர் என்றும் உள்ளக விசாரணை என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் விளக்கியுள்ளார். அத்துடன் ஆட்சி மாற்றம் ஏற்பட வேண்டும் என்று விரும்பிய அவரே நல்லாட்சி ஏற்படவில்லை என்பதுடன் தமிழினம் தனது தாயகத்திலேயே முற்றாக இன அழிப்புக்கு உள்ளாகப் போகும் பேராபத்தையும் சுட்டிக்காட்டியுள்ளார். புத்தளம் முதல் நீர்கொழும்பு வரை வாழ்ந்த தமிழ் மக்கள் இன்று முற்றாகச் சிங்கள இனமாக மாறியது போன்ற நிலைமை தாயகத்தில் வாழும் மக்களுக்கு ஏற்படப் போவதாகவும் அவர் எதிர்வு கூறியுள்ளார். இந்த ஆபத்தைப் பற்றி தமிழ் அரசியல் வாதிகள் கிஞ்சிற்றும் சிந்திக்கவும் இல்லை கவலை கொள்ளவும் இல்லை. ஆனால் தமிழினம் பேசாமல் இருக்க முடியுமா ?

உலகம் பூராவுமுள்ள தமிழ் மக்கள் முள்ளிவாய்க்காலில் மறைந்த தம் தமிழ் இன உறவுகளுக்கு நினைவேந்தல் நிகழ்வுகளை மேற்கொண்டுவரும் வேளையில் மக்கள் மனதில் உறுதியான நிலைப்பாடும் தோன்றவேண்டும். இந்த நினைவேந்தல்கள் ஆண்டு தோறும் நடக்கும் சடங்காக இருக்கக் கூடாது. உயிர் கொடுத்த மக்களின் இலட்சியங்கள் நிறைவேற பாடுபடவேண்டும். உழைக்க வேண்டும். அரசியல் வாதிகள் இம் மக்களின் ஈகத்தை வைத்து தேர்தலில் வாக்குகளை அறுவடை செய்வதை அனுமதிக்கக் கூடாது. அன்று ஆயுதங்கள் மௌனித்த படியால் தமிழினத்தின் குரல் ஒடுக்கப்பட்டு விட்டதாகக் கூறுகின்றனர். உலகம் தான் ஆயுதங்களை மௌனிக்கச் செய்தது. அதனால் உலகம் தான் முள்ளிவாய்க்கால் மக்களின் ஈகத்திற்கு விடை காணவேண்டும். அதனை உலகம் முழுவதும் பரவிக்கிடக்கும் தமிழீழ உறவுகள் செய்ய வேண்டும்.

ஒற்றுமையின்றிச் சிதறிக் கிடப்போமானால் ஆட்சியாளர்கள் தங்கள் விருப்பப்படி அனைத்தையும் செய்து முடிப்பர். மாவீரர் நினைவுகளையும் முள்ளிவாய்க்கால் நினைவுகளையும் மேற்கொள்வதோடு எமது பணி முடிந்து போகக் கூடாது. இந் நேரத்தில்

(4ம் பக்கம் பார்க்க)

# தமிழ் தேசிய கூட்டமைப்பு ஆயுதக் குழுவாக செயற்படுகிறதா?

**கிழக்கில் இருந்து எழுவன்**

**த**மிழ் தேசிய கூட்டமைப்பு கடந்த 08.01.2015 மைத்திரி அரசு பதவியேற்றதன் பின்பு தமிழ் தேசியம் என்ற உணர்வில் இருந்து வெகுதூரம் விலகிச் சென்றுள்ளதை அதன் தலைமைகளும், உறுப்பினர்களும் ஐந்து மாதகாலமாக நடந்து கொள்வதில் இருந்து புரிந்து கொள்ளக் கூடியதாக இருக்கிறது.

இதற்கு பல்வேறு காரணங்கள் கூட்டமைப்பினர்களினால் கூறப்பட்டாலும் அவையெவற்றையும் தமிழ் மக்கள் நம்பத்தயாரில்லை என்பதையும் நாங்கள் புரிந்து கொள்ளத்தவறவில்லை. மகிந்த அரசாங்கமும் அதனுடன் ஒட்டிக் கொண்டிருந்த ஒட்டுக்குழுக்களும் மக்களை மிரட்டியும், சில அற்பசொற்ப சலுகைகளை வழங்கியும் மக்கள் மத்தியில் இடம்பிடிக்கலாம் என்ற நினைப்பில் ஈடுபட்டார்கள். ஆனால் அவற்றுக்கெல்லாம் மக்கள் நல்ல படங்களை புகட்டியுள்ளதை அனைவரும் அறிவீர்கள்.

இதில் குறிப்பாக சொல்லப்படவேண்டியது, 2012ஆம் ஆண்டு கிழக்கு மாகாண சபைத் தேர்தல் நடைபெற்றபோது ஒட்டுக்குழுக்களின் உறுப்பினரான சிவநேசதுரை சந்திரக்காந்தனை (பிள்ளையான) தோற்கடித்தார்கள். அதன் பின்னர் தற்போது 2015 ஆண்டு நடைபெற்ற சிறீலங்கா அதிபருக்கான தேர்தலின் போது மகிந்தாவை எவ்வாறு தோற்கடித்தார்கள் என்ற வரலாறுகளை மீட்டுக்காட்ட வேண்டிய அவசியமில்லை.

இருந்தாலும், மக்களிடம் ஒன்றைக் கூறி சிங்கள ஆட்சியார்களிடம் ஒன்றைக் கூறும் தமிழ் தேசிய கூட்டமைப்புத் தலைமையின் நிலவரமும் இன்னும் சிறிது காலத்தில் தெரிந்துவிடும். இது இவ்வாறிருக்கத்தக்கதாக, மகிந்தவின் காலத்தில் படைத்துறையின் உதவியுடன் எவ்வாறு ஒட்டுக்குழுக்கள் தமிழ் மக்களுக்கு அநியாயங்களை மேற்கொண்டுவந்தார்களோ அவ்வாறு இன்று தமிழ் தேசிய கூட்டமைப்பு மாறிவருகிறது என்பதுதான் புதிய தகவலாகவுள்ளது.

சிறீலங்கா அரசாங்கத்தின் பங்காளிக் கட்சியாக மாறியுள்ள தமிழ் தேசியக் கூட்டமைப்பு இன்று வடக்கு கிழக்கு மாகாணங்கள் மாற்றுக் கருத்துள்ளவர்கள் மீது படைகளின் ஒத்துழைப்புடன் தாக்குதல் நடவடிக்கையில் ஈடுபட்டுவருகின்றனர். இது தொடர்பாக காவல்துறையினரிடம் முறையிட்டாலும் எவ்வித நடவடிக்கையும் காவல்துறையினர் எடுப்பதில்லை. இவ்வாறான சம்பவம் ஒன்று இந்த கட்டுரை எழுதுவதற்கு நான்கு தினங்களுக்கு முன்னர் அக்கரைப்பற்றி கிழக்கு மாகாண சபையின் முதலமைச்சர் ஒரு திறப்பு விழாவுக்கு வருகை தந்திருந்தார். அந்த திறப்பு விழா ஏககாலத்துடன் திறந்து வைக்கப்பட்டது. எனினும், கூட்டமைப்பின் பங்காளிக்கட்சியான தமிழரசுக் கட்சியின் அமைப்பாளராக செயற்பட்டுவருபர் தாக்குதல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தார்.

தாக்குதலுக்குள்ளானவர், இது ஏற்கனவே திறந்துவைத்ததை மீண்டு திறக்கின்றார்கள் என்று கூறியுள்ளார். இதனையடுத்து அமைப்பாளர் குறித்த நபரை தாக்கியுள்ளார். அதுமாத்திரமல்ல, தாக்குதல் நடாத்தப்படும் போது பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த காவல் துறையினரும் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்துள்ளனர்.

கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ஏனைய கட்சிகளும் தமிழரசுக் கட்சியன் அடாவடித்தனங்களைக் கண்டுகொள்ளாது விடுவதும் வேடிக்கையாகவுள்ளது.

இன்று தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களாக இருக்கலாம் அல்லது மாகாண சபை உறுப்பினர்களாக இருக்கலாம் இவர்களுக்கெல்லாம் தாம் வகிக்கும் பதவிக்கான கதிரை பறிபோகும் நிலை உருவாகியுள்ளது என்ற அச்ச உணர்வு ஏற்பட்டுள்ளதே காரணமாகும். இவர்கள் இன்று மக்கள் மத்தியில் சென்று தங்கள் கருத்துக்களை முன்வைக்க முடியாத நிலவரம் ஏற்பட்டுள்ளது.

இருந்தாலும் விடுதலைப் புலிகளினால் உருவாக்கப்பட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பை என்றும் மக்கள் புறந்தள்ளமாட்டார்கள் என்ற உணர்வில் கடந்த காலத்தில் செயற்பட்டாலும், இன்று நிலவரம் தலைகீழாக மாறிவருவதைக் காணலாம். தமிழர் எதிர்பார்க்கும் தன்னாட்சி, சுயநிர்ணயம் போன்ற கொள்கையில் இருந்து கூட்டமைப்பு விலகிச் செல்வதே முக்கியமான காரணமாகும். அத்துடன், கூட்டமைப்புக்கு எதிராக எவரும் அரசியலில் வந்துவிட முடியாது என்ற நினைப்புடன் இருந்தவர்களுக்கு இன்று சிம்பசொற்பனமாக தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் வளர்ந்து வருவதும் கூட்டமைப்பின் இருப்புக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளதுமே காரணமாகும்.


இன்னுமொரு விடயத்தையும் முன்வைக்கலாம், தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் சிறீலங்காப் படையினரால் இனப்படு

# பொண்டி தமிழ்ச் சங்கத்தின் இல்ல மெய்வல்லுனர் போட்டி 2015

பொண்டி தமிழ்ச் சங்கம் தமிழச்சோலைப் பள்ளி மாணவர்களுக் கிடையிலான இல்ல மெய்வல்லுனர் போட்டியினை கடந்த 19 –04–2015 அன்று stade lognage 60 Av. pasteur 93140 bondy என்ற இடத்தில்



சிறப்பாக நடாத்தி முடித்துள்ளது. போட்டிகள் ஆரம்பிப் பதறகான முதல் நிகழ்வாக பொண்டி உப நகரபிதாவை மாணவர்களின் இசை அணிவகுப்புடன் உடற்பயிற்சி அணிவகுப்பும் சேர்ந்து சங்க தலைவர் நிர்வாகிகள் மற்றும் ஏனைய அமைப்புக்களின் உறுப்பினர்களும்



அனைவரும் அவரை வரவேற்று விளையாட்டுத் திட லுக்கு அழைத்துச் சென்றனர். அதனைத் தொடர்ந்து ஈகைச் சுடர் ஏற்றல் தமிழீழம் மற்றும் பிரான்சு தேசிய கொடிகள் சங்கக் கொடி, இல்லங்களின் கொடிகள்



ஏற்றிவைக்கப்பட்டு மாவீரருக்கான மலர்வணக்கம், அகவணக்கம், தமிழச்சோலைக் கீதம் இசைக்கப்பட்டது. அதனைத் தொடர்நது மாணவர்கள், மெய்வல்லுனர் களால் ஒலிம்பிக் தீபம் ஏற்றப்பட்டு நடுவர்களின் சத்தியப் பிரமாணத்தின் பின் போட்டிகள் ஆரம்பமாகியது. இந் நிகழ்வில் இல்ல மாணவர்ளுக்கிடையிலான ஒட்ட போட்டி, நீளம் பாய்தல், சாக்கோட்டம், அஞ்சலோட்டம், தேசிக்காய் கரண்டி போன்ற விளையாட்டுக்களும் ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், பார்வையாளர்களுக்கிடையிலான மிதியுந்து ஒட்டம், கயிறிழுத்தல், சங்கீத நாற்காலி போன்ற போட்டிகளும் நடைபெற்றது. முடிவில் வெற்றி பெற்ற மாணவர்க ளுக்கான வெற்றக் கிண்ணங்கள், பதக்கங்களும் வழங் கப்பட்டன. இந்த இல்ல மெய்வல்லுனர் போட்டிகளை தமிழர் விளையாட்டுத் துறைப் பெறுப்பாளரால் நெறிப்படுத்தப்பட்டு மிகவும் சிறப்பாக நடாத்தி முடிக்கப் பட்டது. இப்போட்டிகளின் இறுதியில் நல்வாய்பபுச் சீட்டிழுப்புகள் நடைபெற்று பெறுமதியான பரிசில்களும் வழக்கப்பட்டது. இறுதியாக கொடி இறக்கத்துடன் போட்டிகள் நிறைவுபெற்றது.

# சென்டெனி தமிழ்ச்சங்கத்தின் 15வது ஆண்டு நிறைவு விழா

கடந்த 25.04.2015 அன்று சென்டெனி porte de paris bourse de travail மண்டபத்தில் மேற்படி ஆண்டுவிழா நடைபெற்றது. சென்டெனி தமிழ்ச்சோலை மாணவ மாணவிகள் இருமருங்கிலும் அணிவகுத்து



நிற்க விருந்தினர்களை நிர்வாகி சங்க உறுப்பினர்கள் ஆசிரியர்கள் பெற்றோர்கள் மண்டபத்திற்குள் அழைத்து வந்தனர். மாவீரர் பெற்றோர்கள் மங்கல விளக்கினை ஏற்றிவைத்தனர். தொடர்ந்து அகவணக்கம் செலுத்தப் பட்டது. கரோக்கி இசையில் பள்ளி மாணவர்களால்



தமிழ்ச்சோலை கீதம் பாடப்பட்டது.

பாலர் அபிநயப்பாடல் புத்திமான் பலவான் நாடகம் பழங்களின் முக்கியத்துவத் தைக்கூறும் இன்சுவைக்க னிகள் நிகழ்வு இடம்பெற்றது. தமிழ்ப்பள்ளி நாடகம்



மாணவர்களின் ஒற்றுமைத்தன்மையை வெளிப்படுத் தியது. கவியரங்கம் அனைவரையும் கவர்ந்தது. அத னோடு தேவலோகத்தில் அற்புதங்கள் நாடகம் மூலம் திருவள்ளுவர்–வாசுகி பாரதியார்–செல்லம்மா இராவணன்–மண்டோதரி ஔவையார் அனைவரை யுமே வரவைத்து வியக்கவைத்தார்கள்.

தமிழரின் பாரம்பரிய கலை வடிவங்களில் ஒன்றான தாளலயம் பிரெஞ்சு மொழி கலந்து இசையோடு சிறப் பாக வெளிப்படுத்தியிருந்தார்கள்.

புலம்பெயர் தேசங்களில் தமிழ் மொழிக்கல்வி எனும் தலைப்பில் நேர்காணல் இடம்பெற்றது. பழைய மாணவர்களால் பள்ளி விவரணப்படம் வெண்திரையில் காண்பிக்கப்பட்டது. தொடர்ந்து சென் டெனி மாநகரசபை துணை முதல்வர் திருமதி. செசில் ரங்கின் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்.

தொடர்ந்து நூல் வெளியீடு செய்யப்பட்டது. பிரான்ஸ் தமிழர் ஒருங்கிணைப்புக்குழுப் பொறுப்பாளர் திரு. பரமலிங்கம் அவர்கள் வெளியிட்டு வைக்க பிரான்ஸ் தமிழ்ச்சோலைத் தலமைப்பணியகப் பொறுப் பாளர் திரு. யெயக்குமாரன் அவர்கள் பெற்றுக் கொண்டார்.

பதிவு! தமிழரின் பூர்வீகம்
முள்ளிவாய்க்கால் தமிழின அழிப்பில் கொல்லப்பட்ட
மக்களுக்கும். போரில் களமாடி வீரச்சாவடைந்த மாவீரர்களுக்கும்
ஒரு கணம் சிரம் தாழ்த்தி அகவணக்கம் செலுத்துகிறோம்.
www.pathivu.com www.facebook.com/pathivumedia
மே 18

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் குறிப்பாக யாழ்குடா நாட்டில் குற்றச்செயல்கள் என்றுமில்லாத அளவு அதிகரித்து வருகின்றன. அதிலும் 2009ம் ஆண்டு மே மாதத்தின் பின் 95 சதவீதமான குற்றச்செயல்கள் அதிகரித்துள்ளன.

தமிழீழ விடுதலைப் புலிகள் இருந்தபோது யாழ் குடா நாட்டில் குற்றச்செயல்கள் குறைந்தே காணப்பட்டன. இந்த உண்மையை தாயகத்தில் தமிழர் தரப்பு இதுவரை பகிரங்கமாகத் தெரிவிக்கவில்லை. ஆனால், வடபிராந்திய பிரதி காவல்துறை அத்தியட்சகர் லலித் ஜயசிங்கா பகிரங்கமாக அதனைத் தெரிவித்துள்ளார். உண்மையைக் கூறத்தயக்கம் காட்டிய தமிழ்க் கட்சிகளின் அரசியல் தலைவர்கள் இனிமேலாவது வெளிப்படைத் தன்மையைக் கடைப்பிடிப்பார்களா?

தமிழீழ விடுதலைப் புலிகளைத் தடை செய்துள்ளதினால் அந்த அமைப்பைப் பற்றிக் கதைப்பதை பலர் தவிர்த்து வருகின்றனர். ஏனெனில் தம்மையும் அதனுடன் இணைத்து விடுவார்களோ என்ற அச்சம். ஆனால் விடுதலைப் புலிகளின் குடிசார் கட்டமைப்புக் குறித்து தமிழர்கள் பேசுவதற்கு எந்தவித தடையும் இல்லை. ஆயுதப் போராட்டம் குறித்தே பேசுவது தடைசெய்யப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் எப்போதும் ஜனநாயக வழிமுறைகளில் அதிக நம்பிக்கை கொண்டு செயற்பட்டுள்ளார்கள். உலகம் அதனை மறைத்து அவர்களைப் பயங்கரவாதப் பிடிக்குள் வில்லங்கமாகத் திணிக்கவே தொடர்ந்தும் முயற்சிக்கின்றது.

ஆனால் புலிகள் மீதான தடைக்கு சட்டபூர்வமான காரணங்கள் இதுவரை காட்டப்படவில்லை. விடுதலைப் புலிகளே வெடிக்கவைத்தனர் என அவர்கள் அறிக்கை விட்டனர்.

களம் + தளம் + புலம் = தாயகம்

அதனையே தடைக்கான காரணமாக தீர்ப்பாயத்தின்முன் குறிப்பிட்டனர். ஐரோப்பிய ஒன்றியமும் தற்போது அந்த காரணத்தையே விடுதலைப் புலிகளின் தடைக்கான காரணமாகத் தெரிவித்துள்ளது.

ஏற்கனவே இவ்விடயம் குறித்து நாம் இங்கு ஆராய்ந்துள்ளோம். தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆட்சி முறைமை பல நாடுகளுக்கு எடுத்துக்காட்டாக அமைந்திருந்தது என்பதை உலகத் தமிழர்கள் மிகத் தீவிரமாகப் பரப்புரை செய்யவேண்டும்.

19, 500 கி.மீ சதுரப்பரப்பளவில் புலிகளின் ஜனநாயக ஆட்சி நடைபெற்றதை நாம் ஏன் உலகுக்குக் கூறாமல் இருந்துவருகின்றோம்? விடுதலைப் புலிகளின் நல்லாட்சி குறித்து தமிழர்கள் பேசுவதைத் தவிர்ப்பதற்காகவே தடை உத்தரவை முன்னிலைப்படுத்துகின்றார்கள்.

வன்னியில் மாத்திரமல்ல வடமாகாணம் முழுவதும் சட்டம் ஒழுங்கு கடைப்பிடிக்கப்படுவதில் விடுதலைப் புலிகள் அக்கறை காட்டினார்கள். குற்றச்செயல்கள் எங்கு நடைபெற்றாலும் அங்கு சென்றுவிடுவார்கள்.

குற்றவாளி உடன் கைது செய்யப்பட்டு தண்டனைக்கும் உள்ளாக நேரிடுகின்றது.

# புலிகள் இல்லாததினால் குற்றங்கள் அதிகரிப்பு!

**தமிழீழ விடுதலைப் புலிகள் இருந்தபோது யாழ் குடாநாட்டில் குற்றச்செயல்கள் குறைந்தே காணப்பட்டன. இந்த உண்மையை தாயகத்தில் தமிழர் தரப்பு இதுவரை பகிரங்கமாகத் தெரிவிக்கவில்லை. ஆனால், வடபிராந்திய பிரதி காவல்துறை அத்தியட்சகர் லலித் ஜயசிங்கா பகிரங்கமாக அதனைத் தெரிவித்துள்ளார்.**

வில்லை. விடுதலைப் புலிகளை சுமார் 37 நாடுகள் தடைசெய்துள்ளன.

28 நாடுகளைக்கொண்ட ஐரோப்பிய ஒன்றியம் தமது தடைக்கான காரணத்தை இதுவரை தெளிவுபடுத்தவில்லை. ஆனால் அது இந்தியாவில் புலிகள் தடைசெய்யப்பட்ட காரணத்தையே இன்றும் கூறிவருகின்றது.

**வீ. ஆர். வரதராஜா**

ஆனால், இந்திய அரசுகூட இதுவரை தடைக்கான சட்டபூர்வமான காரணத்தைத் தெரிவிக்கவில்லை. தமிழ் நாட்டில் புதிய அரசின்கீழ் இயங்கும் 'கியூ' பிரிவு காவல்துறையினர் விடுதலைப் புலிகள் தொடர்பாக விசாரணை செய்துவருகின்றனர்.

கடந்த ஆண்டு மக்கள் நடமாடாத மூன்று இடங்களில் மிகக்குறைந்தளவிலான வெடிகுண்டுகளை வெடிக்கவைத்தனர். அவற்றை







குற்றச்செயல்கள் அவர்கள் காலத்தில் இடம்பெறவில்லை என்ற உண்மையை சிங்கள காவல்துறை அதிகாரி ஒருவர் எடுத்துக் கூறியுள்ளார். எனவே அவர்களின் ஜனநாயக ஆட்சிமுறை குறித்து அவரைவிட தமிழ் மக்கள் நன்றாகவே அறிவர்.

அதனால்தான் தமிழீழ விடுதலைப் புலிகள் மீண்டும் வரவேண்டும் என தாயக மக்கள் நாளும் பொழுதும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். விடுதலைப் போராட்டத்தில் பல்வேறு வரலாற்றுச் சாதனைகளை புலிகள் நிகழ்த்தியுள்ளார்கள். அது ஒரு அமைதியான சமுகப் புரட்சி என்று குறிப்பிட்டால், அது மிகையாகாது.

1. சாதிமுறை ஒழிப்பு
2. வரதட்சணைக் கொடுமை ஒழிப்பு
3. மாற்றுத் திறனாளிகளுக்குக் கொடுக்கப்படும் மதிப்பு
4. ஏதிலிகள் பாதுகாப்பு
5. பாலியல் வன்முறைக்கு எதிரான பாதுகாப்பு
6. சிறுவர் பாதுகாப்பு
7. வயது முதிர்ந்தவருக்கான பாதுகாப்பு

என்பன வன்னியில் ஏற்படுத்தப்பட்ட சமுகப் புரட்சிகள். அதேநேரத்தில் பொருளாதாரப் புரட்சி இவை எல்லாவற்றையும் மிஞ்சியதாகக் காணப்பட்டது. அரசு அத்தியாவசிய உணவுப் பொருட்களை முற்றாகத் தடைசெய்தபோது புலிகளின் திட்டமிட்ட பொருளாதார நடவடிக்கை வன்னி மக்களை வாழவைத்தது.

சிங்கள அரசு தமிழர்களைப் பட்டினிபோட்டுக் கொலைசெய்ய பொருளாதாரத் தடையைப் பயன்படுத்தியது. ஆனால் புலிகள் அதனை முறியடித்தனர். ஒருவர்கூட பட்டினியால் மரணிக்கவில்லை. வன்னியில் ஒரு பிச்சைக்காரர்கூட இருக்கவில்லை.

அதனால் வடமாகாணத்தில் குற்றங்கள் மிகக் குறைந்தே காணப்பட்டன. ஆனால் 2009ம் ஆண்டு மே மாதத்தின்பின் நிலைமை முற்றாக மாறிவிட்டது. வடமாகாணம் குற்றங்கள் மலிந்த இடமாக மாற்றப்படவேண்டும் என மகிந்த விரும்பினார்.

குற்றச்செயல்களில் ஈடுபடும் சிங்களவர்களையும் ஒருசில முஸ்லிம்களையும் அங்கு குடியேற்றினார்கள். வாள் வெட்டு கலாச்சாரத்தை மகிந்த கொண்டுவந்தார்.

அதிநியை கண்டிக்கும் அனைவருக்கும் வாள் வெட்டு பரிசளிக்கப்படும். சிங்களவர்களே வாள்வெட்டு குழுவாகச் செயற்படுவதாக தமிழர்களுக்கு மிக நன்றாகத் தெரியும். ஆனால் அதைப்பற்றி வெளியில் கதைக்கமுடியாத சூழ்நிலை.

அவர்களுக்கு இராணுவம் முற்றாகப் பாதுகாப்பு வழங்கி வருகின்றது. காவல்துறையினர் அவர்களைக் கைது செய்தாலும் அவர்கள் இராணுவத் தலையீடு காரணமாக வெளியில் வந்துவிடுவார்கள். குற்றங்கள் வடமாகாணத்தில் அதிகரிப்பதற்கு இதுவே காரணம்.

வடமாகாண தமிழ்ப் பாடசாலைகளுக்கு எதிரே போதைப்பொருள் பகிரங்கமாக விற்பனை செய்யப்படுவதற்கும் காவல்துறையின் கையாலாகத்தனமே முக்கிய காரணம். காவல்துறை கடும் நடவடிக்கையில் இறங்குமேயானால் வடமாகாணத்தில் நிகழும் குற்றச்செயல்கள் குறைந்துவிடும்.

விடுதலைப் புலிகள் காலத்தில் வட மாகாணத்தில் இந்தளவு குற்றச்செயல்கள் இடம்பெறவில்லை எனக்கூறும் பிரதி காவல்துறை அத்தியட்சகர் ஒரு விடயத்தை உணர்ந்து கொள்ளவேண்டும். விடுதலைப் புலிகள் பின்பற்றிய சட்டம், ஒழுங்கை அவர்களும் கடைப்பிடித்தால் குற்றங்கள் குறைந்துவிடும்.

தமிழீழ காவல்துறை TAMIL EELAM POLICE

# மீண்டும் பற்றியெரியும் ஈராக் - சேயோன்

கடந்த சில வாரங்களாக நேப்பாளத்தின் திசையில் இருந்த உலக ஊடகங்களின் ராடர் திரை, மீண்டுமொரு தடவை ஈராக்கின் பக்கம் திரும்பியுள்ளது. 'இஸ்லாமிய அரசு' என்றழைக்கப்படும் இஸ்லாமிய அடிப்படைவாத இயக்கத்தினரின் வசம் ஈராக்கின் மூன்றில் இரண்டு நிலப்பகுதிகள் கடந்த ஆண்டின் முதுவேனில் காலப்பகுதியில் கடுகதியில் வீழ்ந்த பொழுது உலக ஊடகங்களின் கவனம் முழுவதும் ஈராக்கின் பக்கமே இருந்தது. எங்கு பார்த்தாலும் ஈராக் என்பதே பேச்சாக இருந்தது.

ஆனால் வெள்ளம் வடிந்து போக, வெள்ளப் பெருக்குப் பற்றிய பேச்சும் அடங்கிப் போவது போன்று மாதங்கள் செல்லச் செல்ல ஈராக்கின் திசையில் இருந்து உலகின் ஏனைய பகுதிகளை நோக்கித் தமது ராடர் திரைகளை உலக ஊடகங்கள் திருப்பி விட்டன. இப்பொழுது மீண்டும் உலக ஊடகங்களை ஆக்கிரமிக்கும் பேசுபொருளாக ஈராக் மாறியுள்ளது.

இஸ்லாமிய அடிப்படைவாதத்தை நசுக்கியழிப்பதற்காகத் தமது படைய, புலனாய்வு வளங்களில் பெரும்பாலானவற்றை ஒதுக்கீடு செய்து, கண்ணில் எண்ணெய் ஊற்றி ஈராக்கையும், ஆப்கானிஸ்தானையும் உன்னிப்பாக அவதானித்து வந்த அமெரிக்காவின் தலைமையிலான மேற்குலகம், சர்வாதிகாரி பாசாத் அல் அசாத்திற்கு எதிராக சிரியாவில் மக்கள் கிளர்ச்சி வெடித்த பொழுது, கிணறு வெட்டப் பூதம் கிளம்பிய கதையாக 'இஸ்லாமிய அரசு' என்ற இஸ்லாமிய அடிப்படைவாத இயக்கம் விருட்சம் விட்டு விசுவரூபம் எடுக்கும் என்று எதிர்பார்த்திருக்கவில்லை.

2011ஆம் ஆண்டு சிரியாவின் சில பகுதிகள் இஸ்லாமிய அரசின் வசம் வீழ்ந்த பொழுதுகூட அதனையிட்டு ஆரம்பத்தில் மேற்குலகம் பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை. இஸ்லாமிய உலகில் ஆங்காங்கே முளைவிட்டுப் பின்னர் காணாமல் போகும் அடிப்படைவாத அமைப்புக்களில் ஒன்றாகவே இஸ்லாமிய அரசையும் அப்பொழுது மேற்குலகம் பார்த்தது. தவிர இஸ்லாமிய அரசின் தலைவரான அபு பக்கர் அல் பாக்தாதி அமெரிக்க படைய, புலனாய்வுப் பிரிவினரால் 'நன்கு' அறியப்பட்டவர்.

2004ஆம் ஆண்டு மாசி மாதம் ஈராக்கின் பலூஜா நகரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கை ஒன்றின் பொழுது அல்கைடா இயக்கத்தின் ஆதரவாளர் என்ற சந்தேகத்தின் பேரில் பாக்தாதியை அமெரிக்கப் படையினர் கைது செய்தனர். எனினும் தடுப்புக் காவலில் இருந்த பொழுது பணிவோடு பாக்தாதி நடந்து கொண்ட விதம் அவர் மீது அமெரிக்கப் படைய, புலனாய்வுப் பிரிவினருக்கு நம்பிக்கையை ஏற்படுத்தியது. புக்கா தடுப்பு முகாமில் பாக்தாதி தடுத்து வைக்கப்பட்டிருந்த பொழுது அங்கு அடிக்கடி கலகங்கள் வெடிப்பதுண்டு. அப்பொழுதெல்லாம் கைதிகளைச் சாந்தப்படுத்தித் தடுப்பு முகாமில் அமைதியைக் கொண்டு வருவதற்கு அமெரிக்கப் படைய, புலனாய்வுப் பிரிவினருக்கு பாக்தாதி உதவியாக இருந்தார். இது அவர் மீது அமெரிக்கப் படைய, புலனாய்வுப் பிரிவினர் மேலும் நம்பிக்கை கொள்வதற்கு வழிகோலியது. இதன் விளைவாக கைது செய்யப்பட்ட பத்து மாதங்களிலேயே (2004ஆம் ஆண்டு மார்கழி மாதத்தில்) தடுப்புக் காவலில் இருந்து பாக்தாதி விடுதலை செய்யப்பட்டார்.

ஆனால் 2011ஆம் ஆண்டு சிரியாவின் சில பகுதிகளைத் தமது கட்டுப்பாட்டின் கீழ் இஸ்லாமிய அரசு கொண்டு வந்து, ஈராக்கின் முக்கிய நகரங்களில் அலையலையாக மனித வெடிகுண்டுத் தாக்குதல்களை நிகழ்த்தத் தொடங்கிய பொழுதுதான் தம்மால் 'நன்கு' அறியப்பட்ட பாக்தாதி பற்றி கண்ணைக் கசக்கிக் கொண்டு அமெரிக்கா பார்க்கத் தொடங்கியது. ஒரு முக்கியத்துவமற்ற கைதி என முத்திரை குத்தி 2004ஆம் ஆண்டு மார்கழி மாதம் பாக்தாதியை தடுப்புக் காவலில் இருந்து விடுதலை செய்த அமெரிக்கா, 2011ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் அவரது தலைக்கு பத்து மில்லியன் டொலர்களை சன்மானமாக அறிவித்தது.

இருந்த பொழுதும்கூட இஸ்லாமிய அரசு ஒரு பெரும் பூதமாக விசுவரூபம் எடுக்கும் என்று அப்பொழுது அமெரிக்கா கருதியிருக்க முடியாது. ஏனென்றால் பாக்தாதியின் தலைக்கு சன்மானத்தை அறிவிப்பதற்கு ஐந்து மாதங்களுக்கு முன்னர்தான் பாகிஸ்தானில் நிகழ்த்தப்பட்ட கொமாண்டோ பாணியிலான அதிரடி நடவடிக்கை ஒன்றில் ஒசாமா பின்லாடனின் கதையை அமெரிக்கா முடித்திருந்தது. இதேபோன்ற இன்னொரு அதிரடி நடவடிக்கை மூலம், அல்லது ஆளில்லா விமானங்கள் மூலம் நிகழ்த்தப்படும் ஏவுகணைத் தாக்குதல் ஒன்றின் மூலம் ஏதோவொரு சந்தர்ப்பத்தில் பாக்தாதியின் கதையையும் முடித்து விடலாம் என்றும், அத்தோடு இஸ்லாமிய அரசின் ஆட்டமும் முடிவுக்கு வந்துவிடும் என்றும் அமெரிக்கா எண்ணியிருக்கக்கூடும். ஆனால் நடந்ததோ வேறு.

சிரியாவிலும், ஈராக்கிலும் மெதுவாகக் காலூன்றி வந்த இஸ்லாமிய அரசு, திடீரென கடந்த ஆண்டின் முதுவேனில் காலப்பகுதியில் ஈராக்கில் மிகப்பெரும் படை நடவடிக்கை ஒன்றைத் தொடங்கி நாட்டின் மூன்றில் இரண்டு நிலப்பகுதிகளைத் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்த பொழுதுதான் அலாவுதீனின் விளக்கிலிருந்து கிளம்பிய பூதமாக இஸ்லாமிய அரசு விசுவரூபமெடுத்திருப்பதை அமெரிக்கா கண்டுகொண்டது.

சதாம் உசேனின் ஆயுதப் படைகளைக் கலைத்து, அமெரிக்கா உருவாக்கிய ஈராக்கின் புதிய இராணுவம், நேற்றுப் பெய்த மழையில் முளைத்த காளான்களாகத் தோற்றம் பெற்ற இஸ்லாமிய அரசின் ஆயுதபாணிகளை எதிர்கொள்ள முடியாது ஓடத்தொடங்கினார்கள். ஆயுதங்களோடு ஓடினால் வேகமாக ஓடுவது கடினம் என்று எண்ணினார்களோ தெரியவில்லை, அமெரிக்கா வழங்கிய நவீன ஆயுதங்கள் அனைத்தையும் கீழே போட்டுவிட்டு ஓட்டமெடுத்தார்கள். சரி, ஓடித் தப்புவதற்கு அமெரிக்கா வழங்கிய அதிவேக இராணுவ வாகனங்களையாவது இவர்கள் பயன்படுத்தியிருக்கலாம். ஆனால் அவற்றையும் அப்படியே கைவிட்டு கால்நடையாக ஓட்டமெடுத்தார்கள்.

**விளைவு:** அதிஸ்டம் இஸ்லாமிய அரசின் கதவின் வழியாக நுழைந்து கொண்டது. ஈராக்கிய படைகளுக்கு அமெரிக்கா வழங்கிய அதிவேக இராணுவ வாகனங்கள், கனரக வாகனங்கள், பீரங்கிகள், ஏவுகணை செலுத்திகள், நவீன இயந்திரத் துப்பாக்கிகள் என எண்ணிலடங்காத ஆயுதங்கள் இஸ்லாமிய அரசின் வசம் வீழ்ந்தன.

செய்வதறியாது அமெரிக்கா திகைத்தது. ஏனைய மேற்குலக நாடுகளும் அதிர்ச்சியில் உறைந்து நின்றன. எந்தநேரமும் தலைநகர் பாக்தாத்திற்குள் இஸ்லாமிய அரசின் ஆயுதபாணிகள் நுழைந்து விடுவார்கள் என்ற பீதியில் ஈராக்கிய அரசாங்கமும், அதன் ஆயுதப் படைகளும் விழிபிதுங்கி நின்றன. என்ன செய்வது என்று தெரியாது தவித்துக் கொண்டிருந்த ஈராக்கிய அரசாங்கம், சியா இஸ்லாமிய ஆயுதக் குழுக்களின் உதவியை நாடியது: சியா இஸ்லாமியர்களின் கோட்டையாக விளங்கும் தனது பழைய வைரியான ஈரானிடம் சரணாகதி அடைந்தது.

மறுபுறத்தில் ஈராக்கிய அரசாங்கம் ஆட்டம் காணத்தொடங்க, வடக்கு ஈராக்கில் உள்ள குர்து மாநிலம் மகிழ்ச்சி வெள்ளத்தில் திளைத்தது. குர்து தனியரசுக்கான பிரகடனத்தை மேற்கொள்வதற்கு இதுதான் சரியான தருணம் என்று குர்து மக்கள் துள்ளிக் குதித்தார்கள். ஆனால் அவர்களின் மகிழ்ச்சி நீண்ட நாட்களுக்கு நீடிக்கவில்லை. பாக்தாத்தின் வாசல்வரை தனது ஆயுதபாணிகளை அனுப்பிய பாக்தாதிக்கு, குர்திஸ்தானையும் பிடிக்க வேண்டும் என்ற பேராசை ஏற்பட, இஸ்லாமிய அரசின் ஆயுதங்கள் குர்திஸ்தானையும் குறிவைத்தன. அங்குதான் பிரச்சினை தொடங்கியது.

ஈராக்கியப் படைகளிடம் இருந்து கைப்பற்றிய அமெரிக்கத் தயாரிப்பு ஆயுதங்களாலும், சவுதி அராபியாவில் இருந்து கோடிக்கணக்கில் வந்து குவிந்த பணத்தாலும் கொழுத்து நின்ற இஸ்லாமிய அரசோடு நேருக்கு நேர் நின்று மோதி வெல்லும் ஆயுத வலிமை குர்து போராளிகளிடம் இல்லாத பொழுதும், இஸ்லாமிய அரசை வெற்றி கொள்ளும் ஓர்மமும், அதற்காக உயிரை ஈகம்செய்யும் வீரமும் அவர்களிடம் இருந்தது.

மீண்டும் ஈராக்கிற்கு ஆயுதப் படைகளை அனுப்பி இரத்தம் சிந்துவதா? இல்லையா? என்று திண்டாடிக் கொண்டிருந்த அமெரிக்கா தலைமையிலான மேற்குலகின் பக்கம் இப்பொழுது அதிஸ்ட தேவதை திரும்பியது. உலக ஊடகங்களில் அன்று வரை பெரிதாக அறியப்படாத குர்து போராளிகள், ஒரே இரவில் கதாநாயகர்களாக மாறினார்கள். அவர்களின் வீரபிரதாபங்கள் தூசிதட்டப்பட்டு உலக ஊடகங்களில் காப்பியங்களாக மேம்படுத்தப்பட்டன. இஸ்லாமிய அரசின் போர் அணிகளை எதிர்கொண்டு களமாடிக் கொண்டிருந்த குர்து போராளிகளுக்குத் துணையாக குர்திஸ்தான் நோக்கி அமெரிக்க யுத்த விமானங்கள் விரைந்தன. தரையில் இருந்து குர்து போராளிகள் தகவல் கொடுக்க, இஸ்லாமிய அரசின் இலக்குகளை அமெரிக்க யுத்த விமானங்கள் துவம்சம் செய்தன. குர்து போராளிகளுக்கு பக்க பலமாக முழு மேற்குலகமுமே அணிதிரண்டு நின்றது. ஒருவாறு நீண்ட சமர்களுக்குப் பின்னர் குர்திஸ்தானின் எல்லையில் இருந்து கணிசமான தூரத்திற்கு இஸ்லாமிய அரசின் போர் அணிகள் பின்தள்ளப்பட்டன. அத்தோடு ஈராக்கின் திசையில் திரும்பியிருந்த உலக ஊடகங்களின் ராடர் திரைகள் மெல்ல மெல்ல ஏனைய நாடுகளின் பக்கமும் திரும்பின.

**இப்பொழுது மீண்டும் ஈராக் பேசுபொருளாகிவிட்டது.**

குர்து போராளிகளிடம் வாங்கிக் கட்டிக் கொண்ட பாக்தாதி மீண்டும் தனது கவனத்தை பாக்தாத்தின் பக்கம் திருப்பியுள்ளார். பாக்தாத்தில் இருந்து அறுபது மைல் தொலைவில் உள்ள ரமாடி நகரம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இஸ்லாமிய அரசின் போர் அணிகளின் வசம் வீழ்ச்சி கண்டுள்ளது. கடந்த ஆண்டு முதுவேனில் காலப்பகுதியில் இஸ்லாமிய அரசின் படை நடவடிக்கை தொடங்கிய பொழுது ஓட்டமெடுத்த அதேவேகத்தில் ரமாடியைக் கைவிட்டு ஈராக்கிய ஆயுதப் படைகள் ஓடித்தப்பியுள்ளன. கூடவே அண்மையில் அமெரிக்கப் படையினர் வழங்கிய நவீன ஆயுதங்களையும், கனரக வாகனங்கள், அதிவேக இராணுவ வாகனங்களையும் இஸ்லாமிய அரசின் ஆயுதபாணிகளிடம் இனாமாக வாரிக் கொடுத்து விட்டு ஈராக்கிய படையினர் தப்பிச் சென்றுள்ளார்கள்.

ரமாடியைக் கைவிட வேண்டாம் என்று சற்று அதட்டலாகவும், பின்னர் கெஞ்சலாகவும் ஈராக்கிய பிரதமர் கைதர் அல் அபாடி வேண்டிக் கொண்ட பொழுதும், அதையெல்லாம் காதில் போட்டுக் கொள்ளாது தலைநகர் பாக்தாத்தின் திசையில் ஈராக்கிய படைகள் தப்பியோடிச் சென்றுள்ளன.

இனி என்ன நடக்கப் போகின்றது? என்பதுதான் இப்பொழுது உலக ஊடகங்களைக் குடையத் தொடங்கியிருக்கும் பிரச்சினை. மறுபுறத்தில் ஓராண்டுக்குப் பின்னர் மீண்டும் பாக்தாத்தின் வாசலில் வந்துநிற்கும் இஸ்லாமிய அரசு, ஈராக்கிய அரசாங்கத்திற்கு சமாதிகட்டினால் என்ன செய்வது என்பது அமெரிக்கா தலைமையிலான மேற்குலகிற்கு ஏற்பட்டிருக்கும் புதிய தலையிடி. கள நிலவரங்களை களத்தில் நிற்பவர்களாலேயே எதிர்வுகூற முடியாது எனும் பொழுது, ஈராக்கில் அடுத்தது என்ன நடக்கும் என்பதை நாற்காலி ஆய்வுகள் மூலம் நாம் ஆரூடம் கூற முற்படுவோமானால் அதைவிட அபத்தம் இருக்க முடியாது.

ஆனால் ஒன்றை மட்டும் உறுதியாகக் கூறலாம். மீண்டும் ஈராக்கிய அரசாங்கம் ஆட்டம் காணத் தொடங்கியிருப்பது குர்து போராளிகளுக்குக் கிடைத்திருக்கும் மிகப்பெரும் வரப்பிரசாதம் என்பதுதான் அது. 'இஸ்லாமிய அரசை எதிர்கொண்டு தோற்கடிக்கும் வீரமும், ஆளுமையும் எங்களுக்குக்கு மட்டும்தான் உண்டு: அது ஈராக்கிய ஆயுதப் படைகளிடம் இல்லை' என்று இதுநாள் வரை குர்து மாநில அதிபர் மசூட் பார்சானி கூறிவந்தது ஓராண்டுக்குப் பின்னர் இப்பொழுது மெய்யப்படத் தொடங்கியிருக்கிறது.

கடந்த 8ஆம் நாளன்று வெள்ளை மாளிகைக்கு அழைக்கப்பட்ட அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா அவர்களால் பார்சானி மதிப்பளிக்கப்பட்டார். அப்பொழுது குர்து தனியரசை அமெரிக்கா அங்கீகரிக்க வேண்டியதன் அவசியம் பற்றியும், நேரடியாக நவீன ஆயுதங்களை குர்து போராளிகளுக்கு வழங்க வேண்டியதன் முக்கியத்துவத்தையும் பார்சானி எடுத்துரைக்கத் தவறவில்லை.

இனிவரும் நாட்களில் நிகழக்கூடி பாக்தாத் நோக்கிய இஸ்லாமிய அரசின் படை நடவடிக்கையை ஈராக்கிய படைகள் தடுத்து நிறுத்தத் தவறினால், அதனையிட்டு பார்சானியை விட மகிழ்ச்சியடைவதற்கு வேறு எவரும்

(08ம் பக்கம் பார்க்க)

## Association Mediacentre

Numero - எண்
MC -

PHOTO

**FICHE D 'ADHERENT - உறுப்பினர் படிவம்**

Nom / பெயர்: ……
Prénom / தந்தையின் பெயர்: ……
Adresse / விலாசம்: ……

Date , Lieu de Naissance / பிறந்த நாளும் இடமும் :
……/……/…… ……

Contacts / தொடர்புகள்
…… …… ……
Téléphone / தொலைபேசி Portable / கைத்தொலைபேசி E-MAIL / மின்னஞ்சல்

Votre Qualité / உங்கள் சிறப்புத் தகுதிகள்: ……

Avez - vous été Ecrivan, Editeur, Analyste ……
உங்களுக்கு ஊடக, எழுத்துத்துறையில் அனுபவம் உண்டா?

Sur votre Travail / உங்கள் தொழில் நிலை: ……

Etes - Vous Adhérent d 'une autre Organisation? ……
நீங்கள் வேறு அமைப்புக்களில் அங்கத்துவரா?

Langues / உங்கள் மொழி ஆளுமை: ……

Fait à / இடம்: ……
Le / நாள்: ……

Signature / கையொப்பம் : ……

நிர்வாகப் பாவனைக்கு
Photographie புகைப்படத்துறை ☐
Videographie ஒலி–ஒளி ☐
Journalism பத்திரிகைத்துறை ☐

Mediacentre - centredemedia@gmail.com

## mediacentre
## ஊடகமையம்

20.05.2015

### ஊடக மையம் விடுக்கும் அழைப்பு

ஊடகத்துறையில் நீண்ட காலமாகத் தனது பங்களிப்பை வழங்கிவரும் ஊடக மையம் (Media Centre) காலத்தின்தேவை கருதி தனது செயற்பாடுகளை விரிவு படுத்தும் நோக்கில் புதிய செயற்பாட்டாளர்களை இணைத்துக்கொள்ள விரும்புகின்றது. ஆர்வமும், அனுபவமும் உள்ளவர்கள் ஊடக மையத்தில் உங்களையும் இணைத்துக்கொண்டு தமிழீழத் தேசியத்திற்கு உங்கள் பங்களிப்பை வழங்கலாம்.

எமது செயற்பாடுகளாக

01) தமிழரின் நிகழ்கால வாழ்க்கை மற்றும் வரலாற்றை ஆவணமாக்கல், பகிர்ந்து கொள்ளல்.
02) தமிழ்ச் செய்தியாளர்கள், படப்பிடிப்பாளர்களை (நிழற்படம் மற்றும் வீடியோ) இணைத்தல்.
03) அவர்களது பாதுகாப்பு, ஊடக உரிமைகள், சுதந்திரத்தையும் பாதுகாத்தல்.
04) அவர்கள் மீது பிரயோகிக்கப்படும் அழுத்தங்கள், அச்சுறுத்தல்களுக்கு எதிராகக் குரல் கொடுத்தல்.
05) பிரெஞ்சு, அனைத்துலக செய்தியாளர்களுடனும் உறவுகளை உருவாக்குதல். (கூட்டுறவு, நட்பு மற்றும் ஒத்துழைப்பு)
06) தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளுக்காக பிரெஞ்சு மற்றும் அனைத்துலக தொடர்புசாதனங்கள் மூலம் குரல்கொடுத்தல்.
07) உறுப்பினர்களுக்கு ஊடகவியல் சார்ந்த விசேட பயிற்சிப் பட்டறைகளை ஒழுங்கு செய்தல்.
08) புதிய இளம் ஊடகவியலாளர்களை உருவாக்குதல்.
09) தாயகத்தில் ஊடகவியலாளர்களை ஊக்குவித்தலும், அதற்கான கட்டமைப்புக்கு உதவுதலும்.

என்பவை அமையும்

நன்றி.

**உங்கள் தொடர்புகளுக்கு**
centredemedia@gmail.com

mediacentre - centredemedia@gmail.com

# பிரான்சில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் உணவு தவிர்ப்பு கவனயீர்ப்பு நிகழ்வு!

பிரான்சில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தில் உணவு தவிர்ப்பு கவனயீர்ப்பு நிகழ்வு பிரான்சு தமிழர் ஒருங்கிணைப்புக்குழு, பிரான்சு தமிழீழ மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் பரிஸ் Place de la République பகுதியில் ஐந்து நாட்களாக தொடர்ச்சியாக நடைபெற்றது. இந்நிகழ்வை தமிழக வாழ்வுரிமைக் கட்சித் தலைவர் திரு வேல்முருகன் அவர்கள் முள்ளிவாய்க்கால் தமிழின அழிப்பு அடையாளச் சின்னத்தின் முன்பாக சுடரேற்றி ஆரம்பித்துவைத்தார்.








### முள்ளிவாய்க்கால் நிழலாய் பின் தொடர்கிறது...

ணிலே சாவோம் என்று முடிவெடுத்த போராளிகளைத் தெரியுமா?. மார்பில் வெடி குண்டைப் பொருத்திக் கொண்டு கடைசி நிமிடம் வரை மக்களுக்குப் பாதுகாப்புக் கொடுத்த போராளிகளைத் தெரியுமா? போர் இறுதிக்கட்டத்தை நெருங்கிய போதும் எதுவித சலனமும் இன்றி அங்கு நின்றிருந்த போராளிகளைத் தெரியுமா? தெரிந்திருந்தால் இந்தப் போராட்டத்தை கொச்சைப்படுத்த மனம் வருமா.

முள்ளிவாய்க்காலில் முடிவடைந்தது போரல்ல அங்கு நியாயம் குழிதோண்டிப் புதைக்கப்பட்டுள்ளது. அந்த மண்ணைத் தோண்டினால் பல பேரின் நியாயக் குரல்கள் வானத்தை முட்டும். இதனை எவரும் செய்ய மாட்டார்கள் ஏனெனில் சிறீலங்கா அரசு தொடக்கம் உலக நாடுகள் வரை முள்ளிவாய்க்கால் கொடூரத்தில் பங்கெடுத்துள்ளார்கள். அதனால் எவர் வந்து கிண்டினாலும் இந்த மண்ணில் கிண்டுபவரின் முகம் மட்டும் வெளிச்சத்துக்கு வரும் என்பதால் தான் எவரும் முள்ளிவாய்க்காலை கிண்டிப்பார்க்க தயங்குகிறார்கள். தமிழ் மக்கள் அந்த இடத்துக்குச் சென்று பார்வையிடும் போது கூட பின்னால் இராணுவப் புலனாய்வாளர்கள் மணந்தபடி நிற்கிறார்கள். எனவே முள்ளிவாய்க்கால் சிங்கள ஆட்சியாளர்களை உலுக்கி எடுத்துக் கொண்டே இருக்கும். மாவீரர் துயிலும் இல்லங்களில் சாமியை கூட்டி வந்து ஓதிவிட்டு அங்கு இராணுவ முகாம்கள் அமைத்தது போல ஏதாவது ஒரு சாமியை வைத்து ஓதி முள்ளிவாய்க்காலில் இராணுவ முகாம் போடலாம் என்று கூட நினைத்து விடாதீர்கள். ஆவிகள் வந்து கொல்லாது நினைவுகள் வந்து கொல்லும்.

## தலைவனின் பெயராலே.....

என்று கேட்டவுடனேயே அந்த பெண்ணின் பதில் 'ஆமா தலைவர்' என்று சொல்வதும், 'அப்படின்னா, ஏன் அவரை தீவிரவாதி என்கிறார்கள்?' என்று கேட்டதும் அந்த கிராமக்கள் 'அவருக்கு எதிராக இந்தியா மட்டு மின்றி உலகமே எதிராக இருக்கிறது' என்கிறார்கள். அதற்கு அந்த காணொளி நிருபர்? ஏன் அப்படி? என்று கேட்டபோது? ஏன்னா அவர் கொள்கையில் உறுதியா நிற்கிறார். அதனாலேயே எல்லோரும் எதிர்க்கிறார்கள்? என்று பதிலளிக்கிறார்கள். தொடர்ந்து நிருபரின் கேள்வி. அவர் உயிருடன் இருக்கிறாரா? என்பது. அதற்கு அந்த மக்களின் பதில் 'அவர் உயிருடன் இருக்கிறாரா இல்லையான்னு நமக்கு தெரியாது. ஆனா அவர் திரும்பவருவேணும் இந்த இனத்துக்கு..' என்று சொல்லும் போது ஒரு மனிதனின் கருத்தும் உண்மையாக அவன் வாழும் இலட்சிய வாழ்வும் தூரங்கள் கடந்தும் மனிதர்களை பற்றிக்கொள்ளும் என்று தெரிகிறது. (https://www.youtube.com/watch?v=yHs1gEyZqLU)

தேசியத் தலைவரை தம் வாழ்வில் நேரில் ஒரு பொழுதில்கூட காணாத எத்தனையோ செயற்பாட்டாளர்கள் இத்தனை பின்னடைவுக்கு பின்னரும், இத்தனை தோல்விக்கு பின்னரும், அனைத்து கட்டமைப்பும் சிதறி உருத்தெரியாமல் ஆகிவிட்ட பின்னரும் இன்னும் தொடர்ச்சியாக அதே வேகத்துடன் செயற்பட்டுகொண்டிருக்கிறார்கள் என்றால் அவர்களை வழிநடாத்துவது அவரது கருத்துக்களே, தத்துவமே தவிர அவரின் முகம் பார்த்த பெரும்பேறல்ல. அண்ணையை சந்தித்த எல்லோருமே அவரது இலட்சிய உறுதியை, அதற்கான நேர்மைமிகு அவரது வாழ்வை, அரசியலை புரிந்திருப்பார்களா என்ன..? இந்த இடத்தில் இன்னுமொரு போராளியை குறிப்பிட்டு இதனை முடிக்கலாம் என நினைக்கிறேன். (ஏனென்றால் அவனது நினைவு நாளும் 18மே தான்– (18.05.1984)

1983 இனப்படுகொலை நாட்களின்போது ஏற்பட்ட பேரெழுச்சி பல இளைஞர்களை எமது போராட்டத்தில் இணைய செய்தது. அப்படியே இலண்டனில் இருந்தும் சில இளைஞர்கள் தமிழ்நாட்டுக்கு வந்தார்கள். தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பில் இணைய வந்தவர்களில் குமரனை (குமரப்பா) தவிர வேறு யாரும் தேசியத் தலைவரை நேரில் கண்டதில்லை. அவர்களின் பகீனும் ஒருவன். ஆனால் இலட்சியத்திலும் தலைவரின் வழிகாட்டலை முழுமையாக ஏற்றதும் அப்போதே அவன் கதையில் தெரிந்தது.

பின்னர் ஒருசில வாரத்தில் தலைவர் தமிழ்நாட்டுக்கு வந்துவிட்டார். புதிதாக இணைய வந்தவர்களை சந்திக்கும் அந்த பொழுதில் தலைவரை முழுமையாகவே பகீன் உள்வாங்கி விட்டான் என்றே சொல்ல வேண்டும். தலைவரை சந்தித்த பின்னர் தனக்கு பயிற்சிகூட தேவையில்லை என்று சொல்லி தான் தாயகம்போய் வேலை செய்ய சென்றான். அவன் அங்கு சென்றிருந்த பொழுதில் 18.05.84ல் வல்வெட்டித் துறையில் நடந்த ஒரு தற்செயலான சம்பவம் ஒன்றில் எந்தவொரு அடுத்த கண தயக்கமும் இன்றி அமைப்பின் கொள்கைக்கு முழுமையாக சயனைட் அருந்தி வீரமணமடைகிறான். தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் முதலாவது சயனைட் மரணம் அவனது. சயனைட் வேலை செய்யுமா செய்யாதா இதனை கடித்தால் தப்பவே முடியாது என்பன போன்ற கேள்விகளுக்கு அப்பால் தலைவரின் வழிகாட்டலும் அதன் வழியான போராட்டமும் காப்பாற்றபடவேண்டும் என்பதற்காக தன்னை ஆகுதியாக்கினான். இத்தனைக்கும அவன் கடித்த குப்பி வேலை செய்ய கிட்டத்தட்ட 45நிமிடங்கள் எடுத்தது.

ஒரு சந்திப்பு. அதிலேயே தலைவரை முழுமையாக உள்வாங்கி அவரைப் போலவே சிந்திக்கும் திறன் பெற்ற பகீன் எங்கே பல தடவை தலைவரை சந்தித்ததாக சொல்லிக் கொண்டே தலைவரின் இலட்சியத்தை மண்போட்டு மூடுபவர்கள் எங்கே.. 'தாயை நேசிக்க மீசைமுளைக்க தேவையில்லை...'என்று புதுவை எழுதியது போலவே தேசியத் தலைவரை புரிந்து கொள்ளவும் அவரை பின்தொடரவும் அவரது இலட்சிய பாதையில் பயணிக்கவும் அவரைச் சந்தித்து இருக்கத் தேவையில்லை. உணர்ந்து கொண்டாலே போதும். தலைவரை உணர்ந்து கொண்டவர்கள் ஒருபோதும் தடம்மாறி பயணிக்க மாட்டார்கள். பயணிக்கவும் முடியாது.

### தமிழ் தேசிய கூட்டமைப்பு ...

கொலை செய்த உறவுகளை நினைவு கூறும் முகமாக முள்ளிவாய்க்கால் பகுதியில் நினைவேந்தல் செய்ய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தபோது முல்லைதீவு காவல்துறையினரால் தமிழ் தேசிய மக்கள் முன்னணியினருக்கு தடையுத்தரவு விதிக்கப்பட்டிருப்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். மத்திய அரசாங்கத்தில் எங்களுக்கு அமைச்சுப் பதவி வேண்டாம் எனத் தெரிவிக்கும் கூட்டமைப்பு அமைச்சரவையின் அதிகாரங்களை விடவும் உயர்ந்த அதிகாரம் கொண்ட நிறைவேற்று அதிகார சபையில் அங்கம் வகிக்கின்றார் கூட்டமைப்புத் தலைவர். சிறீலங்காவில் அமைச்சரவையின் அதிகாரத்தை விடவும் இந்த நிறைவேற்றச் சபைக்கு கூடுதல் அதிகாரம் காணப்படுகிறது. இவற்றைக் கொண்டுதான் மக்களை அடக்கி ஒடுக்க முற்படுகிறதா? என்ற கேள்வி எழுகிறது. மகிந்த அரசாங்கம் மாறினால் தமிழர்க்கு ஒரு மாற்றம் வரும் எனத் தெரிவித்த கூட்டமைப்பு, இன்று அதன் நிலைப்பாடே முற்றிலும் மாறியுள்ளதை உணரக் கூடியதாக உள்ளது. பெரும்பாலான தமிழர்களின் கருத்து மகிந்த மாறினாலும், மகிந்தாவின் சிந்தனை மாறவில்லை என்பதுதான் உண்மை. காணி விடுவிப்பாக இருக்கலாம், அரசியல் கைதிகளின் விடுதலையாக இருக்கலாம், கைதுகள் கூட அதேபாணியில்தான் நடைபெறுகிறது. எனவே, இன்று முகங்கள் மாறினாலும் சிந்தனைகள் மாறாத நிலையில், நல்லாட்சிக்கான அரசாங்கம் எனத் தெரிவிக்கும் கூட்டமைப்பும் கூட சிங்கள ஆட்சியாளர்களின் போக்குகளை உணராது செயற்படுவது எதிர்காலத்தில் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை நிராசையாக்கிவிடும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

## சத்தியத்தின் சாட்சியாக...

வாய்ந்த அரசுகள் இன்று கருதுவது ஏதோ உண்மைதான். இப்பார்வையே முள்ளிவாய்க்காலில் தமிழீழ நடைமுறை அரசை சிங்களம் அழிப்பதற்கு உலகம் உறுதுணை நின்றதற்குக் காரணமாக இருந்தது என்பதையும் நாம் மறுக்க முடியாதுதான். ஆனால் இதேநிலை தொடரும் எனக்கூற முடியாது.

உதாரணமாக இங்கு நாம் யூதர்களை எடுத்துக் கொள்ளலாம். கிறிஸ்துவுக்கு முன் 63ஆம் ஆண்டில் ரோமப் பேரரசிடம் தமது இறைமையை யூதர்கள் பறிகொடுத்தார்கள். தொடர்ந்து வந்த ஆண்டுகளில் தமது சொந்த மண்ணை விட்டுப் பிடுங்கியெறியப்பட்ட யூதர்கள் உலகம் முழுவதும் அலைந்து, உழன்று ஐரோப்பாவில் வணிகர்களானார்கள். ஆனால் அங்கும் அவர்களால் நிம்மதியாக வாழ முடியவில்லை.

ஐரோப்பா முழுவதும் யூத எதிர்ப்புவாதம் தலைவிரித்தாடியது. யேர்மானிய சர்வாதிகாரி கிட்லர் பிறப்பதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே ஐரோப்பாவில் யூத எதிர்ப்புவாதம் தாண்டவமாடியது. ஏறத்தாள நானூற்றுப் பத்தொன்பது ஆண்டுகளுக்கு முன்னர் 1596ஆம் ஆண்டில் புகழ்பூத்த ஆங்கில நாடகாசிரியரான வில்லியம் சேக்ஸ்பியர் அவர்களால் எழுதப்பட்ட மேர்ச்சன்ற் ஒவ் வெனிஸ் (வெனிசின் வணிகன் என்று தமிழில் பொருள்படும்) என்ற நூல் யூதர்களை மிகவும் கேவலமாகத் திட்டித் தீர்க்கின்றது. இதேபோன்றதே இங்கிலாந்தின் புகழ்பூத்த புதின எழுத்தாளரான சார்ள்ஸ் டிக்கன்ஸ் அவர்களால் எழுதப்பட்ட ஒலிவர் ருவிஸ்ற் என்ற புதினக் கதையாகும். 1837ஆம் ஆண்டு வெளியாகிய இந்நூல் யூதர்களைத் திருடர்களாக வர்ணித்து இழிவுபடுத்துகின்றது.

இதுபற்றி கிட்லரின் வீழ்ச்சிக்குப் பின்னரான காலப்பகுதிகளில் அரசறிவியல் ஆய்வு நூல்களை எழுதிய ஹனா ஆர்டென்ற் என்ற யேர்மானிய யூதப் பெண் அரசறிவியலாளர், சர்வாதிகாரத்தின் தோற்றுவாய் என்ற நூலில் குறிப்பிடுகையில், யூத எதிர்ப்புவாதம் என்பது கிட்லருக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே ஐரோப்பாவில் தோற்றம் பெற்ற இனவாதக் கருத்தியல் என்ற மெய்யுண்மையை நிறுவியிருக்கின்றார்.

ஏன் யேர்மனி உள்ளடங்கலாக ஐரோப்பாவில் அறுபது இலட்சம் யூதர்களை கிட்லர் படுகொலை செய்த பொழுது, உடனடியாக அதனையிட்டு ஐரோப்பிய மக்கள் பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை. ஏனென்றால் அன்றைய ஐரோப்பிய சமுதாயம் யூத எதிர்ப்புவாதக் கருத்தியலிலேயே மூழ்கியிருந்தது. அவ்வாறு யூத எதிர்ப்புவாதத்தில் மூழ்கிக் கிடந்த ஐரோப்பிய சமூகம், கிட்லரின் வீழ்ச்சிக்குப் பின்னரே யூதர்களின் விடயத்தில் மெல்ல அனுதாபம் காட்டத் தொடங்கியது. இதுவே மத்திய கிழக்கில் இஸ்ரேல் உருவாகுவதற்கும் வழிகோழியது.

தமிழீழ மக்களின் விடயத்திலும் இது பொருந்தும். 2009 மே 18வரை வகைதொகையின்றி தமிழ் உயிர்களை சிங்களம் வேட்டையாடிய பொழுது கண்மூடி, வாய்பொத்தி, அமைதி காத்து சிங்களத்திற்கு உறுதுணை நின்ற மேற்குலகம் இன்று தமிழர்களுக்காக ஐக்கிய நாடுகள் மன்றத்தில் தீர்மானங்களை நிறைவேற்றுகின்றது. அதாவது அன்று தமிழர்களுக்காக குரல்கொடுப்பது தமது நலன்களோடு ஒவ்வாத ஒன்று என்று கருதிய மேற்குலகம், இன்று தமிழர்களுக்காகக் குரல்கொடுப்பதைத் தமது நலன்களுக்கு உட்பட்ட ஒன்றாகக் கருதத் தொடங்கியிருக்கின்றது. இது தனியரசுப் பாதையில் தமிழர்களுக்கு தென்படும் ஒரு சிறிய ஒளி எனலாம்.

இனியும் தொடரப் போகும் தமிழீழத் தனியரசுக்கான பயணம் நீண்டதாகவும், கடுமையானதாகவும் இருக்கும் என்பதில் எவருக்கும் ஐயம் இருக்க முடியாது. முள்ளிவாய்க்காலில் துவண்டு போன தமிழீழ தேசம் அப்படியே சுருண்டு கிடக்கும் என்று எவராவது எண்ணினால் அதனைவிட முட்டாள்தனம் இருக்க முடியாது. அடக்குமுறைகள் தொடரும் வரை அவற்றுக்கு எதிரான போராட்டங்களும் வெடித்தெழும் என்ற வரலாற்று நியதிக்கு இணங்க என்றோ ஒரு சந்தர்ப்பத்தில் தமிழீழ தேசம் மீண்டும் எழுச்சி கொள்வதை எவராலும் தடுத்து நிறுத்த முடியாது. அதேபோன்று தமிழீழத் தனியரசு நிறுவப்படுவதைத் தமது நலன்களுக்கு உகந்ததாக உலகின் வலிமை வாய்ந்த நாடுகள் கருதும் காலமும் ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் கனிந்தே தீரும். அதுவரை தமிழீழத் தனியரசுக் கொள்கையில் நாம் உறுதியோடு நிற்போம். உரத்துக் குரல் கொடுப்போம்.

பல ஆண்டுகளுக்கு முன்னர் தமிழீழ தேசியத் தலைவர் அவர்கள் தீர்க்கதரிசனமாகக் கூறியது போன்று, 'போராட்ட வடிவங்கள் மாறலாம். ஆனால் எமது போராட்ட இலட்சியம் மாறப் போவதில்லை' என்பதை நாம் நினைவில் நிறுத்தி தனியரசுக்கான இலட்சியத்தில் உறுதியாக நிற்போம். தலைவர் அவர்கள் குறிப்பிட்டது போன்று 'சத்தியத்தின் சாட்சியாக நின்று எமது மாவீரர்களின் தியாக வரலாறு எமக்கு வழிகாட்டும். அந்தச் சத்தியத்தின் வழியில் சென்று நாம் எமது இலட்சியத்தை அடைவோம் என்பது உறுதி' என்பதை முள்ளிவாய்க்காலில் தமிழீழ நடைமுறை அரசு அழிக்கப்பட்டு ஆறு ஆண்டுகளின் பின்னரும் நாம் நினைவில் கொள்வோம்.

# Ass. des habitants de Pungudutivu - France

## புங்குடுதீவு மக்கள் ஒன்றியம் - பிரான்ஸ்

### பாரதி விளையாட்டுக் கழகம்

இணைந்து நடாத்தும்

சித்திரை திங்களில்

# முத்தமிழ் விழா 6

31-05-2015

ஞாயிறு

நேரம்: 14h00

## சிறப்பு விருந்தினர்
## தமிழ் திரையுலகில்

சித்திரம் பேசுதடி - அஞ்சாதே - யுத்தம் செய் - நந்தலாலா - முகமூடி
ஓநாயும் ஆட்டுக்குட்டியும் - பிசாசு போன்ற வெற்றி படங்களின்

## இயக்குனர்
## திரு.மிஸ்கின் அவர்கள்




### நிகழ்ச்சிகள்

- வரவேற்பு நடனம்
- நாவலர் குறும்படப் போட்டி
- பரிசளிப்பு வைபவம்
- அறிவுத்திறன் போட்டி
- பரிசளிப்பு வைபவம்
- RC NEW BOYS & GIRLS
- நடனங்கள்
- நாடகம்...

விழா நடைபெறும் மண்டபம்

**50, Rue de Torcy**
**75018 Paris**

தொடர்புகளுக்கு...

06 14 08 63 55 - 06 84 15 23 96 - 06 16 47 65 91 - 06 64 50 92 02 - 06 19 92 27 93

RESTAURANT INDIRA
Spécialités Indienne
Flash-moi
23, rue Cail - 75010 Paris
M° : Gare du Nord/La Chapelle
Tél : 01 46 07 82 90
Email : restaurantindira23@yahoo.com
Facebook : Restaurant Indira
www.restaurantindira.com

ஆண்கள், பெண்கள், குழந்தைகளுக்கான சிகையலங்கார நிலையம்.

COIFFURE VITHUSA
TÉL: 06 52 44 89 27
M° : Aubervilers 4 chemmins
Bus : 170,150,249,152
40, RUE HENRI BARBUSSE
93300 AUBERVILLERS


சகாதேவன் மொழிபெயர்ப்பு நிலையம்
நகர சபையில் திருமணம் செய்ய, நகர சபையில் திருமண அறிவிப்பு கொடுக்க, குடும்பத்தை ஸ்பொன்சர் செய்ய, வெளிநாட்டு அமைச்சு மூலம் ஸ்பான்சர் செய்ய, தேசிய பிரஜா உரிமை கோர, போலீசில் வாகனச்சாரதிப் பத்திரம் மாற்ற, போலீசில் வதிவிட உரிமைப் பத்திரம் (விசா) பெற, நீதிமன்றத்தில் பெயர் மாற்றம் செய்ய, ஒப்ரா மற்றும் கமிசனுக்கு விண்ணப்பிக்க
- எமது மொழிபெயர்ப்புக்கள் சட்டபூர்வமாக ஏற்றுக்கொள்ளப்படும்.
- நேரில் வரமுடியாதவர்களுக்கு தபால் மூலம் மொழிபெயர்ப்புக்கள் அனுப்பி வைக்கப்படும்.
தொடர்பு கொள்ள
SAGADEVAN Pierre
26, rue Philippe de Girard,75010 Paris
Tél: 01 46 07 50 23 Mobile: 06 81 34 41 06
E.mail: saga_de_van@yahoo.fr

தரமான கடலுணவு வகைகளை மலிவு விலையில் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்
Ocean Indien
30 ஈரோவுக்கு மேல் பொருட்கள் வாங்கினால் 5% சிறப்புக்கழிவு
195, Rue du fbg St,Denis, 75010 Paris - FRANCE
Tél - 01 42 09 31 50 Fax - 01 42 09 31 60


64, rue louis blanc
75010 PARIS
Tél: 01 42 05 16 66
உங்கள் சாதாரண தோற்றத்தை கவர்ச்சியானதாக்கும் கலை வண்ணம் எம்மிடம் உள்ளது.
NEW SAGANA
COIFFURE

பாரீஸ் அறிவாலயம்
பாரீஸ் மாநகரில் 10வது ஆண்டில் அறிவாலயம் புத்தகசாலை இலக்கிய அறிவியல் நூல்கள் ஆரம்ப. தமிழ்க் கற்கைக்குரிய இலங்கை இந்திய பயிற்ச்சிப் புத்தகங்கள் சுயமுன்னேற்ற நூல்கள் வாங்கிட
Paris Arivalayam
7, rue Perdonnet, 75010 Paris
Metro : La chapelle Tel: 01 44 72 03 34
இலங்கை இந்திய புலம் பெயர்ந்த தமிழ் எழுத்தாளர்களின் படைப்புக்கள், மேலும் நவீன தேடலுக்கான அனைத்து வெளியீடுகள் பாடசாலை அலுவலகத் தேவைக்கான உபகரணங்கள், சுயமுன்னேற்ற நூல்கள் அனைத்தும் ஒரே இடத்தில் வாங்கிட இன்றே செல்ல வேண்டிய இடம்.

உங்கள் உணவுவிடுதி மற்றும் உங்கள் இல்ல, மண்டப வைபவங்களுக்கான பொருட்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள.
Rapid Emballages
1 Bis rue du chemin Vert
93800 Epinay sur Seine
Tél / Fax.: 01 39 83 68 81 Rép. : 01 58 34 04 22
Port: 06 66 79 56 89 / 06 16 81 22 00

உதயனின் புதிய உதயம்
நோவா சலூான்
NOVA COIFFURE

ஆண்கள் சிறுவர்களிற்கான சிகை அலங்காரங்கள்
ஆண்களிற்கான முக அலங்காரமும் செய்யப்படும்
திங்கள் முதல் சனிவரை
9h30 இலிருந்து 20h30 வரை
6 Rue Cail - 75010 Paris
07 51 22 70 01
M°:La chapelle

Aubervilliers quatre chemins ல் ஒரு தமிழ்க்கடை
Anna Marché
அனைத்து மளிகைப்பொருட்களுக்கும்...
மொத்தமாக கொள்வனவு செய்வோருக்கு விசேட விலைக்கழிவுகள் வழங்கப்படும்
V.I.P Sarl 4 Rue Ernest Prévost,
93300 Aubervillers. Tél : 07 52 94 50 65

ஒரே தடவையில் தீர்த்துக் கொள்ளுங்கள்!
உணவகங்கள் – கடைகள் – தொழிற்சாலைகள் போன்றவற்றில்


- எலிகள் - சுண்டெலிகள்
- கரப்பான் பூச்சிகள்
- தொல்லைகொடுக்கும் பூச்சிகள்
அனைத்திற்கும் சிறந்தவல்லுனர்கள் மூலம் ஒரே தடவையில் பயன்பெற்றிட நாடுங்கள்
14 Rue Charles V,
75004 Paris.
DIAPHANECONCEPT
அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனம்
N° de certificat 10KX50000-4107
Tél.: 01 60 07 34 29
சுதா / விமல் : 06 34 18 80 04


தன இலட்சுமி மஹால்
(La Courneuve - France)
சுவர்ண மஹால்
SWARNA MAHAL
நகைச்சேமிப்புத்திட்டம் (2015) யூன் முதல் ஆரம்பம்
ஓடர் நகைகள் உத்தரவாதத்துடன் குறுகியகால இடைவெளியில் தரமாகச் செய்து கொடுக்கப்படும். பொன்னுருக்கல், தோடு குத்துதல், சிறப்பாக நடாத்தப்படும் நவரத்தினக் கற்கள் பதித்த மோதிரங்கள் உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்
122 Av Paul Vaillant Couturier 93120 La Courneuve
Tél - 01 48 36 40 75 Port - 06 50 17 51 91 / 06 21 23 87 25
Email: swarnamahal93120@gmail.com

கபறினா இறைச்சிக்கடை
தினமும் உடன் இறைச்சி வகைகளையும், விசேடமாக ஆட்டிறைச்சிப் பங்கையும் பெற்றுக்கொள்ள...

BOUCHERIE GABARINA
62, Rue Louis Blanc
75010 Paris
Mo : La Chapelle Ou Gare du Nord
Tel : 01 40 34 05 35
Fax : 01 40 34 09 76
207, rue fbg st Denis
75010 Paris
Tel : 01 46 07 46 35
Fax : 01 46 07 41 30

Fédération des Syndicats Interprofessionnels Autonomes
Libre et Indépendant
உங்கள் வேலையிடத்தில் பிரச்சனையா?
உங்களுக்கு அலுவலகப் பிரச்சனையா?
அனைத்திற்கும் நாம் தீர்வைப் பெற்றுத்தருவோம்...
இடம் பெயர்ந்த சட்டரீதியான மொழிபெயர்ப்புச் சேவைகளும் உண்டு
திங்கள் முதல் வெள்ளிவரை
14h00 - 18h00
தொடர்புக்கு : கமிலஸ்
22 Rue Perdonnet, 75010 Paris / Port: 06 51 91 08 85 / Fax: 09 59 25 39 67
E-mail: veenaphone@yahoo.fr / Metro: La Chapelle ou Gare du Nord

Ayngaran Store
Sigue MONEY TRANSFER
Drancy RERக்கு அருகாமையில், அனைத்து வகையான மளிகைப் பொருட்களுக்கும் மற்றும் துரித பணமாற்றுச் சேவைக்கும் நாடுங்கள்
MoneyGram. Money Transfer
13, Rue Morin, 93700 Drancy, France Tél: 09 52 64 23 72